# அனல் மின்நிலையம் குறித்த தகவல் கையேடு

-அனல் மின்நிலைய கண்காணிப்பகத்தின் முன் முயற்சி

குடிமக்கள் நுகர்வோர் மற்றும் குடியுரிமை செயல்பாட்டுக் குழு (CAG)
9/5, இரண்டாவது தெரு, பத்மநாபா நகர், அடையாறு, சென்னை 600 020.
இணைய தளம் www.cag.org.in

அனல் மின்நிலைய கண்காணிப்பு என்பது குடிமக்கள் நுகர்வோர் மற்றும் குடியுரிமை செயல்பாட்டுக் குழுவின் ஒரு செயல்பாடு. தென் இந்தியாவிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான பணிகளில் உள்ளூர் சமூகங்களை திறன்பட பங்கு பெற செய்வது இதன் நோக்கம். மேலும் விவரங்கள் அறிய www.thermalwatch.org.in என்ற இணையதளத்திற்கு வருகை தருக.

## உள்ளடக்கம்




| எண் | | தலைப்பு |
|---|---|---|
| 1 | | அனல் மின்நிலையங்கள் |
| | 1.1. | அறிமுகம் |
| | 1.2. | நிலக்கரி மற்றும் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையங்கள் |
| | 1.3. | சுற்றுச்சூழல் அனுமதிக்கான நடைமுறைகள் |
| 2 | | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு பணிகளில் சமூகங்களை பலப்படுத்துவது |
| | 2.1 | பொது கலந்தாய்வில் சிறப்பான பங்கேற்பு |
| | 2.2. | குறித்த நேரத்தில் தலையீடுகள் |
| | 2.3. | குறிப்பிடத்தக்க வழக்குகள் மற்றும் தீர்ப்புகள் |
| | 2.4. | அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் |
| | 2.5. | குறிப்பிடத்தகுந்த தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவுகள் |
| | 2.6 | மத்திய அரசின் வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முக்கியமான சுற்றறிக்கைகள் |
| | 2.7 | தகவலறியும் உரிமை சட்டம் - பயன்பாடு |
| 3 | | புதுப்பித்துக் கொள்ளக்கூடிய மின் சக்திக்கு மாற்றம் |
| | | பின் இணைப்புகள் |
| | அ. | படிவம் 1 - வடிவம் |
| | ஆ. | செயல் வரம்பு படிவம் (ToR) |
| | இ. | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடு தொகுப்பு படிவம் |

# சுருக்கக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| 1 | EC | சுற்றுச்சூழல் அனுமதி |
| 2 | MoEF | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு |
| 3 | MoEF | சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் |
| 4 | SEIAA | மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அதிகார அமைப்பு |
| 5 | EAC | நிபுணர் மதிப்பீட்டுக் குழு |
| 6 | SEAC | மாநில நிபுணர் மதிப்பீட்டுக் குழு |
| 7 | NGT | தேசிய பசுமைத் தீர்ப்பாயம் |
| 8 | TOR | செயல் வரம்புகள் |
| 9 | SPCB | மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் |
| 10 | FC | வனத்துறை அனுமதி |
| 11 | CRZ | கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் |
| 12 | RTI | தகவலறியும் உரிமை |
| 13 | PIO | பொதுத் தகவல் அதிகாரி |
| 14 | AA | முறையீட்டு அதிகாரி |
| 15 | CIC | மத்திய தகவல் ஆணையம் |
| 16 | SIC | மாநிலத் தகவல் ஆணையம் |
| 17 | RE | புதுப்பிக்கக்கூடிய மின்சக்தி |

# 1. அனல் மின்நிலையங்கள்


## 1.1 அறிமுகம்




மின்சாரமானது நிலக்கரி, எண்ணெய், நீர், அணு, சூரிய ஒளி, தாவரக் கழிவுகள், கரியமில வாயுக்கள் போன்ற பல்வேறு வகைப்பட்ட ஆற்றல் மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இவற்றில் நிலக்கரி, வாயு, டீசல் மற்றும் நாப்தா போன்ற வெப்ப ஆதாரங்களை சார்ந்து இயங்கும் மின் நிலையங்கள் அனல்மின் நிலையங்கள் (Thermal Power Plants) என அழைக்கப்படுகின்றன. புதுப்பிக்கத்தக்க மின்சக்தியானது, வருங்காலங்களில் அதிகமாக பயன்பாட்டிற்கு வந்தாலும் வெப்ப ஆதாரங்கள் மீதான சார்புத் தன்மை, குறிப்பாக நிலக்கரியின் மீதான சார்புத் தன்மை குறைக்கப்பட வேண்டும். எனினும், எதிர்கால மின்சார தேவையை பூர்த்தி செய்வதில் அவை முக்கியப் பங்கு ஆற்றும். அனல் மின் நிலையங்கள் எவ்வாறு நிறுவப்படுகின்றன, இயக்கப்படுகின்றன என்று அறிந்தால், அவைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தை பற்றி புரிந்து கொள்ளலாம்.

சென்ற 2013 ஆண்டின்படி, இந்தியாவின் நிகர மின் உற்பத்தி திறன் 2,25793.10 மெகாவாட்டாகும். இதில் பெரும் பங்கானது, வெப்ப ஆதாரங்களிலிருந்து பெற்றதாகும். அனல் மின் நிலையங்களால் நிறுவப்பட்ட திறன் 153847.99 மெகாவாட்டாகும் (68%) நீர் மின் உற்பத்தி திறன் 36,623.40 மெகாவாட்டும் (18%) மற்றும் நிறுவப்பட்ட அணு மின் திறன் 4,780 மெகாவாட்டாகும் (2%). புதுப்பிக்கத்தக்க மின்சக்தியின் நிறுவப்பட்ட பங்கானது, 27, 541.71 மெகாவாட் ஆகும்.1

நிலக்கரி சுரங்கங்களும், நிலக்கரி பயன்பாடும் சுற்றுச்சூழல் மீது மிகப் பெரிய தாக்கங்களை ஏற்படுத்துபவையாகும். நிலக்கரியை மையமாகக் கொண்டு செயல்படும் அனல் மின்நிலையங்கள், கரியமில வாயு, சல்பர் மற்றும் மெர்குரி போன்ற வெளிப்பாடுகளின் ஆதாரங்களாக உள்ளன. இதை சீர் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடில், அனல் மின் நிலையங்கள் நிலம், நீர், காற்று போன்றவற்றை மாசுபடுத்துவதோடு பன்முகத் தன்மையுடைய உயிர்ச்சூழலையும் வாழ்வாதாரங்களையும் பாதிக்கும். பாதுகாவல் செயல்பாட்டு அறக்கட்டளை மற்றும் கிரீன் பீஸ இந்தியா ஆகிய அமைப்புகள் இந்தியாவின் அனல் மின் நிலையங்களும், நகர்ப்புற ஒளி வெளிப்பாடுகளும், 2011-12 ஆம் ஆண்டில் ஏற்படுத்தியுள்ள மரணங்களும்,




1 http://powermin.nic.in/indian_electricity_scenario/introduction.htm

நோய்களும் பற்றிய ஆய்வின் மதிப்பீட்டின்படி 80,000-1,15,000 குழந்தைகள் முதிரா நிலை மரணத்தைத் (Pre-matured deaths) தழுவியுள்ளனர். 20 கோடி பேர் சுவாச அழற்சி நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதனால் பொது மக்களுக்கும் அரசுக்கும் கிட்டத்தட்ட ரூ.16,000-23,000 கோடி ($3000-$3833 மில்லியன்) இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடானது அனைத்து எரிசக்தி ஆதார மின்நிலையங்களுக்குப் பொதுவானதாக இருந்தாலும், தாக்க குறைப்பு குறித்த பரிந்துரைகள், வழி முறைகள், சிறந்த மக்கள் பங்கேற்பிற்கான தகவல்கள் இவற்றை பொறுத்த மட்டில், நிலக்கரியை பயன்படுத்தும் அனல் மின்நிலையங்களே இந்த புத்தகத்தில் மையப்படுத்தப்பட்டுள்ளன. ஏனெனில், நிலக்கரிதான் மிகவும் மாசுபடுத்தக் கூடிய எரி பொருளாகும்.

## 1.2 நிலக்கரி மற்றும் நிலக்கரியை அடிப்படியாகக் கொண்ட அனல் மின்நிலையங்கள்

1.2.1. நிலக்கரி மற்றும் அதன் தன்மைகள்

1.2.2. நிலக்கரி சார்ந்து இயங்கும் அனல் மின்நிலையங்களில் மின்சார உற்பத்தி

1.2.3. நிலக்கரி அனல் மின்நிலையங்கள் ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் மற்றும் மக்களின் நலம் மீதானத் தாக்கங்கள்

### 1.2.1. நிலக்கரி மற்றும் அதன் தன்மைகள்

பொதுவாக நிலக்கரியானது அதன் தன்மைகள், நிலை மற்றும் அவற்றின் தரத்தின் அடிப்படையில் மூன்று வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை மட்கரி (anthrate), நிலக்கீல் (Bituminous) மற்றும் பழுப்பு நிலக்கரி (Lignite) மட்கரியானது, நிலக்கரியிலேயே மிகவும் வயதான தன்மையை கொண்டது. நிலக்கீல் என்பது மிகவும் மென்மையானது மற்றும் பழுப்பு நிலக்கரியை விடத் தரம் உயர்ந்தது. ஆனால், மட்கரியைவிட தரம் குறைந்தது. பழுப்பு நிலக்கரியின் வயது மிகவும் குறைவானதாகும். மட்கரி மிகவும் கடினத் தன்மையுடையது. அதிலுள்ள கரியமிலம் மிகக் குறைவாகவே தீப்பற்றும் தன்மையுடையது மற்றும் ஈரமற்றது. பழுப்பு நிலக்கரியானது மிகவும் மென்மையானது. ஆனால், அதில் எளிதில் தீப்பற்றக்கூடிய ஈரத்தன்மையுள்ள கரியமிலம் உள்ளது.

#### a) நிலைத்த கரி

நிலக்கரித்தூளை சூடுப்படுத்தும்போது அதில் வெடிக்கக்கூடிய திடக்கழிவாக இருப்பதே நிலைத்த கரியாகும். நிலக்கரியை எரிவூட்ட அதிலுள்ள ஆவியாகும் பொருள் வெளித்தள்ளப்பட்டிருக்கும். நிலைத்த கரியின் உள்ளடக்கத்தைக் கணக்கீடு செய்ய வேண்டுமெனில், கொடுக்கப்பட்ட மாதிரியில் உள்ள ஈரத்தின் விகிதம், ஆவியாகும் பொருளின் விகிதம், சாம்பலின் விகிதம் ஆகியவற்றை மாதிரியின் விகிதத்தில் கழித்தால் மிஞ்சுவது நிலைத்த கரி எனும் திடப் பொருளாகும். நிலைத்த கரியானது நிலக்கரி எரிக்கப்படும்போது ஆவியாகும் பொருள் வெளியேற்றப்பட்டவுடன் மீதமாக இருப்பது மற்றும் ஊகத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் சூட்டின் அளவாகும்.

### b) விரைந்து ஆவியாகின்ற கசிப்பொருள்

நிலக்கரியில் உள்ள எரிவாயுக்களான மீத்தேன், ஹைட்ரோ கார்பன், ஹைட்ரஜன் மற்றும் கார்பன் மோனக்சைடு மற்றும் எரிதன்மையற்ற கார்பன் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆகியவையே விரைந்து ஆவியாகும் கசிப்பொருட்களாகும். கரியின் எரித்தன்மையானது, அதிகமான கசிப்பொருள் இருந்தால் அதிக ஜுவாலையுடன் பற்றி எரியும்.

### c) சாம்பல்

சாம்பல் எரிக்கப்பட முடியாதது. மேலும் அது நிலக்கரியின் எரி திறனை குறைப்பதால் நிலக்கரியின் எரி தன்மையும், கொதி திறனும் பாதிக்கப்படும். இதனால் கொதிகலனில் கண கண என சத்தம் உருவாகுவதுடன், நிலக்கரியைக் கையாள்வதற்கு கூடுதல் செலவாகிறது. அனல் மின் நிலையங்களில் அதிக சாம்பல் உள்ள நிலக்கரி பொதுவாகத் தேர்வு செய்யப்படுவதில்லை.

### d) ஈரப்பதத்தின் அளவு

நிலக்கரியின் ஈரத்தன்மை அதனுடைய ஒவ்வொரு கிலோவிற்குமான வெப்ப தன்மையை குறைக்கின்றது. அதனால் எரி தன்மையுடைய கூறுகள் குறைகின்றன. எனவே ஈரப்பதமானது விரும்பத்தக்க ஆற்றல் வரிசையில் இருக்க வேண்டும்.

### e) சல்பர்

நிலக்கரியிலுள்ள சல்பர், அனல் மின் நிலையங்களிலுள்ள புகைபோக்கி, எரிவாயு கலன்கள் மற்றும் எரிபொருள் வெப்பத்தை மிச்சப்படுத்தும் இயந்திர அமைவுகளை துருப்பிடிக்க வைப்பதால், இந்த அமைவுகளின் ஆயுட்காலம் குறைகிறது. எனவே, நிலக்கரியில் உள்ள சல்பர் அளவு மிக முக்கியமானது.

### இந்தியாவில் கிடைக்கும் நிலக்கரியின் தரம் மற்றும் எளிதில் கிடைக்கும் தன்மை

நிலக்கரியின் வெப்பத்தன்மை / சூட்டின் தன்மையைப் பொறுத்து அதை சுட்ட நிலக்கரி மற்றும் சுடாத நிலக்கரி என்று வகைப்படுத்துகின்றனர். சுட்ட நிலக்கரியானது, தேனிரும்பு தொழிற்சாலை, சிமெண்ட், இரும்பு மற்றும் உலோகத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் கிடைக்கும் நிலக்கரி ஆதாரங்களில் பெரும்பாலானவை சுடாத நிலக்கரி வகையைச் சேர்ந்ததாகும். நிலக்கரி ஏழு தரங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. (A to G) இவை, சிமெண்ட், உரம் மற்றும் தேனிரும்பு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவின் நிலக்கரி சுரங்கங்களில் D, E, F, G வகை நிலக்கரிகளே உள்ளன. அவை தரத்தில் குறைந்தவை. அவையே அனல் மின்நிலையங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.[2] மின் உற்பத்தி நிலையங்களில் பழுப்பு நிலக்கரி பயன்படுத்துவது பொருத்தமானதாக கருதப்படுகிறது. ஏனெனில், அதில் சாம்பல் தன்மை மிகவும் குறைவாக உள்ளது. கோல் இந்தியா லிமிடெட் என்ற பொதுத்துறை நிறுவனமானது. தேசியமயமாக்கப்பட்ட சுரங்கங்களிலிருந்து, ஒப்பந்த அடிப்படையில், அனல் மின்நிலையங்களுக்கு நிலக்கரி விநியோகம் செய்கின்றது.

---

2 http://www.productivity.in/knowledgebase/Energy%20Management/c.%20Thermal%20Energy%20systems/4.1%20Fuels%20and%20Combustion/4.1.3%20Properties%20of%20Coals.pdf

## கரியின் வெப்பத்தன்மை அடிப்படையில் தரவரிசை செய்யப்பட்டுள்ள கரியின் பயன்பாடு

| தரவரிசை | வெப்பத்தன்மை மதிப்பு (ink Cal / kl) | சாம்பல்தன்மை1 |
|---|---|---|
| A | 6200 Above | |
| B | 5600 – 6200 | 19.50% to 24% |
| C | 4940 – 5600 | 24% to 28.70% |
| D | 4200 – 4940 | 28.70% to 34% |
| E | 3360 – 4200 | Above 34% to 40%. |
| F | 2400 – 3360 | Above 40% to 47% |
| G | 1300 – 2400 | |


பொதுவாக D, E, F தரவரிசையுடைய நிலக்கரி, இந்திய அனல் மின்நிலையங்களுக்கு இந்திய நிலக்கரி நிறுவனத்திடமிருந்து அனுப்பப்படுகிறது.

இந்திய நிலக்கரி, குறைந்த தரம், குறைந்த வெப்பத்தன்மை மற்றும் அதிக சாம்பல் தன்மையுடன் உள்ளது.

- சாம்பல் அளவு 40-50 சதவிகிதம் உள்ளது.
- ஈரப்பதம் 4-20 சதவிகிதம் உள்ளது.
- சல்பர் அளவு 0.2-0.7 சதவிகிதம் உள்ளது.
- ஒவ்வொரு கிலோவிற்கும் 2500-500 கிலோ கேலரி அளவிற்கு ஒட்டுமொத்த வெப்பத் தன்மையின் மதிப்பு உள்ளது.
- ஆவியாகும் கசிபொருளின் அளவு 18-25 சதவிகிதம் உள்ளது.

இந்தியாவின் நிலக்கரியின் தாழ்தரத்தை மேலே சொல்லப்பட்ட காரணக்கூறுகள் சுட்டிக் காட்டுகின்றன. இத்தகைய காரணங்களால் இந்திய அனல் மின்நிலையங்கள், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவை விட கூடுதலாக நிலக்கரியை, ஒரே மாதிரியான உற்பத்திக்குப் பயன்படுத்துகின்றன.[3]

### 1.2.2. நிலக்கரியானது, மின் சக்தியாக மாற்றப்பட மூன்று நிலைகள் உள்ளன.




ஆதாரம் Canadian Clean Power Coalition

3 Performance Review of Thermal Power Stations 2004-05 Section 14 Page no. 14.1 , section-14, Environmental aspects in power sector

கொதி உலைகலன் கொதிகலனில் நிலக்கரி எரிக்கப்பட்டு அனல் / வெப்பம் உண்டாகிறது. நிலக்கரியில் உள்ள கார்பனும், காற்றில் உள்ள ஆக்ஸிஜனும் (பிராண வாயு) இணைந்து கார்பன் டை ஆக்ஸைடு அல்லது கரியமில வாயு உண்டாகிறது.

கொதிகலன் கொதிகலனில் உள்ள தண்ணீர் கொதி உலைகளில் உற்பத்தியான வெப்பத்தால் சூடாக்கப்பட்டு நீராவியாக்கப்படுகிறது. இது அதிகமான அழுத்தத்திலும் உஷ்ணத்திலும் நடைபெறுகிறது.

நீராவி விசையாழி மற்றும் மின் ஆற்றல் உண்டாக்கும் இயந்திரம் நீராவி விசையாழிக்குள் நீராவி அனுப்பப்பட்டு, அதிலுள்ள பிளேடுகளை சுழற்றும்போது, இயந்திர விசை உண்டாகிறது. மீண்டும் நீராவியானது, நீராக மாற்றப்பட்டு, கொதி கலனுக்கு அனுப்பப்பட்டு இந்த சுழற்சி தொடர்கிறது. நீராவி விசையாழி சுழலும் போது, மின் ஆற்றல் உண்டாக்கும் இயந்திரத்தின் சுழலி சுழற்றப்பட்டு, மின் சக்தி உருவாக்கப்படுகிறது.

### செயல்முறை விளக்கம்

நிலக்கரி அனல் மின்நிலையத்தில், முதலின் நிலக்கரி எரிக்கப்பட்டு, வெப்பம் உருவாக்கப்பட்டு, கொதிகலனில் செலுத்தப்பட்டு நீராவி உண்டாகிறது. இந்த நீராவியானது மின் விசையாழியை சுழற்றுவதன் மூலமாக, மின் ஆற்றல் உண்டாக்கும் இயந்திரத்தின் சுழலியை சுற்றுகிறது. இதன் மூலம் மின்சாரம் உண்டாகிறது.

இந்த செயல்முறையின்போது, கரியைத் தயார் செய்வது, தேவையான காற்றை தொடர்ந்து அனுப்பி, கரியின் எரிதன்மையை அதிகப்படுத்துவது, நீராவி உற்பத்தி, குளிராக்கப்பட்ட தண்ணீர் மறு சுழற்சி செய்தல், கசடுகளை அகற்றுதல் (சாம்பல் மற்றும் வாயுக்கள்) போன்ற நடவடிக்கைகள் கையாளப்படுகின்றன.

### கரியை தயார் செய்வது

நிலக்கரி வளாகம் - நிலக்கரி சேமிப்பகம் - நிலக்கரியை தூள் செய்யும் இயந்திரம்

நிலக்கரியை தூள் செய்யும் இயந்திரத்தில், நிலக்கரி நன்றாக பொடியாக்கப்பட்டு எரிதிறன் அதிகரிக்கப்படுகிறது. நிலக்கரியில் உள்ள ஈரம் உலர்த்தப்பட சூடான காற்றானது காற்றாடிகள் மூலம் அனுப்பும் பொழுது சூடான காற்றோடு பொடிக்கப்பட்ட கரித்துகளும் கொதி கலனுக்கு அனுப்பப்பட்டு, கரித்துகள்கள் எரிக்கப்படுகிறது.

### கொதிகலனின் உள்ளே

அனல் மின்நிலையத்தில் கொதி உலைகலன் ஒரு முக்கியமான சாதனமாகும் / கருவியாகும். அது நிலக்கரியை எரித்து வெப்பத்தை உண்டாக்கி, கொதி உலைகலனில் இருக்கும் தண்ணீரை சூடேற்றி, நீராவியை உண்டாக்குகிறது.

### செயல்முறை 1 - எரிதல் (தீயின் எரிப்பாற்றல்)

கொதி உலைகலனில், காற்றாழி விசை மூலம் வரும் வெப்பக் காற்று செலுத்தப்பட்டு, நிலக்கரி எரிக்கப்படுகிறது. பின் வளிமண்டலத்தில் உள்ள காற்று, இழுவை காற்றாடி மூலம் வேகமாக

இழுக்கப்பட்டு, உலைகலனில் அனுப்பப்படுகிறது. வெப்பக்கலன்கள், காற்றை உஷ்ணப்படுத்தி நிலக்கரி துகளின் எரிப்பாற்றலை அதிகமாக்குகின்றன.

வெப்பம், சாம்பல், தும்புத்தூசு வாயுக்கள் ஆகியவை கரித்தூள் எரிக்கப்படும்போது உபபொருட்களாக உற்பத்தி செய்யப்படுகின்றன. வெப்பமானது நீரை நீராவியாக்கி, காற்று விசையாழியை இயக்குகிறது. தூசு வாயுக்கள், படிமங்களாக்கப்பட்டு தூண்டப்பட்ட இழுவை காற்றாடி மூலமாக வெளியேற்றப்பட்டு, சாம்பலை படியச் செய்யும் நிலைமின் படிம கருவியால் ஈர்க்கப்படுகிறது. பிறகு சாம்பல் படிமங்கள் வடிக்கப்பட்ட தூசுக் காற்றானது புகைபோக்கி வழியாக வெளியேற்றப்படுகிறது. புகை போக்கிகள் மிக உயரமாக அமைக்கப்பட்டிருப்பதால், துகள் வெளிப்பாடுகள் நிலமட்ட அடர்த்தியை பாதிக்காது. மிகப்பெரிய அனல் மின்நிலையங்களின் புகைபோக்கியின் உயரம் 250-280 மீட்டராகும். நிலக்கரியின் உள்ளார்ந்த மற்றுமொரு பொருள் சாம்பலாகும். எரி உலையில் 15 சதவிகித சாம்பல் சேகரிக்கப்படுகிறது. மீதமுள்ளவை நிலை மின்படிவ கருவியால் ஈர்க்கப்படுகிறது. கொதிகலன்களின் உள்ளது அடி சாம்பல் என்றும் மற்றது பறக்கும் சாம்பல் என்றும் வகைப்படுத்தப்படுகிறது.

### செயல்முறை 2 - நீராவி உற்பத்தி

தண்ணீரானது, உயர் அழுத்தத்தில் தொடர்ந்து கொதிகலனுக்கு நீர் செலுத்தும் விசைகருவி மூலம் அனுப்பப்படுகிறது. இந்த தண்ணீர் மீண்டும் சுழற்சி செய்யப்பட்டு, ஏற்கனவே சூடாக்கப்பட்ட தண்ணீர் ஆகும். எனவே, தண்ணீரின் எரிசக்தி திறன் அதிகரிக்கப்பட்டு நீராவியாக, நிலக்கரியின் எரிசக்தி திறனைக் கூட்டத் தேவையான வெப்ப தேவையை குறைக்கிறது. வெப்பத்தை மிச்சப்படுத்த இயந்திர அமைவின் மூலம் கொதிகலனிற்கு அனுப்பப்படும் தண்ணீர் சூடாக்கப்படுகிறது. கொதிகலனில் வெளியேறும் சூடான வாயுக்கள், வெப்ப சேமிப்பு இயந்திரத்தில் செலுத்தப்பட்டு தண்ணீர் சூடாக்கப்படுகிறது. இந்த சுடுநீரானது, எரி உலையைச் சுற்றியுள்ள தண்ணீர் சுவர்களில் செலுத்தப்பட்டு, நீராவியாக மாற்றப்படுகிறது.

நீராவியானது ஒரு கலனில் சேகரிக்கப்படுகிறது. அங்கிருந்து அது அதிக வெப்ப கம்பி சுருளுக்கு அனுப்பப்படுகிறது. இந்த இடத்தில் அனுப்பி வைக்கப்படும் நீராவியின் அழுத்தமும் உஷ்ணமும் அதிகரிக்கப்படுவதால், மிகச் சூடான நீராவியானது மின்சார விசையாழிக்குள் செலுத்தப்படுகிறது.

## 1.2.3. நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்நிலையங்களினால் ஏற்படுக் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத் தாக்கங்கள்

நிலக்கரியை கழுவிட பயன்படுத்தப்படும் நீரானது, நீர் நிலைகளில் நேரடியாக விடப்பட்டால் நீர்நிலைகள் அசுத்தமாக்கும். அனல் மின்நிலையங்களிலிருந்து பறக்கும் எரி சாம்பல், நிலத்தில் விழும்போது மண்ணை மாசுபடுத்தும். மின்நிலையங்களிலிருந்து வெளியிடப்படும் காற்றில், சல்பர் டை ஆக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடுகள், துகள் பொருட்கள், கார்பன் மோனாக்சைடு, கரையக்கூடிய திடப்பொருள் கூறுகள் போன்ற மாசுக்களும், பாதரசம் போன்ற மற்ற உலோகங்களும் உள்ளதால், உள்ளூர் மக்களின் சுகாதாரத்தையும், நலத்தையும் பாதிக்கும்.

சுற்றுச்சூழல் பாதிப்புகள் அவற்றின் தன்மை மற்றும் சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தப்படும் தாக்கங்களின் அடிப்படையில் நான்காக பிரிக்கப்பட்டுள்ளன.

| காற்று | நீர் | மண் / நிலம் மாசாகுதல் | சமூக பொருளாதார பாதிப்பு |
|---|---|---|---|
| மனிதர்களின் சுவாச மண்டலத்தின் மீது எதிர்மறை பாதிப்புகளை உருவாக்கும்<br>தாவரங்களின் வளர்ச்சியைப் பாதிக்கும்<br>வரலாற்று சின்னங்கள் மற்றும் கட்டிடங்கள் பாதிக்கப்படலாம்<br>கால நிலை மாற்றத்தை உருவாக்கலாம் | நீரின் தரத்தைப் பாதிக்கும். மனிதனின் நுகர்வுக்கான அளவையும் குறைத்துவிடும்<br>பயிரிடுவதற்கு வாய்ப்பு குறையும் ஏனெனில், விவசாயத்திற்கு கிடைக்கும் தண்ணீரின் அளவு குறைந்துவிடும்<br>சூடான கொதிநீர் கடலில் கொட்டப்படுவதால், மீன்கள் கொல்லப்பட்டோ அல்லது கடல் மீன்கள் இடம் பெயர்ந்து விடுவதாலோ மீன்பிடிப்பு பாதிக்கும் | மண்ணில் காரத்தன்மை அதிகமாவதால் பயிரிடுதல் குறைந்துவிடும் | மறுகுடியமர்வுக்கும், மறுவாழ்வு அளிப்பதற்கும் இட்டுச் செல்லும்<br>உள்ளூர் குடியுரிமை வசதிகளான பள்ளிகள், கிணறுகளை மற்றும் இதரவற்றையும் பாதிக்கும்<br>விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும்<br>அபாயகரமான பணிச் சூழலினால் விபத்துகள் அதிகரிக்க வாய்ப்புண்டு |

நேரடியான தாக்கம்: உதாரணமாக, மின் நிலையத்திலிருந்து வெளியிடப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் ஆற்றிலோ அல்லது கடலிலோ விடப்படுவதால் அவற்றில் வாழும் உயிரினங்களின் வாழ்வு பாதிக்கப்படும்.

மறைமுகமான தாக்கம்: மின் நிலையத்திலிருந்து சல்பர் டை ஆக்ஸைடு ($SO2$) மணலில் சல்பேட்டாக ($SO4$) விழுவதால் விவசாயம் பாதிக்கப்படும்.

மொத்த பாதிப்பு : உதாரணமாக அனைத்து செயல்படுகின்ற மற்றும் வரவிருக்கின்ற திட்டங்களினால் ஏற்படும் பாதிப்பு

சுரண்டப்படுகின்ற பாதிப்பு : அனல் மின்நிலையமானது, இருக்கின்ற இயற்கை வளங்களான நீர், நிலம் மற்றும் காற்று ஆகியவற்றினை பயன்படுத்தி செயல்படுவதால், நிலப் பயன்பாட்டு முறைகளிலும், அந்தப் பகுதியிலுள்ள மக்களும், இம்மாதிரியான மாற்றங்களினால் பாதிக்கப்படுகின்றனர்.

## சுற்றுச்சூழல் பாதிப்புகள்

1. காற்று மாசுக்குள்ளாக்குதல்

நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின்நிலையத்திலிருந்து, வெளியிடப்படும் வெவ்வேறு மாசுக்கள் காற்றில் விடப்படுகின்றன. அவற்றில் சல்பர் டை ஆக்ஸைடு ($SO2$), கார்பன் மோனா ஆக்ஸைடு ($CO$), நைட்ரஜன் ஆக்ஸைடு ($NOX$), ஓசோன் ஆக்ஸைடு ($O3$) வெளியிடப்படும் தூசு / துகள்கள் மற்றும் காரீயம் (Particulate matter) மீதேன் அல்லாத ஹைடிரோ கார்பன்கள் (Non-Methane Hydrocarbons) வெளியிடப்படுகின்றன.

எந்த சுட்டெரிக்கும் நடவடிக்கையும் 1500 டிகிரி சென்டிகிரேட்டிற்கு மேல் அதிகமாகும் பொழுது நைட்ரஜன் ஆக்ஸைடு உற்பத்தியாவதற்கு வழி வகுக்கிறது. எரிபொருளில் உள்ள நைட்ரஜன் மற்றும் காற்றிலுள்ள ஆக்ஸிஜன் எரிக்கப்படும்போது இவை உருவாகும். எரிக்கப்படும்போதுள்ள

வெப்பத்தின் அளவு கூடும்போது, நைட்ரஜன் ஆக்ஸைடு உருவாவதும் கூடும். கூடுதலாக, முக்கிய பசுமை இல்ல வாயுக்கான கார்பன் ஆக்ஸைடு வாயு மண்டலத்திலுள்ள ஆக்ஸிஜனுடன் கலக்கும்போது கார்பன் டை ஆக்ஸைடும் ($CO_2$) நைட்ரஜன் ஆக்ஸைடு வாயு மண்டலத்திலுள்ள ஆக்ஸிஜனுடன் கலக்கும்போது நைட்ரஸஆக்ஸைடும் ($N_2O$) உருவாகின்றன். அதேபோன்று, சல்பர் ஆக்ஸைடு ($SO_X$) எரிபொருளிலுள்ள சல்பர் மற்றும் காற்றிலுள்ள ஆக்ஸிஜனும் இணைந்த கலவையாகும். நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின்நிலையங்களிலிருந்து வெளியிடப்படும் ஒரு சாதாரண மாசு சல்பர் டை ஆக்ஸைடு ஆகும். சில நேரங்களில் மிகையான ஆக்ஸிஜனால் சல்பர் ஆக்ஸைடும் ($SO_3$) உருவாகும்போது, வாயு மண்டலத்திலுள்ள நீருடன் கலந்து அமில மழை பெய்ய காரணமாகும். அனல் மின்நிலையங்களிலிருந்து வெளி வரும் துகள் பொருட்களில் பெரும்பாலும் கரித்தூள்கள், புகை மற்றும் தூசுப் பொருட்கள் இருக்கும். இவை ஆஸ்துமாவையும், சுவாச மண்டல நோயையும் உருவாக்கும்.

2. நீர்மாசு

அனல் மின்நிலையத்தில் நீரானது நிலக்கரியை கழுவுவதற்கும், கொதிகலனில் சுழற்சிக்கு விடப்படுவதற்கும், கருவியை குளிர்விக்கவும் பயன்படுத்தப்படுகிறது. நிலக்கரியை கழுவிய நீரிலுள்ள தூசு, நிலத்தடி நீரை மாசுபடுத்துகிறது. கொதிகலனில் சுழற்சிக்கு பயன்படும் சூடான நீர், நீர் நிலைகளில் போதியளவிற்கு குளிர்விக்கப்பாடமல் வெளியிடப்படும்போது நீர் நிலைகளின் தட்பவெப்ப அளவை உயர்த்தி, கடல் தாவரம் மற்றும் உயிரினத்தை பாதிக்கிறது.

3. நிலம் பாழாவது

நிலக்கரி அனல் மின்நிலையங்களிலிருந்து, வெளியிடப்படும் சுத்திகரிக்கப்படாத காற்றும் மற்றும் நீரின் மாசுக்கள், அருகிலுள்ள பகுதிகளிலுள்ள நீர் மற்றும் தாவர உயிரினங்களைப் பாதித்து வாழ்வதற்கும் அல்லது வாழ்வாதார நடவடிக்கைகளுக்கும் இப்பகுதியைத் தகுதியற்றதாக்கும்.

4. சுகாதார பாதிப்புக்கள் [4]

| இரசாயன மாசுக்கள் | சுகாதார பாதிப்புக்கள் |
|---|---|
| சல்பர் டை ஆக்சைடு | ▪ சுவாச மண்டலத்தையும், நுரையீரலின் செயல்பாட்டையும் பாதிக்கும்<br>▪ ஆஸ்துமா மற்றும் நாள்பட்ட மார்புச்சளி நோயை ஏற்படுத்தும்<br>▪ கண் எரிச்சலை ஏற்படுத்தும்<br>▪ இருதய நோயையும் ஏற்படுத்தும் |

4 http://www.env-health.org/IMG/pdf/heal report the unpaid health bill how coal power plants make us sick final.pdf

| இரசாயன மாசுக்கள் | சுகாதார பாதிப்புக்கள் |
|---|---|
| நைட்ரஸ் ஆக்சைடுகள் | ▪ ஆஸ்துமாவை ஏற்படுத்தும்<br>▪ நாள்பட்ட சுவாசமண்டல தடை நோயை உருவாக்கும் நுரையீரல் வளர்ச்சியை முடக்கும்<br>▪ இதய நோயை ஏற்படுத்தும் |
| துகள் பொருட்கள் (PM) கரடுமுரடான துகள்கள் (PM10) செழுமையான துகள்கள்(PM 2.5) | ▪ ஆஸ்துமாவை ஏற்படுத்தும்<br>▪ நாள்பட்ட சுவாசமண்டலத்தின் தடை நோயை ஏற்படுத்தும்<br>▪ நுரையீரல் வளர்ச்சியை முடக்கும்<br>▪ நுரையீரல் புற்றுநோயை ஏற்படுத்தும்<br>▪ இருதய நோயை ஏற்படுத்தும்<br>▪ இருதயத்தில் நெருக்கடி ஏற்படுத்தி அதன் இயக்கம் நின்றிட வழிவகுக்கும் |
| அமோனியா | ▪ சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும்<br>▪ தோல் மற்றும் கண்களில் எரிச்சலை ஏற்படுத்தும் |
| ஹைடிரஜன் குளோரைடு மற்றும் புளோரைடு | ▪ தோல், கண்கள், மூக்கு, தொண்டை மற்றும் சுவாசப் பாதைகளில் எரிச்சலை ஏற்படுத்தும் |
| டை ஆக்சிஜன்கள் மற்றும் ஃபூரன் | ▪ வயிற்றுப் புற்றுநோய் வரலாம்<br>▪ இனப்பெருக்கம், நாளமில்லா சுரப்பிகள் மற்றும் எதிர்ப்பு மண்டலங்களைப் பாதிக்கும் |
| பாலிசைக்கிளிக் ஆரோமேட்டிக் ஹைரோகார்பன்கள் | ▪ விரைவாக புற்றுநோய் காரணிகள் கார்சினோஜென் உருவாகலாம்<br>▪ கல்லீரல், சிறுநீரகம் ஆகியவற்றில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும்<br>▪ விந்துத்திசுக்களை பாதித்து இனப்பெருக்கத்தைப் பாதிக்கலாம்<br>▪ சிறிய துகள் பொருட்களுடன் இணைந்து, நுரையீரல்களில் தங்கலாம் |
| பாதரசம் | ▪ மூளை நரம்பு மண்டலம், சிறுநீரகம் மற்றும் கல்லீரலை சேதப்படுத்துவதற்கு காரணமாகிறது<br>▪ பிறக்கும்போது குழந்தைகளுக்கு நரம்பு குறைபாடுகளையும் ஏற்படுத்துகிறது<br>▪ குழந்தைகளின் கற்றல், நினைவாற்றல் மற்றும் நடத்தையை கடுமையாக பாதிக்கிறது |

| இரசாயன மாசுக்கள் | சுகாதார பாதிப்புக்கள் |
|---|---|
| ஈயம் | ▪ குழந்தைகளின் நரம்பு மண்டலத்திற்கு சேதம் விளைவிக்கிறது<br>▪ சிறுநீரகத்திற்கு சேதம் விளைவிக்கின்றது<br>▪ இருதயம் மற்றும் தமனி நோயை ஏற்படுத்துகிறது<br>▪ இரத்த சோகையை ஏற்படுத்துகிறது |
| ஆண்ட்டிமோனி, ஆர்செனிக், பெரிலியம், காட்மியம், குரோமியம், நிக்கல், செரினியம், மெகனீஸ் | ▪ புற்றுநோய் காரணிகள் (கார்ச்னேஜென்கள்) (நுரையீரல், சிறுநீர்ப்பை, சிறுநீரகம், தோல்புற்றுநோய்கள்) உருவாக காரணமாகின்றன<br>▪ நரம்பு மண்டலம், இருதய தமனி அமைப்பு, தோல், சுவாச மண்டலம் மற்றும் எதிர்ப்பு சக்தி அமைப்புகள் ஆகியவற்றை கடுமையாக பாதிக்கிறது |
| ரேடியம் | ▪ கார்சினோஜென்கள் புற்றுநோய் காரணிகள் (நுரையீரல் மற்றும் எலும்பு புற்றுநோய்கள்) உருவாகக் காரணமாகின்றது<br>▪ இரத்த சோகையை உருவாக்குகிறது<br>▪ மூளை வீக்கத்தை ஏற்படுத்துகிறது |
| யுரேனியம் | ▪ புற்றுநோய் காரணிகள் (கார்சினோஜென்கள்) (நுரையீரல்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சுரப்பிகளில் புற்றுநோய் உருவாகக் காரணமாகின்றது<br>▪ சிறுநீரக நோய் ஏற்படுத்துகின்றது |

## ஒலி மாசு

அனல் மின்நிலையங்களின் கருவிகளான கொதிகலன்கள், டர்பைன்கள் மற்றும் நொறுக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை பயன்படுத்துவதால், ஏற்படும் அதிக சத்தம், மின்நிலையங்களில் பணி புரியும் நபர்களின் கேட்கும் திறனை பாதிக்கிறது.

## 1.3. சுற்றுச்சூழல் அனுமதிக்கான நடைமுறைகள்

1.3.1. சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கை 2006 குறித்த அறிமுகம்

1.3.2. அனல் மின்நிலையங்களுக்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நடைமுறையின் விளக்கப்படம்

1.3.3. புதிய அனல் மின்நிலையங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி (EC) பெறுதல்

1.3.4. ஏற்கனவே இயங்கிவரும் அனல் மின்நிலையங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி (EC) பெறுதல் (விரிவாக்கம், நவீனமயமாக்கல், உற்பத்தி சரக்கின் கலப்பில் மாற்றம்)

1.3.5. அனல் மின்நிலையங்களைக் கண்காணித்தல் (சுற்றுச்சூழல் அனுமதிக்கு பிந்தைய கண்காணிப்பு)

1.3.6. சுற்றுச்சூழல் அனுமதியின் உரிமை மாற்றம் செய்தல்

### 1.3.1. சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கை 2006 குறித்த அறிமுகம்

சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) மத்திய அரசின், திட்டமிடுதல், ஆதரவளித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய முதன்மை கழகமாகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன்படி (Environment Protection Act) தடை செய்யப்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் தொழிற்சாலைகளின் செயலாக்கம் அல்லது நடவடிக்கைகளை தடை விதிக்கவும் அல்லது சில பாதுகாப்பு விதிகளுக்கு உட்பட்டு அவற்றிற்கு அனும்தி தரும் அதிகாரத்தை சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் வழங்கியுள்ளது (பகுதி V உ.ப.பிரிவு (2) பிரிவு 3, சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்).

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006 சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டதாகும்

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடானது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ரூ50 கோடி மற்றும் அதற்கு மேல் முதலீடு தேவைப்படும் 39 வகையான வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையானது கீழ்க்கண்ட திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுவதை கட்டாயமாக்கியுள்ளது.

- அனைத்து புதிய திட்டங்களும், செயல்பாடுகளும்
- விரிவாக்கம், ஏற்கனவே இயங்கி வரும் அனல் மின்நிலையங்களை நவீனமயமாக்குவது
- அறிவிக்கையின் அட்டவணையில் பட்டியலிடப்பட்ட செயல்பாடுகள்

அனல் மின்நிலையங்கள் அறிவிக்கையின் அட்டவணையில் இனம் 1 (d) கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

### அனல் மின்நிலையங்கள் எப்பொழுது சுற்றுச்சூழல் அனுமதி பெற வேண்டும்?

- புதிய திட்டத்தை நிர்மாணிக்கும் முன்பு
- ஏற்கனவே இயங்கி வரும் அனல் மின்நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கு முன்பும், நவீனமயமாக்குவதற்கு முன்பும்
- ஏற்கனவே இயங்கி வரும் அனல் மின்நிலையத்தின் சரக்கு உற்பத்தி கலப்பில் மாற்றங்கள் செய்ய இருந்தால்.

### சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் அதிகார அமைப்புகள் எவை?

- சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF )
- மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு (SEIAA)

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, மேலே கூறியுள்ள இரண்டு அதிகார அமைப்புகளும் ஒழுங்குமுறை அதிகார அமைப்புகளாகும். அட்டவணையில் (A) வகையில் உள்ள பெரிய திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) திட்ட அனுமதி வழங்குகிறது. அட்டவணையில் (B) வகையில் உள்ள சிறிய திட்டங்களுக்கு, ஒவ்வொரு மாநிலத்திலும், மத்திய அரசாங்க அமைப்பாக செயல்படும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு (SEIAA), அனுமதி வழங்க வேண்டும்.

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு என்பது, மத்திய அரசாங்கத்தின் அதிகார அமைப்பாக மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டதாகும். இந்த அமைப்பானது, மத்திய அரசின் சார்பாக செயல்படுவதோடு, சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளதாகும்.

### கட்டமைப்பு மற்றும் செயல்பாடு

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பின் மூன்று உறுப்பினர்கள்

**செயல் உறுப்பினர்** - சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் குறித்த பரிச்சயம் உள்ள அந்தந்த மாநில அரசு அல்லது யூனியன் பிரதேசங்களில் பணிபுரியும் அதிகாரி

**தலைவர்** - சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை நடவடிக்கைகளில் நிபுணத்துவம் உள்ளவர் - மூன்று வருட காலம் வரை பதவி வகிக்கலாம்.

**செயல் உறுப்பினர் அல்லாதவர்** - சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை நடவடிக்கைகளில் நிபுணத்துவம் உள்ளவர் - மூன்று வருட காலம் வரை பதவி வகிக்கலாம்.

எந்த மாநிலத்திலாவது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு ஏற்படுத்தப்படாவிட்டால், அம்மாநிலங்களில் சுற்றுச்சூழல் அனுமதி தேவைப்படும் அனைத்து திட்டங்களும் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் பரிசீலிக்கப்படும். மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பின் (SEIAA) அனைத்து முடிவுகளும், கூட்டத்தின் வாயிலாகவே எடுக்கப்படுவது அவசியமாகும். மேலும், அது ஒருமித்த முடிவாக இருக்க வேண்டும். பெரும்பாலோர் சார்பில் முடிவுகள் எடுக்கப்பட்டால், திட்டத்திற்கு ஆதரவான / எதிரான கருத்துக்கள் இருப்பின், அவை முறையாக பதிவு செய்யப்பட்டு நிகழ்ச்சி சுருக்கமானது,

சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்திற்கு (MoEF) அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

| சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் அதிகார அமைப்பு / செயல்பாடு | சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) வகை (A) | மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு (SEIAA) வகை (B) |
|---|---|---|
| நிலக்கரி /பழுப்பு நிலக்கரி/ நாப்தா மின் உற்பத்தி வாயுவை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி | $\geq$ 500 மெகாவாட் | $<$ 500 மெகாவாட் |
| எரிந்த நிலக்கரி, பெட்ரோலியம், டீசல், மற்றும் இதர சுத்திகரிப்பில் மிஞ்சும் எண்ணெய் கழிவுகள் (கரியமில கழிவுகள் தவிர) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி | $\geq$ 500 மெகாவாட் | 5 மெகாவாட்– 49 மெகாவாட் |
| தாவர / கரியமில / உயிரியல் கழிவுகள் மற்றும் தீங்கற்ற நகராட்சி திடக் கழிவுகளை எரிபொருளாகக் கொண்ட மின் உற்பத்தி | $\geq$20 மெகாவாட் | 16 மெகாவாட்–19மெகாவாட் |

**திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனும்தி பெறுவதற்கு அதிகார அமைப்பில் யார் பரிந்துரை செய்ய வேண்டும்?**

a) நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (EAC )

b) மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (SEAC)

சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) சுற்றுச்சூழல் அனுமதியை நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவின் (EAC) பரிந்துரைகளின் அடிப்படையில், மதிப்பீடு செய்ய விண்ணப்பித்த திட்டங்களுக்கு வழங்கும்.

அதனைப் போலவே, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பானது (SEIAA) சுற்றுச்சூழல் அனுமதியை மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவின் (SEAC) பரிந்துரைகளின் அடிப்படையில், வழங்கும்.

மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (SEAC)

மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (SEAC) மாநில அரசால், மத்திய அரசின் கலந்தாய்வுடன் உருவாக்கப்படும் அமைப்பாகும். மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (SEAC) உருவாக்கப்படாத மாநிலங்களில், (B) வகையைச் சேர்ந்த அனைத்து மின் திட்டங்களுக்கும், சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதை தீர்மானிக்கும்.

நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (EAC ) மற்றும் மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுக்களின் (SEAC) செயல்பாடு மற்றும் கட்டமைப்பு

நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (EAC ) மற்றும் மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவில் (SEAC) 15 நபர்கள் வரை இருக்கலாம்.

அவர்கள் நிபுணர்களாகவோ அல்லது அனுபவம் வாய்ந்த தொழில்துறையினராகவோ கீழ்க்கண்ட துறைகளில் இருக்க வேண்டும்.

- சுற்றுச்சூழல் தரம்

திட்ட நிர்வாகத்தின் பலவிதமான துறைகள்

- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு முறைகள்
- அபாய மதிப்பீடு
- நில மற்றும் நீரியல் தாவரங்களை நிர்வகித்தல் (உயிரியல் விஞ்ஞான நிபுணர்)
- வனம் மற்றும் காடுவாழ் உயிரினங்கள்
- சுற்றுச்சூழல் பொருளாதாரம் (திட்ட மதிப்பீட்டில் அனுபவம் வாய்ந்த நிபுணத்துவம்)
- தலைவர் சிறப்பாக செயல்படக்கூடியவராகவும், மிகவும் அனுபவம் வாய்ந்த சுற்றுச்சூழல் கொள்கை நிபுணராகவும் அல்லது நிர்வாகம் அல்லது பொது நிர்வாகத்தில் சம்பந்தப்பட்ட வளர்ச்சித் துறையில் அதிக அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

நிபுணர்களுக்கானத் தகுதிகள்

தொழில்துறையினர் கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.


- தங்களது துறையில் 15 வருடங்களுக்கு குறையாமல், பொருத்தமான அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது
- தங்களது துறையில் 10 வருடங்களுக்குக் குறையாதப் பொருத்தமான அனுபவத்துடன், முனைவர் பட்டம் பெற்றிருக்க வேண்டும்
- நிபுணர் 70 வயதுக்குக் கீழ் உள்ளவராக இருக்க வேண்டும். ஒருவேளை, குறிப்பிட்ட துறையில், அந்த வயது வரம்புக்கு நபர்கள் கிடைக்கவில்லையெனில், நிபுணத்துவ மதிப்பீட்டு குழு உறுப்பினரின் வயது 75 வருடங்கள் வரை இருக்கலாம்.

நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழு (EAC ) மற்றும் மாநில நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுக்களின் (SEAC) செயல்பாடுகள்

- ஒவ்வொரு உறுப்பினரும், (தலைவர் உட்பட) அதிகபட்சம் மூன்று வருடங்கள் வரை, இரண்டு முறை பதவி வகிக்கலாம்
- மாதாந்திரக் கூட்டங்கள் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும்
- நிகழ்ச்சி நிரல் மற்றும் நிகழ்ச்சிக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- கூட்டத்தின் நிகழ்வுக் குறிப்புகள் கூட்டம் முடிந்த 5 வேலை நாட்களுக்குள் இறுதி செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் (MoEF) இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

# அனல் மின்நிலையங்களுக்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு முறை

## கொள்திறன் ≥ 500 MW




500 MW குறைவான கொள்திறன் கொண்ட நிலையங்களுக்கு அமைச்சகத்திற்கு பதில் மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையமும் மதிப்பீட்டு வல்லுநர் குழுவிற்கு பதிலாக மாநில மதிப்பீடு வல்லுநர் குழுவும் செயல்படும்.

**EIA அறிக்கையின் முன்வரைவு கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்.**

- திட்ட விளக்கம்
- சுற்றுச்சூழல் குறித்த அடிப்படைத் தகவல், மக்கள் தொகை, புவியியல் விபரங்கள், ஆய்வுப்பகுதியில் சுற்றுச்சூழல் நுட்பமுடைய அம்சங்கள்
- மின்திட்டத்தால் எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தாக்கங்கள்
- மாற்று ஆதாரங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த ஆய்வு
- சுற்றுச்சூழல் நிர்வாகத்திட்டம்

### 1.3.3. புதிய அனல் மின்நிலையங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி (EC) பெறுதல்

சுற்றுச்சூழல் அனுமதிக்கான நடைமுறைகள்

- விண்ணப்பதாரர் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்புக்கு (SEIAA) விண்ணப்பம் சமர்ப்பித்தல்
- சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு (SEIAA) ஆய்வு எல்லைகள் / செயல் வரம்புகள் பற்றிய வரைவு (ToR) வழங்குதல்
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, விண்ணப்பத்தாரரால் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் பொது கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்துதல்
- சுற்றுச்சூழல் அனுமதி வழங்குதல், சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF ) / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு (SEIAA) விண்ணப்பத்தை நிராகரித்தல் / தள்ளுபடி செய்தல்.

#### I விண்ணப்பதாரர் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்புக்கு (SEIAA) விண்ணப்பம் சமர்ப்பித்தல்

- திட்டத்திற்கான மனைவிடத்தை அடையாளம் கண்டபின்பு, விண்ணப்பதாரர் சுற்றுச்சூழல் அனுமதி கேட்டு விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பமானது, படிவம் 1ல் தரப்பட வேண்டும். (படிவம் 1க்கு இணைப்பைப் பார்க்க) அதோடு திட்டத்தின் முன் சாத்தியக் கூற்று அறிக்கையும் (மின் நிலையத்தின் கொள் அளவு அடிப்படையில்) சமர்ப்பிக்க வேண்டும். பாரம் 1, விண்ணப்பதாரர் முன்மொழியும் ToRஐ உள்ளடக்கியதாகும்.

- தொழில்முனைவோர் அல்லது விண்ணப்பதாரர் என்று அழைக்கப்படுபவர், சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு முன், திட்டஅமைவிடத்தில் எந்தவிதமான செயல்பாடும் மேற்கொள்ளக்கூடாது. இடத்தை சுத்தப்படுத்துதல், வேலியமைத்தல் அல்லது பணியாளருக்கான உள்கட்டமைப்பு வசதிகளுடன் தற்காலிக குடியிருப்புகள் அமைப்ப**தை** மட்டும் செய்யலாம்.

- இந்த கட்டத்தில், SEIAAக்கு அளிக்கப்பட்ட விண்ணப்பமானது, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பால் B1 அல்லது B2 வகையைச் சார்ந்தது என வகைப்படுத்தப்படும். இந்த நடைமுறைக்கு '**வகைப்படுத்தும் முறை**' என்று பெயர்.

- B2மின் திட்டங்களுக்கு EIA தேவையில்லை.

* மின்சார உற்பத்தி திட்டங்களை *B1* மற்றும் *B2* என்று அவ்வப்போது வகைப்படுத்தும் அறிவிக்கையை *MoEF* வழங்கும். தற்போது 5 மெகாவாட் உற்பத்தி உள்ள நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, நாப்தா, வாயு அடிப்படையிலான அனைத்து அனல் மின் நிலையங்களும் *B1*வகையாக அறிவிக்கப்பட்டு அவற்றிற்கு *EIA* பெற வேண்டும் என்று *MoEF* கூறியுள்ளது.

## II (MoEF) / (SEIAA) ஆல் அளிக்கப்படும் செயல்வரம்பு வரைவு (ToR)

60 நாட்களுக்குள் கண்டிப்பாக அளிக்கப்படவேண்டும்

1. விண்ணப்பம் பெற்றபின்பு, SEIAA/MoEF தேவைப்படும் அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்று சரிபார்க்கும்
2. கூடுதல் தகவல்கள் தேவைப்படின், விண்ணப்பதாரர் அவற்றை சமர்ப்பிக்க வேண்டும்
3. விண்ணப்பம் ஏற்றுக்கொண்ட பின்பு, SEIAA/MoEF விண்ணப்பதாரருக்கு, மின் திட்டத்தை மதிப்பீடு செய்யும் EAC/SEAC குழுவைச் சந்திப்பதற்கு அழைப்பு விடுக்கும்.
4. சந்திப்பின் போது SEIAA/MoEF, EIA ஆய்வுகள் நடத்தப்படும்போது கணக்கில் கொள்ள வேண்டிய சுற்றுச்சூழல் அக்கறைகளை விவரிக்கும். செயல்வரம்பு குறிப்புரையை (ToR) வழங்கும். இந்த நடைமுறைக்கு **நோக்கத்தை தெளிவு படுத்துதல்** (Scoping) என்று பெயர்.

***குறிப்பு :**

விண்ணப்பத்தை மதிப்பீடு செய்யும்போது செயல் வரம்புகள்படி வரையறுக்கப்பட திட்ட அமைவிடத்தை பார்ப்பது அவசியம் என்று *EAC/SEAC* குழு உறுப்பினர்கள் கருதினால் (*ToR*ன் உள்ளடக்கத்தை இணைப்பில் பார்க்கவும்) திட்ட அமைவிடம் பார்க்கப்பட்டு, அதைத் தொடர்ந்து *ToR* வழங்கப்படும். இதற்கு *MoEF/SEIAA,* விண்ணப்பதாரருக்கு பார்வையிடுதலுக்கு, தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கு, முன்பே அறிவிப்பு தர வேண்டும்.

செயல் வரம்புகள் (ToR) கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

1. பாரம் 1
2. விண்ணப்பதாரரால் முன்மொழியப்படும் ToR
3. EACஅல்லது SEACயின் உப குழுவினரால் திட்ட அமைவிடத்தை பார்வையிடுதல் (பார்வையிடப்பட்டால்)
4. EAC/SEACயிடம் கிடைக்கும் இருக்கும் இதர தகவல்களின் அடிப்படையில்

விண்ணப்பதாரரிடமிருந்து பாரம் 1 பெறப்பட்ட 60 நாட்களுக்குள் EAC/SEAAயானது விண்ணப்பதாருக்கு ToRஐ தெரிவித்திருக்க வேண்டும். இல்லையெனில், விண்ணப்பதாரர் முன்மொழிந்துள்ள ToRஆனது EIA தேவைகளுக்காக ஒப்புதல் அளிக்கப்பட ToRஆக கருதப்படும்.

அந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட ToR, MoEF மற்றும் SEIAAயின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட வேண்டும். கடலோரங்களில் நிறுவப்படவிருக்கும் அனல் மின் திட்டங்களுக்கான ToRல், தேவைப்படும் கூடுதல் ஆய்வுகள் குறித்த தகவல்கள் அளிக்கப்பட்டிருக்கும்.

இந்த கட்டத்திலேயே, EAC/SEACன் பரிந்துரையின் பேரில் MoEF/SEIAAவானது விண்ணப்பத்தை நிராகரிக்க முடியும். அவ்வாறு விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில், விண்ணப்பதாரரிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் நிராகரிக்கப்பட்டதற்கானக் காரணங்களை விண்ணப்பதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

ToR மற்றும் பாரம் 1 இரண்டும் விண்ணப்பதாரருக்கு அவற்றை அளிப்பதற்கு முன்பே MoEF/SEIAA தங்களுடைய இணையதளத்தில் வெளிப்பட்டிருக்க வேண்டும்

### III. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, விண்ணப்பத்தாரரால் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் பொது கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்துதல்

கட்டாயம் நடத்தப்பட வேண்டிய காலவரையறை–45 நாட்கள்

1. ToR பெறப்பட்ட பின்பு, அங்கீகரிக்கப்பட்ட கலந்தாய்வாளர் ஒருவரை விண்ணப்பதாரர் EIAஆய்வுகளை நடத்துவதற்கு பணித்து EIAஅறிக்கையின் வரைவை தயாரிக்க வேண்டும் (ஆய்வை நடத்துவதற்கு, ToRல் குறிக்கப்படும் பருவகாலங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறைந்தபட்சம் 3 மாதமாவது தேவைப்படலாம்)

2. EIAஅறிக்கை முன்வரைவை, விண்ணப்பதாரர் MoEF/SEIAAக்கு சமர்ப்பிப்பதோடு, அதே நேரத்தில், மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் பொதுக் கலந்தாய்வு நடத்தப்படுவதற்கான விண்ணப்பத்தையும் அளிக்க வேண்டும்.

3. **பொதுக் கலந்தாய்வில்** இரண்டு பகுதிகள் உள்ளன

- பாதிக்கப்படும் உள்ளூர் மக்களின் குறைகளை கேட்பதற்கான பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை, திட்ட அமைவிடத்திலோ அல்லது அதற்கு அருகாமையில் உள்ள பகுதியில் நடத்துதல்

- **எழுத்துப்பூர்வமான பதில்களை**, மின்திட்டத்தின் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நபர்களிடம் பெறுவது. திட்டம் குறித்து அவர்களின் கருத்துக்களை, எழுத்துப்பூர்வமாக MoEF/SEIAA மாநில மாசு காட்டுப்பாட்டு வாரியம் பெற வேண்டும்.

4. பொதுக் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும் மற்றும் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கை, கேட்டுணரும் நிகழ்வின் சுருக்கம், பொதுமக்கள் எழுப்பிய பிரச்சனைகள், அவற்றிற்கு விண்ணப்பதாரர் அளித்த விளக்கங்கள், கூட்ட நடைமுறைகள் மீதான ஒளிப்பதிவு, எழுத்தில் பெறப்பட்ட பதில்கள் ஆகிய அனைத்தும் உள்ளடக்கிய அறிக்கையை SPCBயால் MoEF/ SEIAAக்கு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் வேண்டுகோள் விடுத்த 45 நாட்களுக்குள், இவ்வறிக்கையை SPCB தரவேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பொதுக் கலந்தாய்வு நடைமுறையில், திறமையாக பங்கேற்பீர் என்ற பகுதியில் பார்க்கவும்.

பொது மக்கள் கருத்துக் கேட்டுணரும் அறிக்கையானது, மாநில மாசுக் கட்டுபாட்டு வாரியத்தை தவிர பஞ்சாயத்து அலுவலகங்கள், ஜில்லா பரிஷத் மற்றும் பஞ்சாயத்து அலுவலகங்களிலும் வெளிப்படையாக தெரியும்படி பார்வைக்கு வைக்க வேண்டும். SPCB தன்னுடைய இணைய தளத்திலும் அதை வெளியிட்டிருக்க வேண்டும். பொதுக் கலந்தாய்வு நிகழ்வின் கிடைக்கப்பெற்ற அனைத்து பதில்களையும், விண்ணப்பதாரரிடம் MoEF/SEIAA பகிர்ந்து கொள்ள வேண்டும்.

## IV. சுற்றுச்சூழல் அனுமதி வழங்குதல், சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் (MoEF) / மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு (SEIAA) விண்ணப்பத்தை நிராகரித்தல் / தள்ளுபடி செய்தல்.

**கட்டாயமாக முடிக்க வேண்டிய கால வரையறை–135 நாட்கள்**

1. விண்ணப்பதாரர் பொதுக் கலந்தாய்வு கூட்டத்தில் எழுப்பிய சமூக சுற்றுச்சூழல் அக்கறை குறித்த விஷயங்களை, சரி செய்வதற்காக மேற்கொள்ளவிருக்கும் பொருத்தமான மாற்றங்களை, **வரைவு EIAஅறிக்கையில்** குறிப்பிட வேண்டும். இவ்வாறு திருத்தப்பட்ட **EIA இறுதி அறிக்கை** என்று அழைக்கப்படும்.

2. EIA இறுதி ஆவணம் MoEF/SEIAAவின் ஆய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாற்றாக விண்ணப்பதாரர் பொதுமக்களின் கலந்தாய்வின் போது எழுப்பிய அனைத்து விஷயங்களையும் சரி செய்வதற்கு மேற்கொள்ளும் மாற்றங்களை கூடுதல் அறிக்கையாக சமர்ப்பிக்கலாம். இதுவும், வரைவு EIA அறிக்கையும் இறுதி EIAவாக கருதப்படும்.

விண்ணப்பதாரர் கீழ்க்கண்டவற்றை MoEF/SEIAAக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இறுதி செய்யப்பட்ட EIA அறிக்கை (20 அச்சடிக்கப்பட்ட நகல்கள், ஒரு மென்பொருள் நகல்)

- இறுதி செய்யப்பட்ட மின் நிலைய கட்டமைப்பு திட்டம் (20 நகல்கள்)
- திட்ட சாத்தியக் கூறு அறிக்கை (1 நகல்)

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் நிகழ்வின் ஒளிப்பதிவு நாடா அல்லது குறுந்தகட்டை விண்ணப்பதாரர் அளிக்கலாம் (1 நகல்)

3. இந்த ஆவணங்கள் பெறப்பட்ட 30 நாட்களுக்குள், MoEF ToRல் சொல்லப்பட்ட நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளனவா என்று கூர்ந்தாய்வு செய்து ஒரு கண்காணிப்பு அறிக்கை ஒன்றை மின்னஞ்சல் அல்லது வேறுவிதமாகவோ EAC/ SEACக்கு குறைபாடுகள் இருந்தால் அவற்றை சுட்டிக்காட்டி அனுப்ப வேண்டும். அதோடு இறுதி EIA அறிக்கை, பொதுமக்களின் கலந்தாய்வு அறிக்கை மற்றும் பாரம் 1 ஆகியவை இணைக்கப்பட வேண்டும். மின் நிலைய திட்டம் குறித்த முடிவை எட்டுவதற்காக, EAC/SEAC கூடும் கூட்டத்தின் தேதியைக் குறிப்பிட வேண்டும்.

4. MoEF/SEIAA இந்த கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி, விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்ப வேண்டும். நேரடியாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்டப் பிரதிநிதி மூலமாகவோ தேவைப்பட்டால், திட்டம் குறித்த விளக்கங்களை அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு கடிதம்

அனுப்ப வேண்டும். EAC/SEAC கூட்டம் நடைபெறுவதற்கு, குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன்னால், விண்ணப்பதாரருக்கு தகவல் அளிக்க வேண்டும்.

5. விண்ணப்பத்தின் மதிப்பீட்டை, தேவைப்படும் ஆவணங்கள் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் EAC/SEAC முடிக்க வேண்டும். EAC/SEAC சுற்றுச்சூழல் அனுமதி அளிக்க பரிந்துரை செய்தால், அவற்றின் கூட்ட குறிப்புகளில், குறிப்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நிபந்தனைகள் தெளிவாகப் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும். திட்டம் நிராகரிக்கப்பட பரிந்துரை செய்யப்பட்டிருந்தால், அதற்கானக் காரணங்கள் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

6. EAC/SEACயின் கூட்ட குறிப்புகள் 5 வேலை நாட்களுக்குள் இறுதி செய்யப்பட்டு MoEF/SEIAAயின் இணைய தளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

7. EAC/SEACயிடமிருந்து தகவல் பெறப்பட்ட 45 நாட்களுக்குள் MoEF/SEIAAவானது விண்ணப்பதாரருக்கு EC வழங்கப்பட்டதா அல்லது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதா என்று தெரிவிக்க வேண்டும். இந்த கால கட்டத்திற்குப் பிறகு EAC/ SEACயின் பரிந்துரைகள் (திட்டத்திற்கு EC வழங்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது) பொதுமக்கள் ஆவணங்களாகும்.

8. எனவே MoEF/SEIAA தங்களுடைய முடிவைப் பிரிவில் சொல்லப்பட்ட கால வரம்பிற்குள் (45 நாட்கள்) விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கவில்லையெனில், விண்ணப்பதாரர் EACயின் இறுதி பரிந்துரைகளின்படி EC அளிக்கப்பட்டதாகவோ அல்லது மறுக்கப்பட்டதாகவோ கருதி, மேற்கட்ட நடவடிக்கைகளில் ஈடுபடலாம். MoEF/SEIAAயானது ஏழு நாட்களுக்குள், தங்களது இணைய தளத்திலும் ஆங்கில மற்றும் உள்ளூர் மொழியில் வெளியிடப்படும் தினசரிகளில், சுற்றுச்சூழல் அனுமதியை வெளியிட வேண்டும். திட்ட அனுமதியானது, MoEFன் தகவல் பலகையிலும், மண்டல அலுவலகங்களிலும் 30 நாட்கள் வரை மக்களின் பார்வையிடலுக்கு வைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரரின் இணையதளத்தில் ECஆணை நிரந்தரமாக வெளியிடப்பட வேண்டும்.

## EC முடிவுகளை மறுபரிசீலனை செய்தல்

**கால வரையறை–135 நாட்கள்**

பொதுவாக MoEF/SEIAAயானது EAC/SEACயின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளும். பரிந்துரைகள் மீது கருத்து வேறுபாடு இருக்கும்பட்சத்தில்,MoEF/SEIAAயானது பரிந்துரைகளை ஏற்க முடியாததற்குரிய காரணங்களைக் குறிப்பிட்டு EAC/SEACயின் முடிவுகளை மறுபரிசீலனை செய்யும்படி வேண்டுகோள் கடிதம் அனுப்பும். பரிந்துரைகள் பெற்ற 45 நாட்களுக்குள் இந்த வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட வேண்டும். அதே வேளையில், விண்ணப்பதாரருக்கும் தங்களுடைய முடிவு குறித்தத் தகவலை அனுப்ப வேண்டும். EAC/SEACன் கருத்துக்களின் அடிப்படையில், சுற்றுச்சூழல் அனுமதிக்கான முடிவை MoEF/SEIAA எடுக்க வேண்டும். MoEF/SEIAAயின் இந்த இறுதி முடிவை, விண்ணப்பதாரருக்கு 30 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

## EC செல்லுபடியாகும் காலம்

அனல் மின்நிலையத்திற்கு வழங்கப்படும் சுற்றுச்சூழல் அனுமதி (EC)யானது 5 வருடங்களுக்கு செல்லுபடியாகும். திட்டத்திற்கான EC வழங்கப்பட்ட நாளிலிருந்து, உற்பத்தி செயலாக்கம் துவங்கும் நாள் வரை இது செல்லுபடியாகும் காலமாகும்.

ECயைப் புதுப்பிக்க வேண்டுமெனில், சுற்றுச்சூழல் அனுமதி காலாவதியாகும் காலம் முடிவதற்குள், பாரம் 1ல் கூடுதல் தகவல்கள் சேர்க்கப்பட்டு, MoEF/SEIAAக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும்.

## MoEF/SEIAA, EAC/SEACவுடன் கலந்தாய்வு–சுற்றுச்சூழல் அனுமதியை விலக்குதல், இரத்து செய்தல் (Cancelling EC)

சுற்றுச்சூழல் அனுமதிப் பெறுவதற்காக விண்ணப்பதாரர், வேண்டுமென்றே தகவல்களை மறைத்தாலோ அல்லது பொய்யான தவறான வழிகாட்டும் தகவல்களை அளித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், திட்டமானது, சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதாரம் மீது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று தெரிந்தால், சுற்றுச்சூழல் அனுமதி ரத்து செய்யப்படும். இயற்கை நீதிக் கொள்கை அடிப்படையில் விண்ணப்பதாரரை நேரில் வரவழைத்து, அவர் தரப்பு கருத்துக்களை கேட்ட பின்பு, MoEF/SEIAA சுற்றுச்சூழல் அனுமதி குறித்த முடிவை எடுக்கும்.

### 1.3.4. ஏற்கனவே இயங்கிவரும் அனல் மின்நிலையங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி (EC) பெறுதல் (விரிவாக்கம், நவீனமயமாக்கல், உற்பத்தி சரக்கின் கலப்பில் மாற்றம்)

1. சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறவிரும்பும் அனைத்து விண்ணப்பங்களும் புதிதாக பாரம் 1ல் சமர்ப்பிக்க வேண்டும்.
    - திட்ட விரிவாக்கம்
    - ஏற்கனவே செயல்படும் அனல் மின்நிலையத்தை நவீனமயமாக்குதல், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையில் இணைக்கபட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள புற விளைவை உண்டாக்கும்(thresh hold) அளவை விட கூடுதல் திறனுக்கான நவீன மாற்றம்
    - இருக்கின்ற நிலையத்தின் உற்பத்திச் சரக்கு கலப்பில் மாற்றம் கொண்டு வருதல்

    விரிவாக்கத்தின் அளவை குறிப்பிட்டு விண்ணப்பங்கள் SEIAA/MoEFக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்

2. 60 நாட்களுக்குள் விண்ணப்பங்கள் EAC/SEACயினால் பரிசீலிக்கப்பட வேண்டும்.

3. EIA தயார் செய்தல், பொதுக் கலந்தாய்வு நடத்துதல் போன்ற நடவடிக்கைகள் உள்ளடக்கிய சிறப்பு கவனம் தேவைப்பட்டால், அதன் அடிப்படையிலேயே, ECவழங்க, விண்ணப்பமானது மதிப்பீடு செய்யப்படும்

* தற்போதைய அனல் மின்நிலையங்களின் அதிகபட்ச உற்பத்தியாக 500 மெகாவாட் என வரையறுக்கப்பட்டு, அதற்கு *EC*யானது *SEIAA*வால் வழங்கப்படுகிறது. எனவே ஒரு அனல் மின் நிலையத்தின் தற்போதைய உற்பத்தித்திறன், 300 மெகாவாட்டானது நவீனமயமாக்கலுக்குப் பிறகு 500 மெகாவாட் உற்பத்தி திறனைத் தாண்டினால் *MoEF*யின் *EIA* நடைமுறையின் அனைத்து கட்டங்களையும் உள்ளடக்கிய சுற்றச்சூழல் முன் அனுமதி பெற வேண்டும்.

### 1.3.5. அனல் மின்நிலையங்களைக் கண்காணித்தல் (சுற்றுச்சூழல் அனுமதிக்கு பிந்தைய கண்காணிப்பு)

விண்ணப்பதாரர், அரை வருடத்திற்கான, சுற்றுச்சூழல் அனுமதி கடிதத்தில் சொல்லப்பட்டுள்ள வரையறை மற்றும் நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதைத் தெரிவிக்கும். பின்பற்றும் அறிக்கையை ( Compliance Report), அச்சு பிரதிநிதியாகவும், மென்பொருள் நகலாகவும் MoEF/SEIAAக்கு ஜுன் 1 ஆம் தேதி அன்றும் டிசம்பர் 1 ஆம் தேதி அன்றும், ஒவ்வொரு வருடமும் அனுப்ப வேண்டும். இந்த ஒவ்வொரு ஆவணமும், பொது மக்கள் பார்வைக்கான ஆவணமாகும். தேவைப்படின், அவற்றை MoEF/SEIAAக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். சமீபத்திய பின்பற்றுதல் அறிக்கையை (Compliance Report) MoEF/SEIAA தங்களது இணைய தளத்தில் கட்டாயம் வெளியிட வேண்டும்.

### 1.3.6. சுற்றுச்சூழல் அனுமதியின் உரிமை மாற்றம் செய்தல்

விண்ணப்பதாரர் சுற்றுச்சூழல் அனுமதிப் பெற்ற திட்டத்திற்கான உரிமையை, அத்திட்டத்தை எடுத்து நடத்த உரிமையுள்ள மற்றொரு நபருக்கு, EC காலவாதியாகும் காலத்திற்குள் மாற்றீடு செய்பவர், எழுத்துப்பூர்வமாக தனக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவிப்பதுடன், உரிமை மாற்றீடு செய்பவரோ அல்லது பெறுபவரோ மாற்றீடு குறித்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். வரையறைகள், நிபந்தனைகள் மற்றும் காலாவதியாகும் காலம், இவையனைத்தும் EC யில் ஏற்கனவே குறிப்பிட்டபடி நடைமுறையில் இருக்கும். இவற்றை மீண்டுமொருமுறை EAC/ SEAC உறுதி செய்ய வேண்டிய அவசியமில்லை.

# 2. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு பணிகளில் சமூகங்களை பலப்படுத்துவது

## 2.1 பொது கலந்தாய்வில் சிறப்பான பங்கேற்பு

2.1.1. பொது கலந்தாய்வு நடைமுறையின் சுருக்கம்
2.1.2. பொது கலந்தாய்வின் அமைப்பும் நோக்கமும்
2.1.3. பொது கலந்தாய்வுக்கான கால வரையறை
2.1.4. பொது கலந்தாய்வு நடைமுறை ஒரு விளக்கப்படம்
2.1.5. கேட்கப்படும் கேள்விகள்
2.1.6. பொது கலந்தாய்வு கூட்டத்தில் உங்களது உரிமைகளை நிலை நாட்டுங்கள்!

### 2.1.1. பொது கலந்தாய்வு நடைமுறையின் சுருக்கம்

பொதுக் கலந்தாய்வு (Public Consultation) என்பது அனல் மின் நிலையம் வரவுள்ள பகுதியின் சுற்றுச்சூழல் குறித்து, அக்கறை கொண்டோருக்கு ஒரு சிறந்த மேடையாகும். உள்ளூர் சமூகங்களுக்கு தங்களது சந்தேகங்களுக்கு விளக்கம் பெறவும், மக்களின் உரிமைகளைத் திட்டமானது பாதிக்கும் பட்சத்தில் கவலைகளை வெளிப்படுத்திக் கொள்ளவும் திட்டத்திற்கெதிரான தங்களது எதிர்ப்பை பதிவு செய்யவும், கிடைத்த பெரிய மேடையே பொதுக் கலந்தாய்வுகளாகும். பொதுக் கலந்தாய்வின் விளைவு அல்லது பலனானது பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையையும், மக்களின் சிறந்த பங்கேற்பையும் பொறுத்ததாகும். மக்களின் சந்தேகங்கள், கவலைகள், மற்றும் எதிர்ப்புகள் ஆகியவை கவனிக்கப்பட்டு, அவை சரியானது என கண்டறியப்பட்டால், ஒழுங்குமுறை அதிகார அமைப்புகளினால் அவை விண்ணப்பத்தை நிராகரிக்க அவற்றை பயன்படுத்தலாம்.

தொழில்முனைவோர் / விண்ணப்பதாரர்கள் தங்களது முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA) MoEF அல்லது SEIAAவிடம் சமர்ப்பித்த பின்னர் பொதுக் கலந்தாய்வு நடத்தப்படுகிறது. அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் (SPCB) கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்படுகிறது. பொது கலந்தாய்வு நடத்துவதற்காக, கடிதம் பெற்ற 45 நாட்களுக்குள் SPCBயானது, பொது கலந்தாய்வை முடித்து அதன் அறிக்கை ஒன்றை MoEF/SEIAAக்கு சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட கால வரம்பிற்குள் SPCBபொதுக் கலந்தாய்வை நடத்தி முடிக்கவில்லை எனில், MoEF/SEIAA இன்னொரு நிறுவனத்தை நியமித்து பொதுக் கலந்தாய்வை நடத்துவர். தொழில் முனைவோர் மற்றும் விண்ணப்பதாரர் இக்கருத்துக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முன்வரைவு EIAஐ அதன்படி திருத்திக் கொள்ள வேண்டும். ஒழுங்குமுறை அதிகார அமைப்பினால், சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதோ, விண்ணப்பத்தை நிராகரிப்பதோ, சமர்ப்பிக்கப்பட்ட இறுதி EIAஐ அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

1. **பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்:** அனைத்து அனல் மின் நிலையங்களுக்கும் அவற்றின் உற்பத்தி திறன் மற்றும் இடம் அமைவு ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு, அரசு அதிகாரிகளினால் கட்டாயமாக நடத்தப்படும் கூட்டமாகும். இங்கு, திட்டத்தின் சார்பாளர் / தொழில் முனைவோர், கூடியிருக்கும் மக்களுக்குத் திட்டத்தை விளக்குவார். இது

மக்களுக்கு திட்டம் குறித்து தங்களது சந்தேகங்களைத் தனியாகவும், கூட்டாகவும், கேட்கவும் அச்சங்களையும் / கவலைகளையும் தெரிவிப்பதற்கான மேடையாகும். கூட்டத்தின் நிகழ்வுகள் அதிகாரிகளினால் பதிவு செய்யப்பட வேண்டும்.

2. **எழுத்துப்பூர்வ பதில்:** பொதுமக்கள் திட்டம் குறித்து தங்களின் சந்தேகங்களையும் கவலைகளையும் SPCB யிடமும், ஒழுங்குமுறை அதிகார அமைப்பிடமும் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம்.

### 2.1.2. பொது கலந்தாய்வின் அமைப்பும் நோக்கமும்

பொதுக் கலந்தாய்வு குறித்து அறிவிக்கும் விளம்பரங்கள் (பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தையும் எழுத்துப்பூர்வ பதிலும்) தெளிவாகவும், முறையாகவும் இருக்க வேண்டும். விளம்பரங்கள் ஆங்கில நாளிதழிலும் மற்றும் அந்த மாவட்டத்தில் விற்பனையில் உள்ள உள்ளூர் மொழியிலான நாளிதழிலும், இடம் பெற வேண்டும்.

## பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்

### அறிவிப்பு காலம்

நடைபெறவுள்ள பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்து SPCB யானது ஒரு மாத கால அவகாசத்தில் மக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

**உள்ளூர் பஞ்சாயத்து அமைப்பின் பிரதிநிதிகள் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும். கட்சிக் கொடிகளை காட்டுவது அல்லது கோஷங்கள் எழுப்புவது அனுமதிக்கக்கூடாது.**

**–தேசிய பசுமைத் தீர்ப்பாயம்**

**(ஆலி பெர்ணான்டஸ் & மற்றவர் Vs MoEF& மற்றவர்**

### இடம்

- திட்டம் அமையவுள்ள இடத்திற்கு அருகில், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்படும் இடம் அமைய வேண்டும். முடிந்தவரை பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் இடம், திட்டம் அமையவுள்ள இடத்திலிருந்து 1கி.மீட்டருக்குள் இருக்க வேண்டும் என்று தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்திரவு ஒன்று கூறுகிறது (கிருஷி விக்யான் ஆரேக்யா சன்ஸ்தா மற்றும் Vs MoEF மற்றவர்கள்)

- தேர்ந்தெடுக்கப்படும் இடமானது திட்டம் அமையவுள்ள இடத்திற்கு மிக அருகில் உள்ள இடமாக இருக்க வேண்டும். உதாரணமாக, திட்டத்திலிருந்து 2கி.மீ தூரத்திற்குள் தகுந்த இடமிருந்தால் SPCB தூரமாக இருக்கும் வேறு இடத்தை தேர்வு செய்ய முடியாது.

திட்டத்திற்கு அருகில் இல்லாமல் இடம் அமைந்திருந்தால், திட்டத்தின் சார்பாளர்கள் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு மக்களை கொண்டு செல்ல போக்குவரத்து ஏற்பாடு செய்து தர வேண்டும். திட்டத்தின் சார்பாளர்கள், போக்குவரத்து வசதி செய்து தந்தாலும் கூட பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை மிக தொலைவில் நடத்தக்கூடாது.

அரசு அதிகாரிகள் கட்டாயம் இருக்க வேண்டும்.

1. மாவட்ட நீதிபதி / மாவட்ட ஆட்சித் தலைவர் / துணை ஆணையர் அல்லது கூடுதல் மாவட்ட நீதிபதியின் பதவி மட்டத்திற்கு குறையாத பதவிகளில் இருப்பவர்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும்.

2. SPCB யின் பிரதிநிதி / பிரதிநிதிகள்

## பொதுமக்கள் பங்கேற்பு

1. பங்கேற்க விரும்பும் உள்ளூர் சமூகங்கள் மற்றும் மக்கள்
2. வருகை பதிவுக்கென குறைந்தபட்ச வரையறை (quoram) ஏதும் இல்லை
3. வந்திருக்கும் அனைவரின் வருகை பதிவினை கவனித்துக் குறித்துக்கொள்ள வேண்டும்
4. மேடையிலிருக்கும் அதிகாரிகளை அணுக மக்கள் விரும்பினால் மேடைக்கு செல்வதற்கான வழிவகை செய்யப்பட வேண்டும். மேடைப் பகுதியை சுற்றி தடை / பாதுகாப்பு போடக்கூடாது.

## நிகழ்வுகள் பதிவு

SPCB பொது விசாரணையை, ஒளிப்பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும். SPCB அதிகாரிகள் கூட்டத்தின் நிகழ்வுகளை, துல்லியமாக பதிவு செய்ய வேண்டும்.

## புகார்கள்

திட்டம் குறித்தும் அல்லது அதன் பாதிப்பும் குறித்தும், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளில் மற்றும் விசாரணையில் வாசிக்கப்பட்டது தவறானதாகவும் அல்லது உண்மைகள் மாற்றப்பட்டிருந்தும் இருந்தால், மக்கள் விசாரணையில் பங்கேற்கும் அதிகாரிகளிடம், புகார் கூறலாம். பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தும் முறைகளில் தவறு ஏதும் இழைக்கப்பட்டிருந்தால் அது MoEF/SEIAA புகார் அளிக்கப்பட்டு புதிய விசாரணை நடத்த கோரிக்கை விடப்படவேண்டும்.

## எழுத்துப்பூர்வ பதில்

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட இருக்கும் ஒரு மாத கால அவகாசத்திற்குள்,மக்களிடமிருந்து எழுத்துப்பூர்வ பதில்கள் SPCB யினால் பெறப்பட வேண்டும்.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துப்பூர்வ பதில்கள் தொழில் முனைவோருக்கு விரைவாக கிடைக்கின்ற வழிமுறைகளின் மூலமாக MoEF/ SEIAA அமைப்புகள் உடனடியாக அனுப்ப வேண்டும்.

SPCBயினால் சமர்ப்பிக்கப்பட்ட பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கையானது பஞ்சாயத்து, ஜில்லா, மாவட்ட நீதிபதி மற்றும் SPCB இணையதளம் உள்ளிட்டு மற்றும் SPCB அலுவலகங்களில் கிடைக்கப்பெற வேண்டும்.

## பொது கலந்தாய்வுக்கான கால வரையறை &

### 2.0.1. அனல் மின் நிலையத்திற்கான பொதுக்கலந்தாய்வு நடைமுறைகள்

## நடவடிக்கை 1

**முதல்நாள் :**

தொழில் முனைவோர் பொது கலந்தாய்வை நடத்த மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தை கேட்டுக்கொள்ளுதல்

அதேவேளையில், முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை, சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையின் ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழியில் எழுதப்பட்ட செயலாக்க சுருக்கத் தொகுப்பறிக்கை ஆகிய ஆவணங்கள் கீழ்க்கண்ட அமைப்புகளிடம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

- அமைச்சகம் மற்றும் அதனுடைய பகுதி அலுவலகம்
- மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்
- மாவட்ட நீதிபதி, மாவட்ட ஆட்சித்தலைவர், துணை ஆட்சியர்
- ஜில்லா பரிஷத், நகராட்சி, பஞ்சாயத்து யூனியன்
- மாவட்ட தொழிற்சாலைகள் அலுவலகம்
- நகராட்சி அமைப்பு, பஞ்சாயத்து, வளர்ச்சி அதிகார அமைப்பு

# நடவடிக்கை 2

**7 நாட்களுக்கு முன்னர்:** மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பொதுக்கலந்தாய்வின் விபரங்கள் குறித்த அறிவிப்பு

1. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்
2. எழுத்துப்பூர்வ பதில்

**1. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்**

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்த விபரங்கள் ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழி நாளிதழ்களில், விளம்பரமாக வெளியிடப்பட வேண்டும்.

- செய்தித்தாள்கள் சென்றடைய முடியாத இடங்களில், முரசறைந்து அறிவித்தல் மற்றும் வானொலி, தொலைக்காட்சி மூலமாக பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட விபரங்களை விளம்பரம் செய்வது
- மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் அமைச்சகம் இணைய தளங்களில் முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையின் சுருக்கமான தொகுப்பை வெளியிடச் செய்வது
- சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை முன்வரைவு மற்றும் முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையின் சுருக்கத் தொகுப்பினை மின்னஞ்சல் நகலாகவும் எழுத்துப்பூர்வ அறிக்கையாகவும், நடவடிக்கை ஒன்றில் உள்ள அலுவலகங்களில் மற்றும் நாளிதழ் விளம்பரத்தில் குறிப்பிடப்படும் இடங்களிலும் கிடைக்கச் செய்வது

**2. எழுத்துப்பூர்வ பதில்கள்**

- எழுத்துப்பூர்வ பதில்கள், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட விளம்பரம் மற்றும் அறிவிப்பிலுள்ள முகவரிக்கும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்ப வேண்டும்.
- எழுத்துப்பூர்வ பதில்கள் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும்
- நடவடிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களும் எழுத்துப்பூர்வ பதில்களை பெற வேண்டும்.

# நடவடிக்கை 3

**45வது நாட்களுக்கு முன்னர்** :மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை நடத்தி முடித்து அமைச்சகம்/மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அதிகாரிக்கு அறிக்கை அளிக்க வேண்டும்

## I. பொதுமக்கள் கருத்து கேட்புணர் கூட்ட நடைமுறைகள்

- மாவட்ட நீதிபதி அல்லது துணைஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் விசாரணை நடைபெறும் இடத்தில் இருக்க வேண்டும்.
- மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் விசாரணையின் பங்கு பெறும் அனைத்து பங்கேற்பாளர்கள் பெயர்களையும், நிகழ்ச்சி குறிப்புகளையும், குறித்து கொண்டு நிகழ்வுகளை பதிவு செய்து கொள்வதும், அனைவரும் சுதந்திரமாக அர்த்தமுடன் பங்கேற்பதையும் உறுதி செய்ய வேண்டும்.
- தொழில் முனைவோர், திட்டம் குறித்த முக்கிய விபரங்களையும், முன் வரைவு சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையின் சுருக்கத் தொகுப்பையும், மக்கள் முன் வைக்க வேண்டும்.
- பங்கேற்பாளர்கள், நியாயமான கேள்விகளையும் கேட்பதுடன். அவர்களது கவலைகளையும் எழுத்துப்பூர்வமான அறிக்கையாகவும் தெரிவிக்கலாம்.
- திட்டத்தின் சார்பாளர்கள், சந்தேகங்களுக்கு விளக்கங்களையும் அளிப்பர். திட்டத்தின் பாதிப்பு குறைப்பு நடவடிக்கைகளையும் தெளிவுபடுத்துவார்கள்.
- உள்ளூர் மொழியில், பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி குறிப்புகளை, தேவையான திருத்தங்களுடனும், அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமானதையும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் படித்து விளக்க வேண்டும்.
- மாவட்ட நீதிபதி, துணை ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் நிகழ்ச்சி குறிப்புகளின் ஏட்டில் கையொப்பமிடுவார்.
- மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கையை அமைச்சகம்/மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அதிகாரியிடம் அளிக்கும்.

## II. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கையின் தொகுப்பு
- பொதுமக்கள் கூறும் ஒவ்வொரு பிரச்சனையையும் அட்டவணை வடிவத்தில் தயாரித்து, அவற்றை ஒரு கட்டத்திலும், அதற்கு இணையாக திட்டத்தின் சார்பாளர்களின் பதிலை பதிவு செய்ய வேண்டும்
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்த ஒளிப்பதிவு நகல்
- திட்டம் குறித்துப் பெறப்பட்ட எழுத்துப்பூர்வ பதில்கள்
- மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட விளம்பரத்திற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளே, பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நிகழ்வின்போது பின்பற்றப்பட்டவை போதுமானவை என்பதற்கு சான்றிதழ் அளிப்பதாகும்.

## III. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கை கிடைக்கப் பெறும் முறை

அறிக்கையானது ஆங்கிலத்திலும் உள்ளூர் மொழியிலும் கீழ்க்கண்ட அலுவலகங்களில் மற்றும் தளங்களில் வெளியிடப்பட வேண்டும்

- பஞ்சாயத்து
- ஜில்லா பரிஷத்
- மாவட்ட நீதிபதி
- மாநில மாசுக்கட்டுப்பாடு வாரியம்
- மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளம்

# சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுமுறை

**நாள்–1**

திட்டத்தின் சார்பாளர்கள் முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் நகல்கள், திட்டத்தின் முன்வரைவு உள்ளிட்டவை, ஆங்கிலத்திலும், உள்ளூர் மொழியிலும், சமர்ப்பிப்போடு பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்திட வேண்டி, மாசுக்கட்டுப்பாடு வாரியத்திடம் ஒரு கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

**நாள்–2**

திட்டத்தின் சார்பாளர்கள், அதே நேரத்தில் முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் அறிக்கையுடன் திட்ட செயலாக்கச் சுருக்கத் தொகுப்பின் ஒரு அச்சுப் பிரதியையும், கணினி நகலையும், மாவட்ட நீதிபதி அலுவலகம், நகராட்சி அலுவலகம், ஜில்லா பரிஷத் அலுவலகம்,மாவட்ட தொழிற்சாலைகள் அலுவலகம், அமைச்சகம் மற்றும் அதன் உள்ளூர் அலுவலகத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

**7 நாட்களுக்கு முன்னர்**

மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் அறிவித்து முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை கிடைக்கச் செய்ய வேண்டும். மேலும், ஒரு ஆங்கிலம்/உள்ளூர் மொழியிலுள்ள நாளிதழில் விளம்பரம் செய்து அழைப்பு விட வேண்டும். மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் அமைச்சகத்தின் இணைய தளங்களில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் முன் வரைவு சுருக்கத் தொகுப்பும், திட்டத்தின் சார்பாளர்களின் படிவம் 1 விண்ணப்பத்தையும் வெளியிட வேண்டும்.

**8–44 நாட்கள்**

மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது, தொலைக்காட்சி, வானொலி விளம்பரங்கள் மூலமாக செய்தித் தாள்கள் சென்றடையாத இடங்களுக்கு, தகவல் தெரிவிக்க வேண்டும். மாவட்ட நீதிபதி, நகராட்சி ஜில்லா பரிஷத் மற்றும் மாவட்ட தொழிற்சாலைகளின் அலுவலகங்களிலும், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்த தகவலை வெளியிட்டு, எழுத்துப்பூர்வமான பதில்களையும் வரவேற்க வேண்டும்.

**5.** உள்ளூர் சமூகங்கள், முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் குறுந்தகடு / அச்சடிக்கப்பட்ட நகல் மேற்குறிப்பிட்ட அலுவலகங்களிலிருந்து பெற முடியும் அல்லது மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் குறிப்பிட்டுள்ள இடங்களிலிருந்து பெற முடியும். பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனைகளின் அறிக்கை, முன்வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் இடம் பெறவில்லை எனில், அமைச்சகம் /மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைய அலுவலகங்களிலிருந்து அதை பெற முடியும்.

**6.** உள்ளூர் சமூகங்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் முன்வரைவானது, செயல் வரம்புகளை பின்பற்றுகிறதா என்பதையும், உள்ளூர் சூழல் குறித்த துல்லியமான விளக்கம், மேற்கொள்ளப்பட்ட தொடக்க நிலை அடிப்படை ஆய்வு, முதலியவற்றை பரிசீலிக்க வேண்டும்.

**7.** உள்ளூர் சமூகங்கள் / தனி நபர்களும் சுற்றுச்சூழல் மீதான தாக்கங்கள் மற்றும் போதுமான திட்டமிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க குறைப்பு நடவடிக்கைகள் குறித்து ஒரு சுற்றுச்சூழல் நிபுணரை கலந்தாலோசிக்கலாம்.

**8.** திட்டமிடப்பட்ட பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கான நடவடிக்கைகளில், ஏதேனும் தவறு இழைக்கப்பட்டிருந்தால், உள்ளூர் சமூகங்கள் / தனி நபர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் / நீதிபதி / அமைச்சகம், மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய அமைப்புகளுக்குப் புகார் தெரிவிக்கலாம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டினால் கட்டாயமாக்கப்பட்ட பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்திடவும் மனு அளிக்க வேண்டும்.

**9.** உள்ளூர் சமூகங்களும் / தனிநபர்களும் எழுத்துப்பூர்வமான பதில்களை அமைச்சகம், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணைய அலுவலகங்களுக்கும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ள முகவரிக்கும் அனுப்பலாம்.

**10.** மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்த வேண்டும். விசாரணை நடைபெறும் நாள் வரை எழுத்துப்பூர்வமான பதில்களை பெற வேண்டும்.

**11.** உள்ளூர் சமூகங்களும் / தனிநபர்களும் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறுவதில் தவறு இழைக்கும் பட்சத்தில் அமைச்சகம்/ மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மற்றும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களுக்கு புகார் அளிக்கலாம்.

**12.** மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட சுற்றறிக்கையை (பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் தொகுப்பு ஆட்சேபணை அறிக்கைகள், விசாரணையின் வீடியோ பதிவுகள்) அமைச்சகம்/ மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அளிக்க வேண்டும்.

**45 நாட்களுக்கு முன்னர்**

**13.** அமைச்சகம்/ மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மற்றும் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் பெறப்பட்ட எழுத்துப்பூர்வமான பதில்களை, விரைவான வழிகளில், தொழில் முனைவோரிடம் / திட்ட சார்பாளரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**14.** முன் வரைவு சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையில் அவசியமான மாற்றங்களைச் செய்து, மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் மற்றும் இறுதி சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு சமர்ப்பிப்பதற்கும், திட்ட சாத்தியப்பாடு அறிக்கை, இறுதி லே அவுட் திட்டம் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நடைமுறைகள் ஆகியவற்றை, அமைச்சகம்/ மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கும் திட்டத்தின் சார்பாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

## 2.0.2. கேட்கப்படும் கேள்விகள்

**1. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டதில் நான் கலந்துகொள்ளலாமா? அதனுடன் எழுத்துப்பூர்வ பதில்களை அனுப்பலாமா?**

ஆம். நீங்கள் பங்கேற்கலாம். அனுப்பலாம்.

**2. திட்டம் அமையவுள்ள இடத்திற்கு அருகில் நான் வசிக்கவில்லை. இருப்பினும், நான் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்கலாமா? அங்கு என்னுடைய கவலைகளைத் தெரிவித்துக் கொள்ளலாமா?**

ஆம். நீங்கள் நியாயமான சுற்றுச்சூழல் மற்றும் சமூக அக்கறை கொண்டவராக இருக்கும் வரை பங்கேற்கலாம்.

**3. நான் எந்த ஒரு முக்கிய சுற்றுச்சூழல் பிரச்சனையையும் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் எழுப்பவில்லை. மாறாக, நான் சமூகம் மற்றும் வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை எழுப்ப விரும்புகிறேன். நான் கலந்து கொள்ளலாமா?**

ஆம். அமையவுள்ள திட்டத்தின் பாதிப்புகள் குறித்து கவனம் செலுத்துவதற்காக, பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட உள்ளது. இருப்பினும், சுற்றுச்சூழல் என்ற வார்த்தையானது பரந்த அளவில் விளக்கமளிக்கக்கூடியது. சமூகம் மற்றும் பொருளாதார பாதிப்புகள் குறித்த பிரச்சனைகள், EIA ஆய்வுகளின் ஒரு பகுதியாக உள்ளன. எனவே, அவற்றை பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் எழுப்பலாம். சமூக தாக்க மதிப்பீடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமைப்புத் திட்டம், EIA ஆய்வுகளில் ஒரு பகுதியாக உள்ளன மற்றும் இப்பிரச்சனைகள் சார்ந்த அக்கறைகளை பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டதில் எழுப்பலாம்.

> சுற்றுச்சூழல் என்ற வார்த்தை பரந்த அளவில் விளக்கப்பட வேண்டும். சமூக, பொருளாதார மற்றும் வாழ்வாதார பிரச்சனைகள் குறித்து பொதுமக்கள் கருத்து கேட்புணர் கூட்டத்தில் கேள்வி எழுப்பலாம்.

**4. திட்டம் குறித்து யார் எழுத்துப்பூர்வ பதில்களை அனுப்ப முடியும்?**

திட்டத்தின் அல்லது அதன் செயல்பாட்டின் சுற்றுச்சூழல் அம்சங்கள் குறித்து அக்கறை கொள்வோர் யாராயினும், உள்ளூர் சமூகத்தினர் உட்பட சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்துப்பூர்வ பதில்களை அனுப்பலாம்.

**5. ஒரு திட்டத்திற்கு பொது விசாரணை நடத்தப்படாமல் சுற்றுச்சூழல் அனுமதி கொடுக்கப்பட்டு விட்டால் என்ன செய்ய வேண்டும்?**

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தால் அளிக்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதியை எதிர்த்து ஒரு மனு தாக்கல் செய்ய வேண்டும். சுற்றுச்சூழல் அனுமதி குறித்த தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். நியாயமான காரணம் இருந்தால் 90 நாட்கள் வரை நீடிக்கப்படும்.

**6. இரண்டு திட்டங்களுக்குப் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் நடத்த முடியுமா?**

முடியாது. MoEFயின் ஏப்ரல் 2010 தேதியிட்ட அலுவலக சுற்றறிக்கையின்படி இது அனுமதிக்கப்பட மாட்டாது[5].

**7. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை தள்ளிப்போடமுடியுமா?**

- ஆம். ஆனால் ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டால் மட்டுமே இதுசாத்தியம். இல்லாவிட்டால், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நாள், நேரம் மற்றும் இடம் மாற்றப்பட முடியாது.

- ஒரு பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டமானது மாவட்ட நீதிபதி / மாவட்ட ஆட்சித் தலைவர் / துணை ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே ஒத்தி வைக்கப்பட முடியும்.

- முன்னதாக பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறுவதாக விளம்பரப்படுத்தப்பட்ட அதே ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழி நாளிதழில் ஒத்தி வைக்கப்பட்ட தகவலும் அறிவிக்கப்பட வேண்டும். அது SPCB அடையாளப்படுத்தும் அனைத்து அலுவலகங்களிலும் முக்கியமாக வெளியிடப்பட வேண்டும்.

- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கான புதிய தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவை SPCB யினால் மாவட்ட நீதிபதி / மாவட்ட ஆட்சித் தலைவர் / துணை ஆணையர் ஆகியோரிடம் கலந்தாலோசித்து முடிவு செய்து புதிதாக அறிவிக்கப்படும்.

- உள்ளூர் நிலைமையின் காரணமாக, பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறிப்பிட்ட முறையில் நடத்தப்பட முடியாமல் போனால் SPCB அவ்விசயத்தை MoEF/ SEIAA ற்கும் அறிவிக்க வேண்டும். MoEF/ SEIAA பரிசீலனைக்கு பின்னர் இவ்விசயத்தில் பொது கலந்துரையாடலில் பொது மக்கள் கருத்து கேட்புணர் கூட்டம் இல்லாமலிருக்கலாம் என முடிவு செய்யும்.

- இருப்பினும் சமீபத்திய தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்திரவின்படி ஒரு சூழ்நிலையில் மக்கள் கொந்தளிப்புடனும், ஆவேசத்துடனும் இருந்தால், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் இரத்து செய்யப்பட்டு, முறையான பிரதிநிதித்துவத்திற்காக பின்னர் நடத்தப்படும்.

**9. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை ஒத்தி வைக்க மக்கள் கோரிக்கை விடுக்கலாமா?**

- ஆம், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்படும் முறையில் தவறுகள் இருக்கும் பட்சத்தில், இடமானது மிகவும் தொலைவில் இருந்தால் அல்லது EIAமுன்வரைவு அறிவிக்கப்பட்ட இடங்களில் கிடைக்கவில்லை போன்ற காரணங்களுக்காக, ஒத்திவைக்கக்

5 http://envfor.nic.in/divisions/iass/Cir/pub_hear_EIA.pdf

கோரலாம். மக்கள் மாவட்ட நீதிபதி / மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது துணை ஆணையரிடம், கூட்டாக இணைந்து, கோரிக்கை வைக்கலாம்.

**10. ஒரு பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் எவ்வளவு பேர் பேச வேண்டும் என்பதற்கு ஒழுங்குமுறை உள்ளதா?**

– இல்லை. எந்த வரம்பும் இல்லை. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்பவர்கள் அனைவருக்கும், தங்களது கருத்துக்களை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பளிக்க வேண்டும்.

**11. பொது விசாரணை நடைபெறும் நேரத்திற்கென ஏதாவது வரம்பு உள்ளதா?**

– இல்லை. மக்களின் சந்தேகங்கள், கேள்விகள் பதிலளிக்கப்படும் வரை பொது விசாரணை தொடரும்.

**12. ஒரு திட்டமானது, அதிகமான மாசுபடுத்தும் பகுதியில் அமைக்கப்படுவதாக உள்ளது. அனைத்து மாசுபடுத்தும் திட்டங்களின் மொத்தப் பாதிப்பு குறித்து ஒரு திட்டத்தின் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் நான் கேள்வி எழுப்பலாமா?**

– ஆம். நீங்கள் கேட்கலாம். EIAஆய்வானது, திட்டங்களின் மொத்த பாதிப்புகள் குறித்த மதிப்பீடை உள்ளடக்கியது. அதாவது திட்டம் அமையவுள்ள இடத்தில், திட்டமிடப்பட்டுள்ள, மற்றும் வர உள்ள திட்டமும் குறித்த மதிப்பீட்டை உள்ளடக்கியது ஆகும். இந்த திட்டங்களின் மொத்த பாதிப்புகளுடன் தொடர்புடைய பிரச்சனைகள், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் எழுப்ப, அனுமதிக்கப்பட வேண்டும்.

**13. திட்டம் அமையவுள்ள இடமானது இரண்டு மாநிலங்களின் எல்லையில் அமைந்திருந்தால், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை எங்கு நடத்துவது?**

– இது மாதிரியான சமயங்களில், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம், இரு மாநிலங்களிலும் இணைந்து இரு தரப்பின் SPCBகளின் பிரதிநிதிகளினால் நடத்தப்பட வேண்டும்.

**14. SPCB பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்து வெளியிடுவதை எப்படி கண்டறிவது?**

– ஆம். இந்த தகவலானது பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கையில் கிடைக்கப்பெறும் MoEF கடந்த 2010ல் வெளியிட்ட ஒரு அலுவலக குறிப்பில் SPCB பொது கருத்து கேட்புணர் கூட்டம் நடைபெறும் நேரம், இடம், நாள் குறித்து உள்ளூர் மக்களுக்கு தெரிவிக்க போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளது. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நடவடிக்கைகள் போதுமானதாக உள்ளது என SPCB கண்டிப்பாக சான்றிதழ் அளிக்க வேண்டும்.[6]

6 http://envfor.nic.in/divisions/iass/cir/pub_hear_EIA.pdf

### 2.0.2 பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் உங்களது உரிமையை நிலை நாட்டுங்கள்!

1. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்து அறிவிக்கப்பட்டவுடன், EIA முன்வரைவு தொகுப்பைப் பெறுங்கள்.
2. MoEF/SEIAA அளித்துள்ள திட்டத்தின் செயல் வரம்பு (ToR) அறிக்கையின் நகல் ஒன்றை பெறுங்கள்.
3. முன்வரைவு EIA குறிப்பிட்டுள்ள ToRபடி உருவாக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துங்கள்
4. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின்போது, அனைத்துப் பங்கேற்பாளர்களும் புரிந்துகொள்ளும் வகையில், உள்ளூர் மொழியில் திட்டத்தின் சார்பாளர்கள் முன் வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
5. திட்டத்தின் சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்தும் குறிப்பானத் தகவல்களை கேட்க வேண்டும்
6. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் முடிவுக்கு வரும்போது, உங்களது கருத்துக்கள் முறையாக நிகழ்ச்சி குறிப்பில் பதிவு செய்வதை உறுதி செய்ய வேண்டும். அது வாசிக்கப்பட்டு, உள்ளூர் மொழியில் விளக்கப்பட வேண்டும்.
7. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நிகழ்வுகளின் குறிப்பு அறிக்கையின் நகலை பெற்று, உங்களது கருத்துக்கள், கவனத்தில் கொள்ளப்பட்டனவா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.
8. இறுதி EIA யின் ஒரு நகலைப் பெற்று, உள்ளூர் மக்களின் கருத்துக்களையும், அதற்கான திட்டத்தின் சார்பாளர்கள் அளித்த பதில்களையும் அதில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்
9. திட்டத்தின் சார்பாளர்கள் அளித்த புதிய உறுதிமொழிகள், இறுதி EIAயிலும் திருத்தப்பட்ட சாத்தியப்பாட்டு திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும். உதாரணமாக, ஒரு பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குழாய்நீர் விநியோகிக்க செய்வதாக ஏற்றுக்கொண்டதை திருத்தி, EIAயிலும் திருத்தப்பட்ட சாத்தியப்பாட்டு திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்கவும்.

## 2.2 குறித்த காலத்தில் தலையீடுகள்

2.2.1. விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு முன்னர்

2.2.2. படிவம் 1 சமர்ப்பிப்பது குறித்து

2.2.3. செயல்வரம்பு கடிதம் (ToR) வழங்குதல்

2.2.4. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிவிப்பு குறித்து

2.2.5. பொது கலந்தாய்வு முடிக்கப்பட்டு மற்றும் இறுதி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சமர்ப்பிப்பது குறித்து

2.2.6 சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து

### 2.2.1. விண்ணப்பத்தைப் பரிசீலிப்பதற்கு முன்னர்

- **புதிய திட்டங்கள் /விரிவாக்கம் ஆகியவற்றை எப்படி கண்டறிவது?**
- புதிய திட்டங்கள் அறிவிப்பு குறித்து செய்தித் தாள்களைத் தொடர்ந்து பரிசோதிக்கவும்
- புதியதிட்டங்கள் குறித்த அறிவிப்புகள் வருவதை கண்டறிய, உள்ளூர் மற்றும் வணிக நாளிதழ்கள் உள்ளிட்ட **செய்தித் தாள்களை தொடர்ந்து பரிசோதிக்கவும்**
- **பெரிய அளவிலான நிலங்கள் கையகப்படுத்தல்களை** குறித்து கண்காணிக்கவும் மற்றும் விசாரித்தறியவும், முக்கியமாக கடற்கரை பகுதிகளில் நில உரிமையாளர் / உரிமையாளர்களை கண்டுபிடித்து நிலம் வாங்குவதற்கான நோக்கத்தைக் கண்டறியவும்.
- எரிபொருள் கம்பெனிகள் மின்சக்தி உற்பத்தியாளர்கள் அளிக்கும் **விநியோக அறிவிப்புகள்** மற்றும் அவர்களது **இணையதளங்களையும்** கண்காணிப்பதன் மூலம் புதிய திட்டம் குறித்தும், திட்ட விரிவாக்கம் குறித்தும் ஒரு குறிப்பிட்ட மின் கம்பெனிக்கு எரிபொருள் சப்ளை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறியவும்
- தேசிய அனல் மின்நிலையம் மற்றும் தேசிய லிக்னைட் கம்பெனி போன்ற **பொதுத்துறை மின்சக்தி உற்பத்தியாளர்களிடம்** வெவ்வேறு மின்நிலையங்கள் உள்ளன. (www.ntpc.in) (www.nicindia.com) அவர்களுடைய பொதுக்குழு கூட்டத்திற்கான ஆண்டறிக்கைகள் மற்றும் புதிய திட்டத்திற்கான விரிவான அறிக்கை ஆகியவற்றை இணையதளத்தில் படிக்கவும்
- வருடாந்திர கொள்கை குறிப்புகள் படிக்கவும்
- மாநில எரிசக்திதுறை மற்றும் மின்வாரியங்களின் இணைய தளங்களில் கிடைக்கும் புதிய திட்டங்கள் / **விரிவாக்கங்கள் குறித்த வருடாந்திர கொள்கை குறிப்புகள்** ஆகியவற்றைப் படிக்கவும்
- தனியார் துறை மின் தயாரிப்பாளர்களின் புதிய திட்ட அறிவிப்பை காண, அவர்களின் **வருடாந்திர பொதுக்குழு கூட்ட நிகழ்வுகள்** மற்றும் அறிவிப்புகளைப் படிக்கவும்
  - Reliance (www.reliancepower.co.in)
  - Adani (www.adanipower.com)
  - Tata Power (www.tatapower.com)
  - Lanco (www.lancogroup.com)
- வருடாந்திர பொதுக்குழு கூட்டங்களின் ஆண்டறிக்கை, பங்குதாரர்களின் அறிக்கைகள், இணைய தளங்களின் **புதிய திட்டம்** / விரிவாக்கம் குறித்த அறிவிப்புகள், அனல்மின் நிலையங்களின் வளர்ச்சி நிகழ்வுகள் குறித்து கண்காணிக்கவும்.

**புதிய திட்டம் – நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

1. இருக்கின்ற மின்நிலையத்தினால், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பட்டியலிட வேண்டும். மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் /மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு திட்டத்தினை அமல்படுத்துபவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை பரிசீலிக்க வேண்டும். சுற்றுச்சூழல் அனுமதிக்கான நிபந்தனைகளில் எந்த தவறும் நிகழ்ந்துள்ளதா என்பதைப் பரிசோதிக்கவும்.

2. பொதுமக்கள் மற்றும் அதிகாரிகளிடமும் உங்களுக்கு அருகாமையிலிருக்கும் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் இருந்தால், அவை உங்களது சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தும் மொத்த பாதிப்பைக் கணித்து அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும்.

3. மின் நிலையங்கள் குறித்தும் உங்களது ஆட்சேபங்கள் குறித்தும் உங்களது பஞ்சாயத்து தலைவரிடம் /மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையிடம் கூட்டாக அறிக்கை எழுதி சமர்ப்பிக்க வேண்டும்.

4. உங்களது பகுதியில் திட்டம் வருவதற்கு ‘ஆட்சேபனை இல்லை’ (NOC) சான்றிதழ் வழங்கக் கூடாது என்றோ அல்லது உங்களது குறிப்பான நிபந்தனைகளின்படி வழங்க வேண்டும் என்றோ பஞ்சாயத்துத் தலைவரை நிர்ப்பந்திக்க வேண்டும்.

5. அனைத்து கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்களுக்கு ஒப்புகை ரசீது பெற வேண்டும்.

### 2.2.2. படிவம் 1 சமர்ப்பிப்பது குறித்து

**படிவம் 1ல் கீழ்க்கண்டவை குறித்து பரந்த அளவில் குறிப்பிடப்பட வேண்டும்.**

- இப்போதைய நிலப்பயன்பாடு
- சர்வே எண்கள்
- இயற்கை வளங்களைப் பயன்படுத்துவது
- மின் நிலையம் செயல்பாடு

மேற்கூறிய கையகப்படுத்தப்படும் நிலத்தின் பரப்பு, அதனுடைய அளவு, மாசுக்கள், மின் நிலையத்தின் தாக்கம் ஆகியவை குறித்த ஆலோசனைகளும்/பரிந்துரைகளும் அளிக்கப்பட வேண்டும்.

முன் சாத்தியம் குறித்த அறிக்கையில் கீழ்க்கண்டவற்றை குறிப்பிட வேண்டும்

- சிக்கல் தன்மை வாய்ந்த மாசுக்கள்
- திட்டத்தின் அளவு
- செலவு
- சூழல் தாக்கத்தினைக் குறைப்பதற்கு செலவு
- சமூக பொருளாதாரப் பாதிப்பை குறைப்பதற்கான செலவு

**புதிய திட்டம் – நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

1. படிவம் 1 ஐயும் முன் சாத்தியப்பாட்டு அறிக்கையையும், மின் நிலையத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார பாதிப்பு குறித்து அறிய படிக்கவும்

2. படிவம் 1ஐ திட்டத்தின் தவறாக சித்தரிப்பது அல்லது தவறுகளுக்காகவும் பரிசோதிக்கவும்
   - திட்டத்தின் இடம்
   - நிலம் வகைப்படுத்துவது
   - தாவரம் மற்றும் உயிரினங்கள்
   - நீர் நிலைகள்
   - பிற முக்கியமான காரணிகள்

3. முன் சாத்திய அறிக்கையை பரிசோதிக்கவும் – பாதிப்பு குறைப்பு நடவடிக்கைக்கான செலவு உட்பட சமூகப் பொருளாதாரத் தாக்கம் /சமூக தேவைகள் ஆகியவற்றை மதிப்பிட, முன் சாத்தியப்பாடு அறிக்கையை பரிசோதிக்கவும்

4. தகவல்கள் சரியாக இல்லாதபட்சத்தில் அனைவரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். திட்டம் அமையவுள்ள இடத்தின் நிலைமைகளை பரிசோதிக்க மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடம் பிரச்சாரம் செய்தல் வேண்டும்.

5. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் கடற்கரை மண்டல மேலாண்மை அமைப்பின் மாதாந்திர கூட்டங்களின் நிகழ்ச்சி குறிப்பைப் பரிசோதித்து கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அனுமதி கோரப்பட்டுள்ளதா (CRZ clearence) என்பதை பரிசோதிக்க வேண்டும் அப்படி இருக்கும்பட்சத்தில் கீழ்க்கண்டவற்றை பரிசோதிக்க வேண்டும்.
   - மின்நிலையம் குறித்த சமீபத்திய தகவல்கள்
   - கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அனுமதியானது பரிந்துரைக்கப்பட்டுள்ளதா?
   - கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அனுமதியானது, கடற்கரை ஒழுங்குமுறை மண்டலத்தின் விதிகளைப் பின்பற்றி அளிக்கப்பட்டுள்ளதா?

6. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அனுமதியானது, விதிகளுக்கு மாறாக வழங்கப்பட்டுள்ள பட்சத்திலும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தினால் சரியான நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்திலும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்ய வேண்டும்.

**திட்ட விரிவாக்கம் – நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

1. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தொழில் முனைவோரால் சமர்ப்பிக்கப்படும் விதிகளை கடைபிடிக்கப்படும் அறிக்கைகளை பெறுவது

2. இருக்கின்ற மின்நிலையத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதிக்கான நிபந்தனைகளில் தவறுகள் இருக்கின்றதா என்பதை பரிசீலிக்கவும்

3. சுற்றுச்சூழல் அனுமதி நிபந்தனைகளில் நிகழ்ந்துள்ள எந்த தவறுகளையும் பஞ்சாயத்திற்கும் மத்திய வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு எழுத்துப்பூர்வமாக புகார் பதிவு செய்வது

### 2.2.3. செயல்வரம்பு கடிதம் (ToR) வழங்குதல்

1. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் (MOEF) மற்றும் (SEIAA) அளிக்கப்பட்ட செயல்வரம்பு கடிதம் (ToR) மின்நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட பாதிப்பு குறித்தும், பாதிப்பின் பரப்பு குறித்து மதிப்பிடுவதற்கான ஆய்வுகளும் *ToR*ல் விளக்கப்பட்டிருக்கும்.
1. (குறிப்பு: மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் / *(SEIAA)* அளித்த செயல்வரம்பு கடிதத்தின் கால வரையறை 60 நாட்களாகும். உரிய காலத்திய நடவடிக்கையானது எடுக்கப்படவில்லையெனில், திட்டத்தினை அமல்படுத்துபவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள படிவம் 1 உடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு முன்வரைவு செயல்வரம்பு ஆவணத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றார்கள். செயல்வரம்பு ஆவணம் வழங்கப்பட்டவுடன், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சுமார் 3 மாதங்களுக்குள் தயாராகிவிடும்.
1. SEAC/EAC கூட்டங்களின் நிகழ்ச்சி குறிப்பு பதிவேடுகளானவை, திட்டம் குறித்த நிபுணர்களின் கருத்தையும், திட்டத்தின் வளர்ச்சி நடவடிக்கைகள் குறித்து எடுக்கப்பட்ட முடிவுகளையும், தகவல்களையும் காட்டும்.
2. திட்டம் அமையவுள்ள இடத்திற்கு வருகை தந்து அது குறித்து EAC/SEAC குழுவினர் அளித்த அறிக்கையானது, மின் நிலையத்தினால் ஏற்படும் பாதிப்பு குறித்த தகவலை நிச்சயம் அளிக்கும்.

**புதிய திட்டம் – நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

1. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் / SEIAA செயல் வரம்பு ஆவணம் அளிப்பதற்கான இறுதிநாள் கண்டறிய EAC/SEAC கூட்டங்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

2. அளிக்கப்பட்ட செயல் வரம்பு ஆவணத்தை பரிசோதிக்கவும், அப்படி அளிக்கப்படாவிட்டால் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் /SEIAA இணையத்தில், செயல்வரம்பு ஆவண வரையறையை உடனடியாக வெளியிட வேண்டும் என்று கோர வேண்டும்.

3. திட்டத்தினை அமல்படுத்துபவர்கள், செயல்பாட்டு வரம்பின் தாக்கத்தை புரிந்து கொள்ளவும், சுற்றுச்சூழல்தாக்க மதிப்பீடு தயாரிக்க எடுத்துக் கொள்ளும் காலத்தை அனல் மின் நிலையத்தின் மாசுபடுத்தும் விவரங்களை உள்ளூர் மற்றும் அருகாமையில் வசிப்பவர்களின் ஆதரவை திரட்டி, எதிர்க்க பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

4. ToRல் முன்மொழியப்பட்ட ஆய்வுப் பகுதியையும் அப்பகுதி குறித்த ஆய்வையும் பரிசோதிக்கவும்

5. திட்டம் அமையவுள்ள இடத்திற்கு வருகை மேற்கோள்ளப்பட்டிருப்பின், அந்த அறிக்கையில், திட்டம் குறித்த அக்கறைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்

6. இடத்திற்கு வருகை தந்து, ஆய்வு செய்த அறிக்கையிலுள்ள அக்கறைகள், திட்டத்தின் கூடிசுல் செயல்பாட்டு வரம்பிற்குள் இடம் பெற்றுள்ளதா என்பதை பரிசோதிக்கவும்

7. இடத்திற்கு வருகை புரிந்த அறிக்கைகளின் அக்கறைகள் கண்டுகொள்ளப்படாவிட்டால், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தினால், புதிய மாற்றியமைக்கப்பட்ட கூடிசு வழங்கப்பட வேண்டும் என்று கோரவேண்டும்.

**திட்ட விரிவாக்கம் – நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

- மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு மனு அளிப்பது சுற்றுச்சூழல் அனுமதியிலும், கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அனுமதியிலும் உள்ள நிபந்தனைகளை அனல்மின் நிலையத்தில் நிறைவேற்ற தேவையான நடைமுறைகள் செயல் வரம்பில் (ToRல்) இல்லாதபட்சத்தில், மேற்படி அமைச்சகத்திற்கு விண்ணப்பம் அளிக்க வேண்டும்.

8. சுற்றுச்சூழல் அனுமதியில் உள்ள கட்டாயமான நிபந்தனைகளை இருக்கின்ற மின்நிலையம் பின்பற்றுவது குறித்து ஆய்வு செய்வது.

- தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு அறிக்கையையும், ஆண்டு சுற்றுச்சூழல் அறிக்கையையும், செயல்படுத்துவதற்கான ஒப்புதல் நிபந்தனைகளும், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரையாண்டு அறிக்கையினையும் பெற முடியும்.
- ToRல், சாம்பல் குளத்தின் விபரங்கள் பற்றியும் அதைச்சுற்றி உள்ள கனரக உலோகங்கள் குறித்த ஆய்விற்கான செயல்திட்டம் பற்றியும் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

## 2.2.4. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிவிப்பு குறித்து

### ஆவணங்களைப் பெறுவது

1. திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களால் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு முன்வரைவு அறிக்கை, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு சுருக்கத் தொகுப்பறிக்கை ஆங்கிலத்திலும், உள்ளூர் மொழியிலும் சமர்ப்பிக்கப்பட்டதைப் பெறுவது

### குறிப்பு

- இரண்டு ஆவணங்களும், மின்னஞ்சல் மூலமாகவும் தனி நகலாகவும் சமர்ப்பிக்கப்பட்டு அவை கிடைக்கப்படவும் செய்ய வேண்டும்.
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு முன்வரைவு அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், பயன்படுத்தப்பட்ட ஆய்வு முறை, தாக்கத்தை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட

நடவடிக்கைகள், கார்பரேட் சமூக பொறுப்பாக திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை விரிவாக கூறப்பட்டிருக்க வேண்டும்

- முன்வரைவு சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம், தாக்கத்தினை குறைக்கும் நடவடிக்கைகளுடன் தாக்க குறைப்பு நடவடிக்கைக்கான செலவுகள், தனித்தனி தலைப்புகளில் இருக்க வேண்டும்
- பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்பது சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இதில், உற்பத்தி நடவடிக்கையையும், அபாயகரமான இரசாயனப் பொருட்களின் தன்மையையும் நெருக்கடி நிலைமைக்கான தயாரிப்பு நடைமுறைகளையும், அதனை எதிர்கொள்ளும் நடைமுறைகளையும், அடிப்படையாகக் கொண்டு இருக்கும்
- ToR (இரண்டாம் கட்டத்தில் பெறுவது) தொழில் முனைவோர் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகளைக் குறிப்பிட்டிருக்கும்

**புதிய திட்டம் – நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

1. மாவட்ட ஆட்சித் தலைவர், நீதிபதி, துணை ஆணையர் ஆகியோருக்குப் பொருத்தமான, காலகட்டத்திற்கேற்ற திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை கட்டாயமாக நடத்த வேண்டும் என்று மனு அளிப்பது பொது பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை அறிவிப்பதிலும் செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்துவதிலும், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை கிடைக்கச் செய்வதிலும் ஏதாவது நடைமுறை தவறுகள் ஏற்படும்பட்சத்தில் அல்லது திட்டம் அமையவிருக்கும் இடத்திலிருந்துப் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் இடம் மிகத் தொலைவில் இருக்கும் பட்சத்திலும் அவ்வாறு மேற்படி அதிகாரிகளுக்கு மனு செய்யலாம்.
2. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு முன்வரைவு அறிக்கையையும், ToR அறிக்கையுடன் ஒப்பிட்டு குறிப்பிட்ட ஆய்வுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதைப் பரிசோதிக்கவும்
3. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு முன்வரைவு அறிக்கையின் அத்தியாயங்களை பரிசோதிக்கவும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் உள்ள படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி அத்தியாயங்கள் முறையாக உள்ளதா என்பதை பரிசோதிக்கவும்
4. சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைத்திட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் போதுமானதாக முன் வைக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்க ஒரு சுற்றுச்சூழல் நிபுணரை கலந்தாலோசிக்கவும்
5. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் /SEIAAத்திற்கு முதன்மை விபரங்கள் இல்லையெனில் அது குறித்த கவன ஈர்ப்பு கடிதம் அளிக்க வேண்டும்
6. அப்பகுதியின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளருக்கு திட்டம் குறித்து உங்களது ஆட்சேபனைகளையும் அக்கறைகளையும் எழுதவும்
7. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் உள்ள ஆட்சேபங்களையும் பட்டியலிடவும்
8. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் உள்ள உள்ளூர் மக்கள் அதிகமாக பங்கெடுப்பதை உறுதி செய்ய வேண்டும்

9. பஞ்சாயத்து தலைவரை திட்டத்தை எதிர்க்கவும் அல்லது அதிலுள்ள கவலையளிக்கும் அம்சங்களை எதிர்க்கவும் நிர்பந்திக்கவும்
10. ஒரு புதிய கருத்து கேட்டுணரும் கூட்டம் கோரவும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தை அணுகவும் கட்டாயமான முறைகள் பின்பற்றப்படவில்லை எனில், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் /SEIAற்கு உடனடியாக தகவல் அளிக்க வேண்டும்
11. தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பின்படி (வினோத் ஆர்.பட்டேல் Vs குஜராத் மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகாரி) திட்டத்தினை அமலாக்குபவர்களும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகரும் தொடக்க நிலை சமூக பொருளாதார புள்ளி விபர கணக்கெடுப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுவது அவசியமாகும்.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்படும் நாள்வரை இவை மேற்கொள்ளப்படலாம். ஒரு குழுவாக இதற்காக பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

திட்ட **விரிவாக்கம்–நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

1. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு முன்வரைவு அறிக்கையில் இருக்கின்ற மின் நிலையங்களின் செயல்பாடு குறித்து உண்மையாக கூறப்படவில்லையென்றால், உடனடியாக பரிசோதித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடம் அறிக்கை அளிக்க வேண்டும்
2. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் உள்ளூர் சமூகத்தின் உறுப்பினர்கள் பங்கேற்க நிர்பந்திக்க வேண்டும்
3. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சனைகளை விரிவாகக் கூற வேண்டும்
4. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நிகழ்வுகளை பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்

## 2.2.5. பொது கலந்தாய்வு முடிக்கப்பட்டு மற்றும் இறுதி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சமர்ப்பிப்பது குறித்து

**ஆவணங்களைப் பெறுவது**

1. மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் தொகுக்கப்பட்ட பொதுமக்கள் கருத்து கேட்புடுணரும் கூட்டத்தின்நிகழ்ச்சி குறிப்புகள்
2. திட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களால் இறுதிச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக் குறித்து பெற்ற எதிர் விசாரணைகளும் அதற்கான பதிவுகளும்

3. திட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களினால் சமர்ப்பிக்கப்படும் இறுதி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையும், திருத்தப்பட்ட திட்ட சாத்தியப்பாடு அறிக்கையும்
4. ToR அறிக்கையின்படி, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் / SEIAAயின் அறிக்கைகள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஏற்றுக் கொள்வது குறித்தும் MoEF/SEIAA அறிக்கை இறுதியான EIAயில் ஏதும் குறைபாடுகள் இருந்தால் அதை காண்பிக்கும். இது சுற்றுச்சூழல் அனுமதியானது எப்போது அளிக்கப்பட்டது என்பதை எதிர்த்து ஒரு மனு தாக்கல் செய்வதற்கு சமூகங்களுக்கான தகவல் அளிக்கிறது.
5. திட்டம் தொடர்பான EAC/SEAC கூட்டங்களில் நிகழ்ச்சி குறிப்புகள்

✶இறுதி EIAயில், பொதுமக்கள் கருத்து கேட்புடுணரும் கூட்டத்தின் போது மக்களிடம் வெளிப்பட்ட கருத்துக்களை விரிவாகக் கூறி அவற்றிற்கான தீர்வுகளையும் கூற வேண்டும். திருத்தி அமைக்கப்பட்ட திட்ட சாத்தியப்பாடு அறிக்கையில் சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைப்பதற்கான(பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் போது முக்கியத்துவம் கொடுக்கப்பட்டவை உள்ளிட்டு) கூடுதல் நடவடிக்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீடும் உள்ளடக்கப்பட வேண்டும்.

**நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

1. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கையில் மக்களின் கவலைகளை முறையாக பதிவு செய்வதை உறுதி செய்வது
2. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் போதும் பொதுமக்களிடம் கலந்தாலோசனையின் போதும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்கள் அளிக்கும் பதில்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது
3. இறுதியான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையுடன், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நிகழ்ச்சி குறிப்புகள் மற்றும் எழுத்துப்பூர்வமாக ஒப்பிட்டு, திட்டத்தின் சார்பாளர்களால் மக்களின் கவலைகள் தீர்க்கப்பட்டதா என்பதை பரிசோதிக்க வேண்டும்.
4. சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைப்பதை உறுதிப்படுத்துவதை சாத்தியப்பாடு அறிக்கையில், கூடுதல் நடவடிக்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவை பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் மற்றும் பதிவு செய்யப்பட்ட பதில்களின்படி, திட்டமிடப்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்கவும்
5. இறுதி EIAயை, முன்வரைவு EIA யுடன் ஒப்பிட்டு, அதில் ஏதாவது முரண்பாடு இருந்தால் MOEF மற்றும் SEIAAற்கு தெரிவிக்க வேண்டும்
6. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கையை பரிசோதித்து மக்களின் கவலைகள் ஏதும் பூர்த்தி செய்யாமல் விடப்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்கவும்
7. EAC/SEAC கூட்டங்களின் நிகழ்ச்சி குறிப்பு பதிவேடுகளை, கமிட்டிகளின் கருத்துக்கள் மற்றும் திட்டத்தின் சார்பாளர்களின் சாத்தியப்பாடு அறிக்கையையும் பரிசோதிக்கவும்
8. சுற்றுச்சூழல் தாக்கக் குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் இணைந்த செலவுகள், சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தின் அத்தியாயத்திலும், EIAமுன்வரைவு அறிக்கையிலும், மற்றும் இறுதி EIAஅறிக்கைகளிலும் தனித்தனியாக உள்ளதா என்பதைப் பரிசோதிக்கவும்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கார்ப்பரேட் சமூக பொறுப்பு நடவடிக்கைகள், அதனுடன் இணைந்த செலவுகள், மற்றும் அமல்படுத்தும் திட்டங்கள் ஆகியவற்றை பரிசோதித்து, விரைவாக நடைமுறைப்படுத்தக் கோர வேண்டும்.
10. சாத்தியப்படும் உள்ள நெருக்கடிகளையும், அவற்றை எதிர்கொள்வதற்கானத் தயாரிப்பு நடவடிக்கைகளையும் பொதுமக்களின் முன் வெளிப்படுத்த கோரவேண்டும்.

*புதிய அல்லது கூடுதல் ஆய்வுகளோ உள்ளடக்கப்படவில்லை.இறுதி EIAயில் அடிப்படை தகவலில் மாற்றம் இல்லை.

**இறுதி EIA ஆனது, சுற்றுச்சூழல் தாக்க குறைப்பு நடவடிக்கை நிதி ஒதுக்கீட்டையும் மற்றும் செலவுகளையும் உள்ளிட்டு மக்களின் கவலைகளை பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்

***திட்ட சார்பாளர்களின் மீது EAC/SEAC தன்னுடைய பாரபட்சத்தைக் காட்டுவதாக கண்டறிந்தால், உள்ளூர் சமூகம் அதை வாய்ப்பாக பயன்படுத்தி, திட்டத்தை எதிர்த்து MOEFற்கு எழுதுவதன் மூலமாகவும் அல்லது தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திடம் வழக்கு மனு ஒன்றை தாக்கல் செய்யலாம்.

****சுற்றுச்சூழல் தாக்க குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் அதற்கான செலவை முன்வரைவு EIA அறிக்கையிலிருந்து இறுதி EIA யில் சற்று கூட்டியிருக்க வேண்டும்.

### 2.2.6. சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து

1. MoEF/SEIAA யினால் வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி
2. MoEF/SEIAAற்கும் திட்டத்தின் சார்பாளர்களால் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அறிக்கை
3. மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் கண்காணிப்பு அறிக்கை
4. திட்டத்தின் சார்பாளர்கள் மத்திய மின் சக்தி அதிகாரி, மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், MoEF ஆகியவற்றால் சமர்ப்பிக்கப்பட்ட எரிசாம்பல் பயன்பாட்டு ஆண்டறிக்கை
5. மாநில மாசுகட்டுப்பாட்டு வாரியம் திட்டத்தை, நிறுவிட அளித்த ஒப்புதலும் மற்றும் செயல்படுத்துவதற்கு ஒப்புதலும்

* சுற்றுச்சூழல் அனுமதிக்கான நிபந்தனைகள், MoEFன் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதற்கான வெளிப்பாடுகள் ஆகும். மின்நிலையத்தை கண்காணிப்பதற்கான முக்கிய கவனத்திற்குரிய பகுதியாக இந்த நிபந்தனைகள் பிரிவு உள்ளது.

நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

1. உள்ளூர் சமூகம், சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டது சரியல்ல என்று நம்பும் பட்சத்தில், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திடம் ஒரு மனுவை தாக்கல் செய்ய வேண்டும்.

MoEFயிடம் அறிக்கை தரவேண்டும். தேவைப்படும் பட்சத்தில், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திடம் ஆய்வு அறிக்கையும், பின்பற்றும் அறிக்கையும் சுற்றுச்சூழல் அனுமதி நிபந்தனைகள் மீறப்பட்டிருந்ததாக சுட்டிகாட்டினால் வழக்கு ஒன்றை தாக்கல் செய்ய வேண்டும்.

2. MoEF மண்டல அலுவலகம் ஆகியவற்றிற்கு அதே விவரத்தை அறிவிக்கவும், மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம், MoEF மின் நிலையத்தை நிறுவுவதற்கு கொடுத்த அனுமதிக்கான நிபந்தனைகள் பின்பற்றப்படவில்லையென்றாலும் சுற்றுச்சூழல் நிபந்தனைகள் மீறப்பட்டு இருந்தாலும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடம் புகார் அளிக்க வேண்டும்.

* வருங்கால கட்டங்களில் நடைமுறைகளில் ஏதேனும் தவறிழைத்திருந்தாலும் அவை வழக்கு தொடுக்கும் மனுவிற்கான ஆதார தகவலாக அமையும்.

## 2.2. அனல் மின்நிலையங்கள் - குறிப்பிடத்தக்க வழக்குகள் மற்றும் தீர்ப்புகள்

2.3.1. சோம்பேட்டா அனல் மின்நிலையம்

2.3.2. செட்டிநாடு அனல் மின்நிலையம்

### 2.3.1. சோம்பேட்டா அனல் மின்நிலையம்

| விவரங்கள் | அனல் மின்நிலையம் விபரங்கள் |
|---|---|
| அனல் மின் நிலையத்தின் பெயர் | சோம்பேட்டா அனல் மின்நிலையம் |
| அமைவிடம் | சோம்பேட்டா, ஸ்ரீகாகுளம், ஆந்திரா |
| திட்டத்தின் சார்பாளர் | நாகர்ச்சுனா கட்டுமானக் கம்பெனி |
| திட்டத்தின் திறன் | 2640 மெகாவாட் |
| எதிர்ப்பிற்கான காரணம் | • சதுப்பு நிலத்திலும் இடம் பெயரும் பறவைகளின் வசிப்பிடமாக திட்டஅமைவிடம் உள்ளது<br>• EIA யில் தவறான உண்மைகள்<br>• பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு முன்னதாக EIA அறிக்கையை பெற முடியாமை |
| விளைவு | தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தினால் கடந்த மே 2012ல் அனுமதி இருந்து செய்யப்பட்டது. திட்டமானது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. |

கடந்த 2008ல், ஆந்திர மாநில அரசு ஆந்திராவிலுள்ள சோம்பேட்டாவில், 2640 மெகாவாட் திறனுள்ள அனல் மின் நிலையம் ஒன்றை கட்டுவதற்கு நாகர்ச்சுனா கட்டுமானக் கம்பெனிக்கு அனுமதி அளித்தது. நிபுணர் மதிப்பீட்டுக் FG (EAC), திட்ட அமைவிடம் சதுப்பு நிலங்கள் உள்ள பகுதியில் இருப்பதாகக் கூறி செயல்வரம்பை (ToR) அளிக்கவில்லை. மேலும் CRZ ஒழுங்குமுறைகளைப் பின்பற்றும் விதமாக, சதுப்பு நிலங்களுக்குத் தொலைவில் மாற்று இடத்தைக் கண்டறியுமாறு திட்ட சார்பாளரைக் கேட்டுக்கொண்டது. திட்டத்தின் சார்பாளர் EACயிடம், திட்ட அமைவிடமானது, சதுப்பு நிலமோ அல்லது CRZ பகுதியும் இல்லை என்றும் முன்னர் அளிக்கப்பட்ட தகவல் தவறான அடிப்படையில் தரப்பட்டது. EAC துணை குழுவின் திட்ட அமைவிட வருகை அறிக்கை திட்ட அமைவிடத்தை, வறண்ட விவசாய நிலம் என்றும் கூறியது. இந்த திட்ட அமைவிட வருகை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, 400 ஏக்கர் நிலத்தை திட்டத்திலிருந்து விலக்கக்கோரி ToR கடந்த மே 2009இல் அளிக்கப்பட்டது. அதே ஆண்டில் ஆகஸ்டில் ஒரு பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டது. டிசம்பரில், சுற்றுச்சூழல் அனுமதியானது அளிக்கப்பட்டது. 2010ன் முன்பகுதியில் இத்திட்டத்திற்கான அனுமதியை எதிர்த்து தேசிய சுற்றுச்சூழல் முறையீட்டு அதிகார அமைப்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

திட்டத்திற்குத் தேவையான நிலத்தை அதிகஅளவு கையப்படுத்தும் நடவடிக்கையால் குடியிருப்பவர்கள், திட்டத்தை பற்றி அறிந்திருந்தனர். அவர்களுடைய பயங்களை, உள்ளூர் பகுதியில் உள்ள அரசு சாரா நிறுவனமான பார்யவர்னா பரிகாக்ஷனா சமிதி (Paryakarana Parikakshana Samithi-PPS) வெளிப்படுத்தியது. SPCBக்கும், MoEFன் மண்டல

அலுவலகங்களுக்கும், முதலமைச்சருக்கும் கடிதங்களை எழுதியது. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் திட்டத்தை எதிர்த்தனர். மக்களின் முதன்மை எதிர்ப்புக்கு காரணம், நிலத்தின் வகை குறித்து உண்மைகளை திரித்து கூறியதே.

ஸ்ரீகாகுளத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்த அறிக்கையின் அடிப்படையில், மாநில அரசானது, அரசு நிலத்தை, நாகார்சனா கட்டுமானக் கம்பெனிக்கு அளித்தது. இதில் 44.6 ஹெக்டர் நிலமானது விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்ததாலும், கடலோர ஒழுங்குமுறை மண்டலத்தில் உள்ளதாலும், திட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. 2009இல் பிந்தைய காலத்தி இன்னொரு உத்திரவின் மூலமாக இந்நிலங்கள் கம்பெனிக்கு அளிக்கப்படக்கூடிய நிலங்களாக சேர்க்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை, மூன்று பாசன திட்டங்கள், அங்கு செயல்பட்டு கொண்டிருந்ததை சுட்டிக் காட்டத் தவறிவிட்டது. கடந்த 2003ல், அரசு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் நீர்நிலைகளுடன் கூடிய அனைத்து நிலங்களையும் கவனத்திற்கு கொண்டுவந்து அவற்றை கிராமத்தின் “தடையாணை புத்தகத்தில்” சேர்க்கக்கூறி உத்திரவு ஒன்றைப் பிறப்பித்தது. அப்போதுதான் அந்த நிலமானது, வேறு பயன்பாட்டிற்கு திருப்பி விடுவதிலிருந்தும், சேதமாவதிலிருந்தும் விலக்கு பெற முடியும். இப்படிப்பட்ட உண்மைகளை மீறியே விளை நிலங்கள்,திட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ளன. ஆட்சித் தலைவரின் அறிக்கை உண்மையை மறைத்து, பிரச்சினையான அந்நிலத்தை கழிவுநிலம் என்றும்,விவசாயத்திற்கு உகந்தது அல்ல என்றும் கூறி நாகர்ச்சுனா கம்பெனிக்கு அந்நிலங்களை வழங்க வழிவகுத்தது.

திட்ட அமைவிடம், ஆஸ்திரேலியா மற்றும் சைபீரியாவிலிருந்தும் புலம் பெயரும் பறவைகள் கூடுகட்டி வசிக்கவும், உணவு பெறுவதற்குமான இருப்பிடமாக உள்ளது. இப்பறவைகள் ஆறுமாதங்களுக்கு இங்கு வருகை தரும். எந்தவித தொழிற்சாலை நடவடிக்கையும்,சதுப்பு நிலத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் அனுமதிக்கப்படுவதில்லை.

இத்திட்டம் அமல்படுத்தப்பட்டால், ருஷிடுதா. கோல்கொண்டா. பருவபேட்டா மற்றும் பென்க்கிளி ஆகிய கிராமங்கள் பாதிக்கப்படும். இக்கிராமங்களில் விவசாயிகளும், மீனவர்களும் வசித்து வருகின்றனர்.

உள்ளூர் சமூகங்கள், திட்டத்திற்கு அளித்த அனுமதியானது, உண்மைகளை மறைத்து அளிக்கப்பட்டது எனக்கூறி அதை எதிர்த்தனர். PPS நிறுவனம், EIA யில் உண்மைகளை, தவறாகக் காட்டி, சுற்றுச்சூழல் அனுமதியானது வழங்கப்பட்டுள்ளது என்று கூறி அதை எதிர்த்து, மனு ஒன்றை தாக்கல் செய்தது.

இதற்கிடையில், கடந்த 2010ம் வருடம், ஜுலை மாதத்தில் திட்டத்தின் சார்பாளர் நிலத்தை கையகபடுத்த செய்த முயற்சியின் விளைவாக, திட்டத்தின் சார்பாளர்களும் காவல் துறையினரும் ஒரு தரப்பிலும், இன்னொரு தரப்பில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருக்க, இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு மோதல் உருவானது. உள்ளூர் போலீசார், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் மீது நடத்திய துப்பாக்கிச்சூட்டில், இரு மீனவர்கள் பலியாகினர். மேலும், 45 காவல் துறையினர் உட்பட 150 பேர் காயமடைந்தனர்.

போலீஸ் துப்பாக்கிச்சூடு நடந்து 2 நாட்கள் கழித்து, தேசிய சுற்றுச்சூழல் முறையீட்டு அதிகார அமைப்பு (NEAA) திட்டத்திற்கான அனுமதியை, இரத்து செய்து கீழ்க்கண்டவாறு கூறியது.

“திட்ட அமைவிடத்தை மேற்பார்வையிடும்போது, இந்த நிலம் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சரியான சதுப்பு நிலப்பகுதி என்றும் அருகிலுள்ள கிராமங்களுக்கான நீராதாரம் என்றும், அந்த

நீராதாரத்தை சார்ந்து அரசின் மூன்று பாசன திட்டங்கள் உள்ளன என்றும் தேசிய சுற்றுச்சூழல் முறையீட்டு அதிகார அமைப்பு கண்டறிந்தது. EAC யின் துணைக்குழு உள்ளிட்ட வெவ்வேறு நிறுவனங்களின் அறிக்கைகள் குழப்புவதாக உள்ளது.

(பத்தி–6) பிரச்சனையான பகுதி சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சதுப்புநிலப் பகுதி என்பதில் NEAAஅமைப்பிற்கு எந்தவித சந்தேகமும் இல்லை. அந்நிலத்தை மின்நிலையம் அமைப்பதற்குப் பயன்படுத்துவதை எந்த சட்டமும் தடுக்கவில்லை என்றாலும், அந்நோக்கத்திற்காக பயன்படுத்திட அனுமதி இல்லை (பத்தி–9)”

NEAA உத்திரவைத் தொடர்ந்து, திட்டத்தின் சார்பாளர்கள் MW மறுஆய்வு மனுக்களை, தாக்கல் செய்தனர். அவை தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திற்கு மாற்றப்பட்டன. மே 2012, தேசிய பசுமைத் தீர்ப்பாயமானது, திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை இரத்து செய்தது.[7] அத்தீர்ப்பாயத்தின் அமர்வானது ToR அளிப்பதற்கு முன்னதாகவே அடிப்படை விபரம் சேகரிக்கப்பட்டது என்றும், வெவ்வேறு கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட காலம் குறித்து EIA அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது. பொதுமக்கள் கருத்து கேட்புணர் கூட்டத்தில் மக்களுக்கு திட்டம் குறித்து தகவல் அளிக்கப்படவில்லை. ஏனெனில், அவர்களினால் EIA அறிக்கையையும் பெற முடியவில்லை என்று தீர்ப்பாயமானது கருத்து தெரிவித்துள்ளது. இப்படி கண்டறிந்தவற்றின் அடிப்படையில், தேசிய பசுமைத் தீர்ப்பாயம், திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை இடைநீக்கம் செய்தது.[8] இதற்கிடையில் திட்டத்தின் சார்பாளர் கிருஷ்ணம்பட்டினத்திற்கு திட்டம் மாற்றப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார்.[9]

### 2.3.2. செட்டிநாடு அனல்மின்நிலையம்

| விபரங்கள் | அனல்மின்நிலைய விவரங்கள் |
|---|---|
| மின் நிலையத்தின் பெயர் | செட்டிநாடு அனல் மின் நிலையம் |
| அமைவிடம் | தரங்கம்பாடி தாலுகா, நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு |
| திட்டத்தின் சார்பாளர் | சென்னை மின் கழகம் பிரைவேட் லிமிடெட் |
| நிலையத்தின் திறன் | 1320 மெகாவாட் (உண்மையான திறனாக முன் வைக்கப்பட்டது 1200 மெகாவாட்) |

7 http://epaper.timesofindia.com/Default/scripting/Artclewin.asp?from=Archieves&Source=page&skin=ETNEW&BaseHref=Href+ETD/2012/05/24&Pagelable=17&Entityld=Ar01702&Viewmode=HTML

8 https://www.elaw.org/system/files/sompeta/judgement.pdf

9 http://www.infrawindow.com/news/national-green-tribunal-cancels-to-sompeta-power-project-3052

| | |
|---|---|
| எதிர்ப்பிற்கான காரணம் | • முன்வரைவு EIAயில் ToRக்கான நிபந்தனை பின்பற்றப்படவில்லை<br>• ToR அளிப்பதற்கு முன்னரும் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு பின்னரும் அடிப்படைத் தகவல்கள் சேகரிப்பு<br>• முன்வரைவு மற்றும் இறுதி EIAக்கு இடையில் முரண்பட்ட தகவல்கள் |
| **விளைவு** | தேசிய பசுமைத் தீர்ப்பாயம், சுற்றுச்சூழல் அனுமதியை இரத்து செய்தது. பின்னர் கூடுதல் நிபந்தனைகளுடன் அனுமதி திரும்பி அளிக்கப்பட்டது. தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை நடத்துவதற்கு ஆலோசனைகளும் அளிக்கப்பட்டிருந்தன. |

திட்டத்தின் சார்பாளர், கடந்த 2009 அக்டோபரில் மனு சமர்ப்பித்தார். EIA ஆய்வுகளுக்கான ToR ஜனவரி 2010ல் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து முன்வரைவு EIA அறிக்கை, 2010 ஏப்ரலில் சமர்ப்பிக்கப்பட்டது. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம், மே மாதத்தில் நடைபெற்றது. மின்நிலையமானது, நாகப்பட்டினத்தில் அமைக்கப்பட திட்டமிடப்பட்டு இருந்தது. அங்கு இத்தகைய திட்டங்கள் அனுமதிக்காக அணிவகுத்து நின்றன. கடலோர செயல்பாட்டுக்குழு (CAN) என்ற ஒரு அரசு சாரா அமைப்பு, சென்னை உயர்நீதிமன்றத்தில், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்படும் இடமானது, மின் நிலையத்தின் வளாகத்திற்குள் இருப்பதால் பங்கேற்பவர்கள் திட்டத்தின் சார்பாளர்களினால் அச்சுறுத்தப்படலாம் என்று கூறி விசாரணை நடத்தப்படும் இடத்தை மாற்றக்கோரி, மனு ஒன்றை தாக்கல் செய்தனர்.

நீதிமன்றத்தின் கிளை அமர்வு மன்றம் மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் நடைபெறுவதற்கு அனுமதித்து, திட்டத்தின் சார்பாளர்களால் பங்கேற்பாளர்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தர உத்தரவிட்டது. மேலும், மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தைக் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்கவும் உத்தரவிட்டது.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் அறிவிக்கப்பட்ட நாளில் நடத்தப்பட்டது. சுற்றுச்சூழல் அனுமதி, ஜனவரி 2011ல் EAC யின் திட்ட மதிப்பீட்டிற்குப் பின்னர் அளிக்கப்பட்டது.

கடலோர செயல்பாட்டுக் கூட்டமைப்பு, EIA நடவடிக்கைகளில், ஏராளமான தவறுகளை, திட்டத்தின் சார்பாளர் செய்திருப்பதாகக் கூறி, டில்லியிலுள்ள பசுமைத் தீர்ப்பாயத்தை அணுகியது. கடலோர செயல்பாட்டு கூட்டமைப்பானது, இறுதி EIAயில் பல்வேறு திருத்தங்களும் கூடுதல் விசயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் முன் வரைவு EIA, திட்டப் பகுதியில் திட்ட அமைவிடம் தவறாக தரிசு (Semiarid) நிலம் என்று, குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் உண்மையில் நில ஆவணங்களின்படி, அது நன்செய்நிலம் என்றும், அனல்மின் திட்டம், அப்பகுதியிலுள்ள விவசாயத்தை கடுமையாக பாதிக்கும் என்றும் கூறியுள்ளது.

முன்வரைவு EIAற்கும் இறுதி EIA ற்கும் இடையிலான முரண்பட்ட விசயங்களை கண்டறிந்தவற்றை, முதன்மை அமர்வு நீதிமன்றம், முன்வரைவு EIAக்கான நகலை அளிக்குமாறு MoEFயிடம் கேட்டுக்கொண்டது. அமைச்சகமானது, அந்த ஆவணத்திற்கான நகல் தம்மிடம் இல்லை என பதிலளித்தது. மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்வரைவு EIA யின் நகலைப் பயன்படுத்தி, முன்வரைவு EIAயுடன் ஒப்பிடும்போது கீழ்க்கண்ட விஷயங்கள் திருத்தப்பட்டுள்ளன அல்லது இறுதி EIA யில் பாதியளவே அணுகப்பட்டுள்ளதாக நீதிமன்றம் குறிப்பிட்டது.

1. நிலம் கையகப்படுத்துதல் விபரங்கள் முழுமையாக தெரிவிக்கப்படவில்லை குடும்பங்களின் பெயர்கள் மற்றும் அளிக்கப்பட்ட நஷ்ட ஈட்டின் விபரங்கள், ஏக்கருக்கு கொடுக்கப்படுவதாக திட்டமிடப்பட்டிருந்தது நஷ்ட ஈட்டின் விபரங்கள் முழுமையாக தெரிவிக்கப்படவில்லை.
2. கார்பரேட் சமூக பொறுப்பின் பங்கு–முன்வரைவு EIA யின் பகுதியாக CSRக்கான கருத்தியல் திட்டத்துடன் கூடிய நிதி ஒதுக்கீடு சேர்க்கப்படவில்லை.
3. கடல் சூழல் குறித்த விரிவாக்க ஆய்வு – இரண்டு EIA அறிக்கைகளும், மேலாண்மைத் திட்டமும், நிதி ஒதுக்கீடும் இன்றி பொதுவான சுருக்க செயலாக்க அறிக்கையை மட்டுமே அளிக்கின்றன.
4. சூழ்ந்துள்ள காற்றின் தரம் மற்றும் துகள் பொருள்கள் ஆகியவை முன்வரைவு EIA யில் முன் வைக்கப்படவில்லை
5. எரிபொருள் பகுப்பாய்வு– கன உலோகங்கள் குறித்த விபரங்கள் முன்வரைவு EIAயில் முன்வைக்கப்படவில்லை.

இருப்பினும் இத்தகைய முரண்பட்ட தகவல்களினால் சுற்றுச்சூழல் மீது பெரிய அளவில் எந்த பாதிப்பு இல்லை என்று கூறிய அமர்வு நீதிமன்றம் நடைமுறை சார்ந்த தவறுகளால் சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதை தள்ளி வைத்துவிட முடியாது என்று கூறியது.

அமர்வின் முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு :

ToR அளிக்கப்படுவதற்கு முன்பாக திட்ட அமைவிடத்தின் சூழல் குறித்த அடிப்படை விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. மேலும் ToR நிபந்தனைகள், முழுமையாக பின்பற்றப்படவில்லை. புள்ளி விவரங்களின் தொகுப்பு புதுப்பிக்கப்பட்டு இறுதி EIA அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட EIA அறிக்கையே, EACயின் மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

- ToRக்கு கடற்கரை சுற்றுச்சூழல் அறிக்கை தேவைப்படுகிறது. ஆனால் அந்தஅறிக்கை எந்த தொடர்பும் இல்லாத, எந்த பௌதீக உண்மைகளும் இல்லாது, ஒரு அதீதமான பொது அறிக்கையின் சுருக்கத்தொகுப்பாக EIA அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது. மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் போதும் அல்லது அதனைத் தொடர்ந்த EAC மதிப்பீட்டின் போதும் இவ்வறிக்கை கிடைக்கப்பெறவில்லை.
- இரண்டு EIA அறிக்கையிலும் உள்ள முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தகவல்களில், ஆலிவ் ரிட்லி வகை ஆமைகள் இருப்பது குறித்த, எந்த தகவலும் இல்லை. தமிழ்நாடு மீன்துறையின் அறிக்கை ஒன்று திட்ட அமைவிடமானது, இவ்வகை ஆமைகள் முட்டையிட்டு குஞ்சுபொரிக்கும் இடமாகக் கூறுகிறது.
- திட்டத்தின் சார்பாளர், EIAக்களில் உள்நாட்டில் கிடைக்கின்ற நிலக்கரியையும், இறக்குமதியையும் ஒன்று சேர்த்து பயன்படுத்தப் போவதாகக் கூறியிருந்தனர். ஆனால், EACக்கு முன்னர் திட்டத்தை பற்றிக் கூறும்போது அவர் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியை மட்டுமே பயன்படுத்துவதாகக் கூறினார். சுற்றுச்சூழல் அனுமதியில் நிலக்கரியை பயன்படுத்தும்போது, 34 விழுக்காடு எரிசாம்பல் மதிப்பீட்டை குறிப்பிட்டிருந்தது. அது

**பொதுமக்கள் கருத்து கேட்புணர் கூட்டம் குறித்து தேசிய பசுமைத் தீர்ப்பாயம்**

“ எங்களது பரிசீலனைக்கு வந்த பெரும்பான்மையான வழக்குகளில் வீடியோ பதிவுகளை பார்க்கும்போது பொது விசாரணை என்பது ஒரு கேலிக்கூத்தாக உள்ளதாக நாங்கள் உணருகிறோம். ஆதரவு அல்லது எதிர்ப்பு என்பதை பதிவு செய்வதை தவிர பொது விசாரணை என்பது மதிப்பற்றதாக உள்ளது ”

உள்நாட்டு நிலக்கரியாக கூட இருக்கலாம். (அதனுடைய சாம்பல் மதிப்பீடு 30 விழுக்காடுதான்) அதனுடைய காற்றின் தரத்தின் மீதான தாக்கம் இறக்குமதி செய்யப்படும் நிலக்கரியிலிருந்து வேறுபட்டது ஆகும்.

- EIAவில் கட்டுமான பணி நடைபெறும் நிலையில் பயன்படுத்தப்படும் நீருக்கான ஆதாரம் குறித்து குறிப்பிடவில்லை.

இவ்வகை கருத்துக்களைத் தொடர்ந்து தீர்ப்பாயத்தின் அமர்வானது, திட்ட அமைவிடம் மற்றும் கடல் சூழல் குறித்தும் சமீபத்திய தகவல்களுடன் இறுதி EIA சமர்ப்பிக்கப்படும்வரை, திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியை தற்காலிகமாக இரத்து செய்தது. சமீபத்தில் மேற்படி புதிய தகவல்களுடன் EIA அறிக்கை MoEF இணையதளத்தில் வெளியிடப்பட்டு, அதற்கான ஆட்சேபணைகள் / ஆலோசனைகள் வரவேற்கப்பட்டன. EAC திட்டத்தை, மக்களின் கருத்துக்களுடன் இணைத்து மதிப்பிடவும் அது சுற்றுச்சூழல் அனுமதி அளித்ததற்கான பரிந்துரைகளை MoEFயின் இணையதளத்தில் வெளியிடவும் கேட்டுக்கொள்ளப்பட்டது10.

திட்டத்தின் சார்பாளர், திருத்தி எழுதப்பட்ட EIA அறிக்கையை சமர்ப்பித்த போது, EAC அந்த அறிக்கை தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கூறிய ஆலோசனைகளை பின்பற்றவில்லை என்று கருத்து தெரிவித்தது. ஆலிவ் ரிட்லி ஆமைகள் மீது திட்டம் ஏற்படுத்தும் தாக்கத்தை ஒரு ஆய்வு செய்து சமர்ப்பிக்கவும், அத்துடன் அந்த ஆமைகளை பராமரிக்க ஒரு நீண்ட கால திட்டத்துடனும் சமர்ப்பிக்கவும் கோரியது. திருத்தப்பட்ட EIA அறிக்கையானது, ஒரு வக்காலத்து போன்று சமர்ப்பிக்கப்பட்டு, அதில் திட்டத்தின் சார்பாளர் கம்பெனியின் தகுதியுடைய அதிகாரியினால் கையெழுத்திடப்பட்டு நோட்டரி பப்ளிக் வழக்குரைஞரால் பதிவு செய்யப்பட வேண்டும் என்று EAC கூறியது. சமர்ப்பிக்கப்பட்ட அந்த வக்காலத்தின் அடிப்படையில் சுற்றுச்சூழல் அனுமதியானது, முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்ததைவிட கூடுதலாக பதின்மூன்று நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டது.

10 http://www.indiankanoon.org/doc/5723251

## 2.4 அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

2.4.1. பொதுவானவை
2.4.2. சுற்றுச்சூழல் அனுமதியும் புதிய மின்நிலையத்தின் EIAக்கான நடைமுறைகளும்
2.4.3. தற்போது செயல்படும் மின்நிலையங்கள்
2.4.4. மற்ற அனுமதிகள்
2.4.5. குறைதீர்ப்பு

### 2.4.1. (அ) தொழிற்சாலைகள் வகைப்படுத்துதல்

**கேள்வி:** தொழிற்சாலைகள் மத்தியில் அனல் மின்நிலையங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன?

**பதில்:** MoEF, அனல் மின்நிலையங்களை 17 சிவப்பு வகை தொழிற்சாலைகளில் ஒன்றாக வகைப்படுத்தியுள்ளது. சிவப்பு வகை என்பது மிக அதிகமாக மாசுபடுத்துபவையாகும்.

**சுற்றுச்சூழல் அனுமதி பெற :**

- **A வகைத் திட்டங்களாவன:**

  500 மெகாவாட்டிற்கும் மேல் நிலக்கரி / லிக்னைட் / நாப்தா மற்றும் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள்

  50 மெகாவாட்டிற்கும் மேல் பெட்ரோல், டீசல் மற்றும் பிற எரிபொருட்கள், எண்ணெய், சுத்திகரிக்கப்படும் எண்ணெய் கழிவு (உயிரி எரிபொருள் (Biomass) நீங்கலாக)

  20மெகாவாட் பயோமாஸ் அல்லது தீங்கு விளைவிக்காத நகராட்சியின் திடக்கவை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள்.

- **B வகை திட்டங்களாவன:**

  <500 மெகாவாட்டிற்கு குறைவானது, நிலக்கரி, லிக்னைட் நாப்தா மற்றும் எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள்

  <50 மெகாவாட்டிற்கு குறைவானது, அல்லது 3 மெகாவாட் பெட்ரோல், டீசல் மற்றும் சுத்திகரிக்கப்படும் ஆலையின் எண்ணெய் கழிவு, அனைத்து எரிபொருட்கள், பயோமாஸ் எனப்படும் உயிரி எரிபொருட்கள்

  <20 மெகாவாட் அல்லது>15 மெகாவாட் பயோமாஸ் எரிபொருளை அல்லது தீங்கு விளைவிக்காத நகராட்சி திடக்கழிவு அடிப்படையாகக் கொண்ட எரிபொருள்

### 2.4.1 (ஆ) மின்நிலையங்கள் அமைவிடம்

**கேள்வி:** ஏன் கடற்கரைக்கு அருகில் அனல் மின்நிலையங்கள் அதிகமாகி வருகின்றன?

**பதில்:** கடற்கரையில் மின் நிலையம் அமைக்கப்படுவதால் இரண்டு முக்கிய லாபங்கள் திட்ட சார்பாளர்களுக்கு கிடைக்கும். அவையாவன:

1. துறைமுகங்கள் மற்றும் செயற்கை துறைமுக அணைக்கரை (**Captive Jetties**) மூலமாக இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி எளிமையாக போக்குவரத்து செய்யப்படுகிறது.
2. கொதிக்கும் மின் உலையை குளிர்விக்கவும், கொதிக்க வைத்து மின் உற்பத்தி செய்யவும் கடல்நீரை உவர்தன்மை நீக்கும் தொழில்நுட்பத்திற்கு எளிமையான முறையில் கடல் நீர் தாராளமாக கிடைக்கிறது. இதனால் அனல் மின் நிலையத்தினை இயக்க தூய நீர் தேவையின் அளவு குறைகிறது.

**கேள்வி** அனல்மின்நிலையங்கள் அமைவதற்கென ஏதும் ஒழுங்குமுறை உள்ளதா?

**பதில்** அனல் மின்நிலையங்கள் அமைப்பதற்கு 3 ஜோடி வரையறைகள் உள்ளன

1. EIA அறிவிக்கை 2006ல் இந்த வரையறைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.
2. மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தொழிற்சாலை அமைவதற்கான வழிகாட்டுதல்கள்
3. மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் தொழிற்சாலை அமைவதற்கான விதிகள்

1. EIA அறிவிக்கை 2006ன்படி 500மெகாவாட்டிற்கு குறைவான மின் உற்பத்தி செய்கின்ற அனல்மின் நிலையங்களுக்கு, சுற்றுச்சூழல் அனுமதி அளித்துள்ள மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பு, அம்மின் நிலையங்கள், கீழ்கண்ட பகுதிகளிலிருந்து 10 கி.மீ தூரத்திற்குள் இருந்தால், MoEFயிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

- வன உயிர் (பாதுகாப்பு) சட்டம் 1972ன் கீழ் பாதுகாக்கப்பட்ட பகுதிகள்
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள கடுமையாக மாசுபடுத்தும் பகுதிகள் என காலத்திற்கு காலம் அறிவிக்கப்படுபவை.
- அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மென்மையான பகுதிகள்
- மாநிலங்களுக்கிடையிலான எல்லைகள் மற்றும் சர்வதேச எல்லைகள்

கடந்த 2013 அக்டோபரில் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியமானது, கீழ்க்கண்ட பகுதிகள் கடுமையாக மாசுபடுத்தப்பட்ட பகுதிகள் என்றும் இப்பகுதியில் அனல் மின்நிலையங்கள் அமைக்கப்படக்கூடாது என்றும் அறிவித்துள்ளது:

- அங்கிலேஸ்வர் (குஜராத்)
- சந்திராப்பூர் (மஹாராஷ்டிரா)
- பாலி (இராஜஸ்தான்)
- வாத்வா (குஜராத்)
- வேலூர் (தமிழ்நாடு)
- நஜாப்கார் டிரெய் பேசின் (டில்லி)
- ஜோத்பூர் (இராஜஸ்தான்)

இத்துடன் மாநில அரசுகள் வளர்ச்சி நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ள பகுதிகள் கொண்ட ஒரு பட்டியலையும் கொண்டுள்ளது.

தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது சில குறிப்பிட்ட ஆறுகளின் கரையிலிருந்து 1 கிலோ மீட்டருக்குள்ளும் (கீழ்க்கண்ட இணையதளத்திற்கு சென்று காண்க) காவிரி மற்றும் அதன் துணை நதிகள்–பெண்ணையாறு, பாலாறு, வைகை மற்றும் தாமிரபரணி ஆகிய ஆறுகளின் கரைகளிலிருந்து 5கி.மீட்டருக்குள் அதிகமாக மாசுபடுத்தும் தொழிற்சாலைகளை (அனல் மின்நிலையங்களும் உள்ளடங்கும்) ஒரு உத்திரவின் மூலமாக தடை செய்துள்ளது.

http://www.tnpcb.gov.in/GOI.html

http://www.pcboac.tn.nic.in/Docu/Gos.pdf

ஆந்திராவின் SPCB, எந்த ஒரு தொழிற்சாலையின் எல்லைக்கும், தேசிய நெடுஞ்சாலையின் எல்லைக்கும் இடையில் 100மீட்டரும், மாநில நெடுஞ்சாலையிலிருந்து 50 மீட்டரும் கிராமப்புற

சாலைகளிலிருந்து 25 மீட்டரும் இடைவெளி விடப்படவேண்டும் என்று கூறுகிறது. இந்த வழிகாட்டுதல்கள் தொழிற்சாலை பேட்டையில் உள்ள மனைகளுக்கு பொருந்தாது.[11]

கர்நாடகாவில் எந்த புதிய தொழிற்சாலையும் கீழ்க்கண்ட ஆறுகளின் கரையிலிருந்து 1.5 கி.மீ தூரத்தில் இருக்க வேண்டும்.

- காவிரி, கபினி, ஆர்கவதி, சிம்சா, பெண்ணாறு, ஹேமாவதி, லட்சுமணன் தீர்த்தம், குண்டல ஆறு, லோகாபவானி, பாலாறு, துங்கபத்ரா, கிருஷ்ணா, பீமா, வரதா, காட்டபிரபா, மாலாபிரபா, வேதவதி, கரஞ்சா, ஹகரி
- மேற்கு நோக்கி பாயும் ஓடைகள் அல்லது நதிகள்
- பருவகாலத்திலோ அல்லது ஆண்டு முழுவதும் நீரை கொண்டு வரும் ஓடைகள் / ஆறுகள்
- அனைத்துப் பெரிய அணைகள்
- குடிநீருக்கான நிலத்தின் நீர் ஆதாரங்கள்
- அனைத்து நீர்ப்பாசன கால்வாய்கள்
- எந்த நீர் நிலை குடிநீருக்கான ஆதரமாக இருந்தால், அதிலிருந்து மாசு வெளியிடப்படுவது நீரை பாதிக்கப்படாமல் உள்ள ஆழமானது நிர்ணயிக்கப்படும்
- அனல் மின்நிலையங்கள் நகராட்சி அல்லது நகர எல்லைக்குள்ளும், குடியிருப்புகள் உள்ள பகுதியிலும் அனுமதிக்கப்பட மாட்டாது.[12]

தொழிற்சாலை அமைவதற்கான இடம் குறித்த வழிகாட்டுதல்களுக்கு, அந்தந்த மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியங்களின் தகவல்களை பார்க்கவும்.

**கேள்வி** செப்பி என்ற (CEPI – Comprehensive Environment – Pollution Index) முழுமையான சுற்றுச்சூழல் மாசு புள்ளி விபர பட்டியல் என்றால் என்ன? அது எவ்வாறு அனல் மின் நிலையங்களின் இருப்பிடத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

**பதில்:** ஒரு இடத்தில் உள்ள சுற்றுச்சூழல் தரத்தை அளவிடுவதற்கான எண்ணே செப்பி ஆகும். மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியமானது CPCB செப்பி மதிப்பீடுகள் CPCBயினால் ஒவ்வொரு கால இடைவெளியில் கணக்கிடப்பட்டு கடுமையாக மாசுக்குள்ளான பகுதிகளும் தொழிற்சாலை தொகுப்பு பகுதிகளும் அவர்களின் பகுதியிலுள்ள காற்று நிலம் மற்றும் நீரினை கண்காணிப்பதன் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றன.

செப்பி மதிப்பீடு என்பது இத்தொழிற்சாலையின் தொகுப்புகளை அடையாளப்படுத்துவதற்கான ஒரு முக்கிய கருவியாகும். அங்குதான் வளர்ச்சி நடவடிக்கைகள், மாசு அளவுகளால் கட்டுபடுத்தப்பட்டுள்ளன. 2010ல் MoEFயானது 43 கடுமையான மாசுக்குள்ளான பகுதிகளில் திட்டங்கள் அமையவிருந்தால் அவற்றை பரிசீலித்து சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கத் தடை விதித்துள்ளது. இது கடந்த 2013ல் 7 தொகுப்புகளாக குறைந்துவிட்டது. அனல் மின்நிலையங்கள் தடை விதிக்கப்பட்ட அந்த இடங்களில் அமைக்கப்பட முடியாது.

11 http://www.appcb.ap.nic.in/cm/siting.html

12 http://kspcb.gov.in/sitinguidelines.html

### 2.4.1. (இ) நிலக்கரி போக்குவரத்து

**கேள்வி** துறைமுகத்திலிருந்து எப்படி நிலக்கரியானது பொதுவாக அனல் மின் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது?

**பதில்** சாலை, இரயில் அல்லது மூடிய கன்வேயர் பெல்ட்டுகள் மூலமாக கொண்டு செல்லப்படுகின்றது. நிலக்கரி போக்குவரத்துக்கான தூரம் ஒரு நீண்ட தொலைவாக இருக்கும் பட்சத்தில் திட்டத்தின் சார்பாளர் திட்ட இடத்திற்கு இரயிலில்கொண்டு செல்வது குறித்து மதிப்பிடுவார். சரக்கை குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்வதைப் பொறுத்தவரை சிலோ (silo) அல்லது கன்வேயர் பெல்ட்டின் மூலமாக மேற்கொள்ளலாம்.

## 2.4.2. சுற்றுச்சூழல் அனுமதியும் புதிய மின்நிலையத்தின் EIAக்கான நடைமுறைகளும்

### 2.4.2.(a) பொது கலந்தாய்வு நடவடிக்கைகள்

பொதுக்கலந்தாய்வு நடவடிக்கைகளில் சிறப்பாக பங்கேற்பது குறித்த அத்தியாயத்தை காண்க.

### 2.4.2(b) சுற்றுச்சூழல் அனுமதிக்கு முன்னர்

**கேள்வி** திட்டஅமைவிடநிலம் தொடர்பாக திட்டத்தின் சார்பாளர் சுற்றுச்சூழல் அனுமதிக்கு முன்னதாக என்ன நடவடிக்கைகளில் ஈடுபடலாம்?

**பதில்** சுற்றுச்சூழல் அனுமதிக்கு முன்னதாக MoEFயின் ஒரு சுற்றறிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைள்[13]

- அமைவிடம் ஆக்கிரமிக்குள்ளாவதை தடுக்க வேலி அமைப்பது
- காவலாளிகளுக்கு தற்காலிக தங்குமிடங்கள் கட்டுவது

**கேள்வி** ஒரு மின்நிலையம் சுற்றுச்சூழல் அனுமதி பெற எவ்வளவு காலம் ஆகும்?

**பதில்** மின் நிலையத்தின் அளவைப் பொறுத்தது. சுற்றுச்சூழல் அனுமதிக்கான மனு அளித்தவுடன் வழக்கமாக 1 – 1 1/2 ஆண்டுகள் ஆகும். EIA அறிவிக்கையின்படி கீழ்க்கண்ட நடவடிக்கைள் கால வரம்பிற்குட்பட்டவை.

**செயல் வரம்பு (ToR)** திட்டத்தின் சார்பாளர்கள் மனு சமர்ப்பித்த 60 நாட்களுக்குள் (ToRஐ) செயல் வரம்பை அளிக்க வேண்டும்.

- **பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்துவது**
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்துவதற்கான வேண்டுதல் மனுவை SPCB பெற்ற 45 நாட்களுக்குள் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கை MoEF/ மாநில சுற்றுச்சூழல் மதிப்பீடு, அதிகார அமைப்பிற்கு (SEIAA)சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- **சுற்றுச்சூழல் அனுமதி: திட்டத்தின் சார்பாளர்களின் இறுதி** EIA சமர்ப்பிக்கப்பட்டு 105 நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும்.

13 http://envfor.nic.in/downloads/public.information/Act.prior-EC.pdf

### 2.4.2.(c) நிலக்கரி கலப்பும், நிலக்கரிக்கான இணைப்பும்

**கேள்வி** ஒரு குறிப்பிட்ட நிலக்கரி கலப்பிற்காக, சுற்றுச்சூழல் அனுமதி திட்டத்தின் சார்பாளர்களினால் பெறப்பட்டது. அந்த நிலக்கரி கலப்பு மாற்றப்பட வேண்டுமெனில், திட்டத்தின் சார்பாளர் என்ன செய்ய வேண்டும்?

**பதில்** திட்டத்தின் சார்பாளர் புதிய நிலக்கரி கலப்பிற்காக புதிய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு மனு செய்ய வேண்டும். (இது EIA அறிவிக்கையில் 2(iii) குறிப்பிடப்பட்டுள்ளது)

**கேள்வி** திட்டத்தின் சார்பாளர்கள் நிலக்கரிக்கான இணைப்பை சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு முன்னதாக பெறலாமா?

**பதில்** ஆம் உண்மையில் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு, இதுமுன் நிபந்தனையாக உள்ளது. நிலக்கரி ஆதாரத்திற்கான வனம் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதியானது நிலக்கரி சுரங்கத்துடனோ அல்லது நிலக்கரி சேமிப்பு நிறுவனத்துடனோ இணைப்பு பெற்று இருந்தால்தான் வழங்கப்படும். இது EIAயில் குறிப்பிட்டு கூறப்படவேண்டும். இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியானது, பயன்படுத்தப்படுமானால், திட்டத்தின் சார்பாளர்களுக்கும், நிலக்கரி அளிப்பவருக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு அது EIAயில் சேர்க்கப்பட வேண்டும்.[14]

நிலக்கரிக்கான இணைப்பு ஒரு குறிப்பான சுரங்கத்தினோடோ, ஒரு சுரங்க குழுக்களோடு அல்லது சுரங்க அமைச்சகத்தின் நிலை இணைப்பு குழு அங்கீகரிக்கும் ஒரு நிலக்கரி தொகுப்பின் மூலமாகவோ அல்லது எரிபொருள் விநியோக ஒப்பந்தத்தின் மூலமாகவோ இருக்கலாம்.

**கேள்வி** நிலக்கரியின் தரம் மற்றும் வகை (அதாவது நிலக்கரியின் தர அளவுகோல்) சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டதற்கான ஒரு வகையாக இல்லாமல் வேறுபட்ட நிலக்கரி தேவைப்பட்டால், திட்டத்தின் சார்பாளர் என்ன செய்ய வேண்டும்?

**பதில்** நிலக்கரியின் அளவுகோல்கள் மாறினால் அதை திட்டத்தின் சார்பாளர்கள் MoEFன் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும். MoEF மதிப்பீடு தேவைப்பட்டால், கூடுதல் நிபந்தனை விதிக்கும்.

### 2.4.2.(d) EC நடவடிக்கைகளில் பொது அதிகார அமைப்பு

**கேள்வி** பொது அதிகார அமைப்புகளில் அல்லது அரசு அலுவலகங்களில் எவை சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதில் ஈடுபடுகின்றன?

**பதில்** MoEF மற்றும் SEIAA ஆகியவை சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கும் ஒழுங்குமுறை அமைப்புகள் ஆகும். A வகை திட்டங்களுக்கு அனுமதி அளிப்பது MoEF ஆகும். SEIAA B வகை திட்டங்களுக்கு அனுமதி அளிக்கின்றது. SPCBக்கு பொதுக்கலந்தாய்வு நடத்துவதற்கான பொறுப்பை MoEFஐ அளித்துள்ளது. MoEFக்கு பொதுக்கலந்தாய்வு அறிக்கையை SPCB சமர்ப்பிக்கும்.

14 http://moef.nic.in/downloads/public-information/local-blocks.pdf

**கேள்வி** SEIAA மாநில அமைப்பா அல்லது மத்திய அரசின் அமைப்பா?

**பதில்** இது மத்திய அரசின் அமைப்பாகும். இருப்பினும், அதனுடைய உறுப்பினர் செயலரும், தலைவரும் அந்தந்த மாநில அரசினால் நியமனம் செய்யப்படுகின்றனர். சம்பந்தப்பட்ட மாநில அரசின் பிரதிநிதியாக உறுப்பினர் செயலர் பணிபுரிவார்.

### 2.4.2.(e) உள்ளூர் மொழியில் ஆவணங்கள் கிடைக்க வேண்டும்

**கேள்வி** EIA நடவடிக்கையில் ஆங்கிலத்துடன், உள்ளூர் மொழியில் என்ன ஆவணங்கள் கிடைக்கும்?

**பதில்** கிடைக்கக்கூடிய ஆவணங்கள்

1. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு முன்னதாக EIAயின் முன்வரைவு ஆவணத்தின் சுருக்கத்தொகுப்பு
2. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின்போது, மக்கள் அளிக்கும் அறிக்கைகளும், அதற்கு திட்டத்தின் சார்பாளர்கள் அளிக்கும் பதில்களும், இவை மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினால் தொகுக்கப்படும்.

### 2.4.2.(f) திட்டத்தின் அமைவிடத்திற்கு வருகை

**கேள்வி** ஆய்வுக்காகவோ அல்லது கணக்கெடுப்பிற்காகவோ திட்டத்தின் அமைவிடத்திற்கு, யார் வருகை தருவர்?

**பதில்** அங்கீகரிக்கப்பட்ட EIA ஆலோசகர்கள் திட்ட அமைவிடத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கணக்கெடுப்புகள் மேற்கொள்வர். தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி,[15] EIA ஆலோசகர்கள் பகுதியின் சில முதன்மை சமூக பொருளாதார புள்ளி விபரங்களைத் திரட்டி அப்பகுதி மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தை தயாரிப்பர். செயல்வரம்பு வரையறை திட்ட அமைவிடத்திலிருந்து தூரத்தை குறிப்பிடும் அதன் மூலமாக EIAக்கான கணக்கெடுப்பை மேற்கொள்ளும்.

**கேள்வி** எப்போது EAC/SEAC உறுப்பினர்கள் திட்ட அமைவிடத்திற்கு வருகை தருவர்?

EAC/SEACயின் துணைக்குழு உறுப்பினர்கள் சுற்றுச்சூழல் அனுமதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த கட்டத்திலும் திட்ட அமைவிடத்தை பார்வையிடலாம். பொதுவாக ToR வழங்கப்படுவதற்கு முன்னும் மற்றும் / அல்லது முன்வரைவு EIA சமர்ப்பிக்கப்பட்டதற்கு பின்னரோ மேற்கொள்ளப்படும்.

### 2.4.2(g) செயல்வரம்பு (ToR)

**கேள்வி** செயல்வரம்பு அறிக்கையையும் EIA யின் அளவீடுகளையும் யார் தயாரிப்பார்?

**பதில்** EAC/SEAC.

செயல்வரம்பை அளிக்கும் EAC/SEAC அமைப்புகள் EIAயின் தர அளவுகோல்களை குறிப்பிடும் (உதாரணமாக, ஆய்வின் காலம் பருவகாலங்களின் எண்ணிக்கை ஆய்வின் பரப்பு (திட்டஅமைவிடத்திலிருந்து கிலோ மீட்டர்களின் அளவு)

15 Link to Judgment http://www.indiakanoon.org/doc/161693875

## 2.4.2.(h) இறுதி EIA

**கேள்வி** முன்வரைவு EIAயிற்கும், இறுதி EIAற்கும் இடையில் அனுமதிக்கக்கூடிய வேறுபாட்டின் அளவு என்ன?

**பதில்** இறுதி EIA ஆனது, முன்வரை EIAயிலிருந்து பெரிய அளவில் வேறுபாடு கொண்டிருக்காது. பொது கலந்தாய்வின் ஒரு பகுதியாக அங்கு மேற்கொள்ளப்படும் அவசியமான மாற்றங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

EIA தயாராகி, பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் கிடைக்கப் பெறுவது முன்வரைவு EIA ஆகும். அனைத்து அடிப்படை ஆய்வு தகவலும், சுற்றுச்சூழல் தாக்க குறைப்பு நடவடிக்கைகளும், செயல் வரம்பில் குறிப்பிட்ட எந்த ஒரு குறிப்பிட்ட சிறப்பான ஆய்வு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும்.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்குப் பின்னர் EIA திருத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும்போது அதில், மக்களின் பிரச்சனைகளும், அந்த பிரச்சனைகளை, தீர்ப்பதற்கான கூடுதல் நடவடிக்கைகளும், இறுதி EIAயில் உள்ளடக்கப்பட்டிருக்கும். அடிப்படைத்தகவலில் மாற்றம் இல்லை அல்லது செயல் வரம்பு வழிகாட்டியபடி சிறப்பான ஆய்வு தகவலை சேர்த்தல் ஆகியவை பொது கலந்தாய்விற்கு பின்னர் சேர்க்கப்பட வேண்டும்.

**கேள்வி** திட்ட அமைவிடத்தின் சுற்றுச்சூழல் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

**பதில்** ஆம். திட்ட அமைவிடம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலும், அங்கீகரிக்கப்பட்ட EIA ஆலோசகரினால் அடிப்படை ஆய்வின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படும். EIA ஆய்வுக்குழுக்கான பகுதி ஆய்வானது, MoEF/SEIAAயினால் அளிக்கப்பட்டுள்ள செயல்வரம்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. EIAயில் சுற்றுச்சூழலின் வெவ்வேறு கூறுகள் இருக்கும் அவற்றில் வீசுகின்ற காற்றின்தரம், சப்தம், நிலத்தடி நீர், உயிரியல், நிலம் மற்றும் சமூக பொருளாதார அம்சங்கள் உள்ளிட்டு 12 செயல்பாட்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

**கேள்வி** EIA ஆய்வு மேற்கொள்ள எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளப்படும்?

**பதில்** இது செயல்வரம்பில் குறிப்பிட்டுள்ளபடி, ஆய்வின் பரப்பை பொறுத்தது ஆகும். EIA ஆய்வு காலம் 3 மாதங்களாகும் (1 பருவ காலம்) அல்லது 1 ஆண்டு காலம் வரை ஆகும்.

**கேள்வி** பொதுமக்களின் பரிசீலனைக்கு இறுதி EIA வரைவு கிடைக்குமா?

**பதில்** கடந்த 2013 ஆகஸ்டில் வெளியிடப்பட்ட MoEFயின் ஒரு சுற்றறிக்கை, MoEF/SEIAA சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதற்கு முன்னதாக இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும் என்று கூறுகிறது. இறுதி EIAயில் ஏதாவது ஆட்சேபத்திற்குரிய பகுதி இருந்தால் MoEFக்கு புகார் அளிக்கலாம் அல்லது தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திடம் மனு தாக்கல் செய்யலாம்.

## 2.4.2 (i) EIA கலந்தாய்வாளர்

**கேள்வி** EIA ஆலோசகரின் தேவை என்ன? அவரின் பொறுப்புகள் என்ன?

**பதில்** திட்டமிடப்பட்டுள்ள மின் நிலையத்தின் சுற்றுச்சூழல் தாக்கங்களை மதிப்பிட திட்டத்தின் சார்பாளர்கள் தேசிய கல்வி மற்றும் பயிற்சி அங்கீகரிப்பு வாரியம் மற்றும் இந்திய தர வாரியம் ஆகியவற்றினால் அங்கீகாரம் பெற்ற ஒரு கலந்தாய்வாளரை நியமிக்க வேண்டும்.

ஒரு திட்டத்திற்கு EIAயானது, அங்கீகரிக்கப்படாத கலந்தாய்வாளரால் மேற்கொள்ளப்பட்டால் சுற்றுச்சூழல் அனுமதி கிடைக்காது. அனல்மின் நிலையங்களுக்கென EIA மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட கலந்தாய்வாளர், அந்த துறைக்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட்டவராக இருப்பார். அங்கீகரிக்கப்பட்ட கலந்தாய்வாளர்களின் பட்டியல் கீழ்க்கண்ட இணையதளத்தில் காணலாம்.

*http://nabet.qci.org.in/environment/pop.asp?file:documents/Annexure7.pdf*

**கேள்வி** ஒரு திட்டத்திற்கான EIA கலந்தாய்வாளர் குழுவிற்கான உறுப்பினர்களின் சேர்ப்பும் பங்களிப்பும் என்ன?

**பதில்** EIA கலந்தாய்வாளர் குழுவானது EIA நடவடிக்கைகள், விதிகள், சட்டங்கள், துறை குறித்த அறிவிப்பு, துறைதொடர்பான சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஆகியவை குறித்த அறிவும், திட்டம், தேர்வு மற்றும் EIA குழுவை வழிநடத்திச் செல்லும் தலைமைப் பண்பும் கொண்ட EIA ஒருங்கிணைப்பாளரினால் தலைமை தாங்கிச் செயல்படும். EIA ஒருங்கிணைப்பாளர் தவிர, அக்குழுவானது கீழ்க்கண்ட 12 செயல்பாட்டு பகுதிகளின் நிபுணர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அவையாவன:

1. நிலப்பயன்பாடு
2. காற்று மாசு கண்காணிப்பு, தடுப்பு மற்றும் கட்டுப்பாடு
3. வானிலை, காற்று தர மாதிரி மற்றும் முன்கூட்டியே கணிப்பு
4. நீர் மாசு கண்காணிப்பு, தடுப்பு மற்றும் கட்டுப்பாடு
5. சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கம்
6. சப்தம் மற்றும் அதிர்வு
7. சமூக பொருளாதார அம்சங்கள்
8. நீரியல், நிலத்தடி நீர் மற்றும் பராமரிப்பு
9. நிலவியல்
10. மண் பராமரிப்பு
11. அபாயங்களும், ஆபத்துக்கால மேலாண்மையும்
12. திடக்கழிவு மற்றும் அபாயக் கழிவு மேலாண்மை (நகராட்சி திடக்கழிவுகள் உள்ளிட்டவை)

ஒரு நிபுணருக்கான குறைந்தபட்ச தகுதிகள் பின்வரும் இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ளது *http://nabet.qci.org.in/environment/pop.asp?filedocuments/EIAscheme.pdf&heading=About%20EIA%20scheme*

ஒரு குழு உறுப்பினர் அவசியமான தகுதி வரையறையுடன் இருந்தால் EIA ஒருங்கிணைப்பாளராகவும், துறைசார்ந்த நிபுணராகவும் இருக்கலாம். ஒரு நிபுணர் துறை நிபுணராக அதிகபட்சமாக 4 துறைகளுக்கு இருக்க வேண்டும் அல்லது ஒரு EIA ஒருங்கிணைப்பாளராக அதிகபட்சமாக 5 துறைகளுக்கு இருக்க வேண்டும்.

### 2.4.2. (j) சுற்றுச்சூழல் அனுமதியளிக்கப்பட்ட பின்னர்

**கேள்வி** சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கப்பட்டவுடன் திட்டத்தின் சார்பாளர் மின் நிலையத்தைக் கட்டத் தொடங்கிவிடலமா?

**பதில்** இல்லை. திட்டத்தின் சார்பாளர்கள் அந்தந்த மாநில SPCBயின் ஒப்புதல் பெறுவதற்கு

மனு செய்ய வேண்டும். ஒப்புதல் பெற்ற பின்னர், மின் நிலையத்தை கட்டுவதை தொடங்கலாம். மின் நிலையத்தின் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு முன்னர் SPCB யிடமிருந்து செயல்படுவதற்கான ஒப்புதல் பெறவேண்டும்.

### 2.4.2. (k) புகைக்கூண்டின் உயரம்

**கேள்வி** புகைக்கூண்டின் உயரங்களுக்கு எந்த ஒழுங்கும் இருக்கிறதா?

**பதில்** அனல் மின் நிலையங்களுக்கான தேவையான உயரம் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின் நிலையத்தின் திறன் புகைக்கூண்டின் உயரம்

500 மெகாவாட்டிற்கும் 275 மீட்டர்கள்

210 மெகாவாட்டிற்கும்–500 மெகாவாட்டிற்கும் இடையில் 220 மீட்டர்கள்

210 மெகாவாட்டிற்குக் குறைவான உயரம் H=14.Q.0.3 (Qஆனது ஒரு மணிநேரத்திற்கு சல்பர் டை ஆக்ஸைடு வெளியேறும் அளவு (கிலோ கிராம்), Hஎன்பது உயரம் மீட்டர்களில்)

### 2.4.2.(l) அனுமதிக்கப்பட்ட மாசின் அளவுகள்

**கேள்வி** அனல் மின்நிலையங்களின் அனுமதிக்கப்பட்ட மாசு அளவுகள் என்ன?

**பதில்** சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பாணைகளில் வெளியிடப்படும் சுற்றுச்சூழல் மாசுக்களின் தரங்கள் குறிப்பிடப்படும் அனல் மின் நிலையங்களுக்கான, தொழில்நுட்ப EIA வழிகாட்டும் கையேட்டின், பின் இணைப்புகளில் வெவ்வேறு தர அளவுகளின் தொகுப்பைக் காணலாம்.

இக்கையேட்டை கீழ்க்கண்ட இணையதளத்தில் காண்க

*http://environmentclearance.nic.in/writeraddata/form-1A/HomeLinks/TGMThermal%20power%20plants010910_NK.pdf*

### 2.4.2.(m) நிலம் கையகப்படுத்துதல்

**கேள்வி** திட்டத்தின் சார்பாளர் எந்தக் கட்டத்தில், திட்டத்திற்காக நிலத்தை கையகப்படுத்த வேண்டும்?

**பதில்** சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு முன்னரேகூட திட்டத்தின் சார்பாளர்களினால் நிலம் கையகப்படுத்துதல் தொடங்கிவிடுகிறது. இருப்பினும், திட்டத்தின் சார்பாளர் இக்கட்டத்தில் திட்டம் அமைவிடத்திற்கான அனைத்து நிலத்தை வாங்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அங்கீகரிக்கப்பட்ட EIAகலந்தாய்வாளர் அமைப்பு, சமூக பொருளாதார பிரச்சனைகளையும் மறு குடியமர்வு மற்றும் மறுவாழ்வு குறித்து ஆய்வு செய்ய வேண்டிய விசயங்களாகும்.

**கேள்வி**திட்டத்திற்கான நிலத்தின் விலைகள் எப்படி முடிவு செய்யப்படும்?

**பதில்** நியாயமான நஷ்ட ஈடு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான உரிமையானது, சமீபத்திய சட்டமான நிலம் கையப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு சட்டம் 2013ன் கீழ் உள்ளது. இச்சட்டத்தின்கீழ் நஷ்ட ஈட்டைக் கணக்கிடுவதற்கு ஒரு சூத்திரம் தரப்பட்டு உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் இது சரியான முறையில் பின்பற்றப்படுவதை உறுதி செய்திடவேண்டும்.

### 2.4.3.இருக்கின்ற மின்நிலையங்கள்

**கேள்வி** பசுமை நிலை EIA மற்றும் பழுப்புநில EIAக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

**பதில்** முன்மொழியப்பட்டுள்ள திட்டமானது புதியதாக ஒரு இடத்தில் அமைக்கப்படுவதாக இருப்பின், அது பசுமை நில திட்டம் என்றழைக்கப்படுகிறது. இத்தகையத் திட்டம், திட்ட அமைவிடத்தின் அடிப்படை ஆய்வைக் கோருகிறது. அது பணியை தொடங்கியவுடன் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டையும், சூழல் தாக்க குறைப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கும் மாறுதல் குறித்தும் ஆய்வை கோருகிறது. ஏற்கனவே செயல்படும் திட்டத்தின் விரிவாக்கமே பழுப்புநில திட்டம். இத்தகைய திட்டங்களுக்கு, அடிப்படை ஆய்வானது, இருக்கின்ற சுற்றுச்சூழல் தாக்க குறைப்பு நடவடிக்கைள், சுற்றுச்சூழல் அனுமதியிலுள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்படுவது உட்பட, முழுமையான தாக்க மதிப்பீடு மற்றும் தேவையான தாக்க குறைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டு அனைத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

**கேள்வி** நிறுவப்பட்ட மின் நிலையங்களை எவ்வாறு கண்காணிப்பது?

**பதில்** அனல் மின் நிலையங்கள் உட்பட அனைத்து தொழிற்சாலைகளையும், ஒவ்வொரு கால இடைவெளியிலும் SPCBயானது ஆய்வை மேற்கொள்ள வேண்டும். அந்த தொழிற்சாலைகள் அனுமதிக்கப்பட்ட மாசு அளவுகளை வெளியிடுகிறதா? சுற்றுச்சூழல் அனுமதியில் உள்ள மற்ற நிபந்தனைகளை பின்பற்றுகிறதா என்பதை உறுதி செய்ய மேற்பார்வை ஆய்வு செய்ய வேண்டும். திட்டத்தின் சார்பாளர் கீழ்க்கண்ட பின்பற்றுதல் அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்

- SPCBக்கு காலாண்டு கண்காணிப்பு அறிக்கை
- MoEFயின் பகுதி அலுவலகத்திற்கு அரையாண்டு பின்பற்றுதல் நிலை அறிக்கை (compliance status report)
- மத்திய மின்சார அதிகார அமைப்பிற்கு ஒரு குறிப்பிட்ட படிவத்தில் ஆண்டறிக்கையும் (எரிசாம்பல் பயன்படுத்தும் விதியின்கீழ்)SPCBற்கு ஒரு நகலும் அனுப்பப்பட வேண்டும்
- SPCBற்கு ஆண்டு சுற்றுச்சூழல் அறிக்கையும்
- SPCBகேட்கும் கூடுதல் அறிக்கைகள் (மக்களின் புகார்களின் அடிப்படையில்)

**கேள்வி** பின்பற்றுதல் அறிக்கைகள் என்ன கொண்டிருக்கும்? அவற்றை ஒருவர் எப்படி பெறமுடியும்?

**பதில்** ஒவ்வொரு அனல் மின் நிலையத்திற்கும் சுற்றுச்சூழல் அனுமதியானது குறிப்பிட்ட நிபந்தனைகளைக்கொண்டிருக்கவேண்டும்.அவை MoEF/SEIAAற்குசமர்ப்பிக்கப்படும் பின்பற்றுதல் அறிக்கைகளில் இவை இணைக்கப்பட்டும், ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்க வேண்டும். இந்த அறிக்கைளை பொதுமக்களின் பார்வைக்கும் முன் வைப்பதற்கு ஏதுவாக, சமீபத்திய பின்பற்றுதல் அறிக்கையானது MoEF/SEIAAஇணையதளத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும். MoEF/SEIAA பின்பற்றுதல் அறிக்கையின் நகலானது, பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க கிடைக்கச் செய்ய வேண்டும்.

**கேள்வி** பொது மக்கள் பெறக்கூடிய மற்ற ஆவணங்கள் என்ன?

**பதில்** SPCBயிடம் சமர்ப்பிக்கப்பட்ட காலாண்டு பின்பற்றுதல் அறிக்கை

SPCB சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு சுற்றுச்சூழல் அறிக்கை

மத்திய மின்சார அதிகார அமைப்புக்கும் SPCBமற்றும் MoEFற்கும் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு எரிசாம்பல் பயன்படுத்துதல் அறிக்கை

### 2.4.4. மற்ற அனுமதிகள்

#### 2.4.4.(அ). கடற்கரை மண்டல ஒழுங்குமுறை (CRZ) அனுமதி

**கேள்வி** CRZ அனுமதி என்றால் என்ன? அதற்கும் EIAக்கும் என்ன தொடர்பு?

**பதில்** கடற்கரைக்கு அருகில் அமையவிருக்கும் திட்டங்களுக்கு CRZ அனுமதி தேவை. CRZ அறிவிக்கை 2011 ஆனது, எங்கு CRZ அனுமதி தேவைப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறது. திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையம் CRZ பகுதிக்குள் அமையவிருக்கும் பட்சத்தில், CRZ அனுமதிக்கு மாநில கடற்கரை மண்டல மேலாண்மை அதிகார அமைப்பின் சட்டங்களின் நிகழ்ச்சி குறிப்புகள், அதனுடைய இணையதளத்தில் இடப்பட வேண்டும். அந்த இணையதளமே திட்டமானது CRZ அனுமதிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதைக் காட்டும்.

#### 2.4.4.(ஆ) வன அனுமதி

**கேள்வி** வன அனுமதியை யார் அளிப்பார்?

**பதில்** வன பராமரிப்புச் சட்டம் 1980ன் பிரிவு (2)ன் கீழ் மத்திய அரசானது வன அனுமதியை அளிக்கிறது.

#### 2.4.4.(இ) கூடுதல் அனுமதிகள்

**கேள்வி** MoEFயின்சுற்றுச்சூழல் அனுமதி நீங்கலாக மற்ற அனுமதிகள் பெற என்ன தேவைப்படும்?

**பதில்** தேவைப்படும் மற்ற அனுமதிகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்

1. தனது எல்கைக்குள் பஞ்சாயத்து அமைப்பு வழங்கும் அனல் மின் நிலையத்தை அமைத்துக்கொள்ள ‘ஆட்சேபனை இல்லை’ சான்றிதழ்
2. சம்பந்தப்பட்ட SPCBயிடமிருந்து மின் நிலையத்தை அமைத்திடவும் இயக்கிடவும் ஒப்புதல் பெற வேண்டும்.
3. நிலையத்திற்கான நீர் ஆதாரம் ஆறாக இருக்கும் பட்சத்தில் மாநில நீர் அதிகார அமைப்பிலிருந்து நீர் எடுப்பதற்கான அனுமதியை பெறவேண்டும்.
4. இந்திய விமான அமைப்பிலிருந்து புகைக்கூட்டிற்கான உயரத்திற்கு அனுமதி பெற வேண்டும்.
5. இந்திய ரயில்வே துறையிலிருந்து (சரக்கு) ரயில் போக்குவரத்து தண்டவாளம் அமைப்பதற்கான அனுமதி

### 2.4.5. குறைதீர்ப்பு

**கேள்வி** மின் நிலையத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதியின் எந்த அம்சம் குறித்து, எங்கு புகார் செய்வது?

**பதில்** EIA நடவடிக்கையின் எந்த கட்டத்திலும் உள்ள எந்த மீறல் குறித்தும், MoEFற்கு புகார் அளிக்கலாம். ஒரு திட்டத்திற்கு, மீறல்களுடன் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டிருந்தால், தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

**கேள்வி** இருக்கின்ற அனல் மின் நிலையம் குறித்த புகார்கள், அங்கு வேலைவாய்ப்பு, கார்ப்பரேட் சமூக பொறுப்பு மற்றும் பிற நிபந்தனைகள் பின்பற்றப்படவில்லை என்றால் எங்கு புகார் அளிப்பது?

**பதில்** சுற்றுச்சூழல் அனுமதியிலுள்ள நிபந்தனைகள் பின்பற்றப்படவில்லையெனில் ஆடிநுகு மற்றும் SPCBயின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும்.

**கேள்வி** தேசிய பசுமைத் தீர்ப்பாயம் என்றால் என்ன? (National Green Tribunal – TGT)

**பதில்** தேசிய பசுமைத் தீர்ப்பாயம் என்பது ஒரு நீதித்துறையின் அதிகாரங்களைப் பாதியளவு கொண்ட அமைப்பாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வனங்கள் மற்றும் பிற இயற்கை வளங்கள் பராமரிப்பு குறித்த வழக்குகளை விசாரிக்கும் அமைப்பாகும். தீர்ப்பாயத்தின் விசாரணை அமர்வுகளில் முதன்மை அமர்வு, டில்லியிலும் போபால் (மத்திய மண்டலம்) பூனா (மேற்கு மண்டலம்) கொல்கத்தா (கிழக்கு மண்டலம்)மற்றும் சென்னை (தெற்கு மண்டலம்) ஆகிய 4 இடங்களில் அமர்வுகள் நடைபெறுகின்றன.

**கேள்வி** தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் மனுக்களை தாக்கல் செய்வதற்கு கால வரம்பு உள்ளதா?

**பதில்** ஆம். தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்வது கால வரம்புக்குட்பட்டது. மனு தாக்கல் செய்வதற்கு 30நாட்களுக்குள்ளும் 90 நாட்களுக்கு நீட்டிக்கப்படவும் தாமதத்திற்கு சரியான காரணம் இருக்கும்பட்சத்தில் அனுமதிக்கப்படும். எந்தத் திட்டத்திற்கும் சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கப்பட்டதை எதிர்த்து முறையீடு செய்ய விரும்பும் நபர் சில விதிவிலக்குகள் நீங்கலாக சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் செய்ய வேண்டும்.

## 2.5 குறிப்பிடத்தகுந்த தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவுகள்

2.5.1. MoEF/SEIAAயின் இணையதளத்தில் சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் அதை வெளியிட வேண்டும்.

2.5.2. சுற்றுச்சூழல் அனுமதி MoEF இணையதளத்தில் வெளியிடப்பட்ட நாளானது, தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மனுதாக்கல் செய்வதற்கான கால வரம்பிற்கு கணக்கிடப்பட வேண்டும்

2.5.3. MoEF, ஒரு திட்டம் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்

2.5.4. சுற்றுச்சூழல் ரீதியாக மென்மையான பகுதி, மின் நிலையத்திற்கு அருகில் இருந்தால், ஒட்டு மொத்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (Cummulative Impact Assesment) மேற்கொள்ளப்பட வேண்டும்

2.5.5. MoEF ToR அறிக்கையை, EIA பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்

2.5.6. தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் பொது கருத்து கேட்டுணரும் கூட்டத்தை நடத்துவதற்கான ஆலோசனைகள்

2.5.7. பொதுமக்கள் கருத்து கேட்புணர் கூட்டம் என்பது திட்ட அமைவிடத்திற்கு அருகிலுள்ள உள்ளூர் மக்களுக்கு மட்டுமல்ல

2.5.8. SPCB திட்டம் குறித்த தகவலை தனது இணையதளத்தில் வெளியிட வேண்டும்

2.5.9. நிலக்கரியின் அணு கதிரியக்கம் குறித்து (செயல்வரம்பில்) ToRல் உள்ளடக்கி இருக்க வேண்டும்

2.5.10. திட்ட அமைவிடத்திலிருந்து, 1 கிலோ மீட்டருக்குள் பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட வேண்டும்

2.5.11. உள்ளூர் மக்களின் கவலைகள் எப்படி நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிய, இறுதி EIAஐ EAC பரிசீலிக்க வேண்டும்.

2.5.12. முன்வரைவு மற்றும் இறுதி EIAக்கு இடையில் கடுமையான வேறுபாடுகளை அனுமதிக்க கூடாது.

2.5.13. அடிப்படை சமூக பொருளாதார விபரங்கள் EIAயில் கண்டிப்பாக இடம்பெற வேண்டும்

2.5.14 MoEF, EACயின் மதிப்பிடும் முறையை பரிசீலிக்க வேண்டும்

### 2.5.1. MoEF/SEIAAயின் இணையதளத்தில் சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கப்பட்ட 7 நாட்களுக்குள் அதை வெளியிட வேண்டும்.

- சுற்றுச்சூழல் அனுமதியானது, அளிக்கப்பட்ட நாளிலிருந்து கூடிய விரைவில் 7 நாட்களுக்குள் இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

  MoEF/SEIAAயின் இணையதளமானது முறையாக பராமரிக்கப்பட வேண்டும்

- MoEF விதித்துள்ள சுற்றுச்சூழல் அனுமதியின் நிபந்தனைகளில் ஒன்று, அளிக்கப்பட்ட அனுமதியானது, EIAஅறிவிக்கை 2006ன்படி சம்பந்தப்பட்ட அனைவராலும் பரவலாக வெளியிடப்பட வேண்டும்

**வழக்கு தகவல்கள்: முறையீடு[1] 2013**

மேதா பட்கர் மற்றும் அவர்கள் எதிர் சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் பிறர்

தீர்ப்பு காண்பதற்கான இணைப்பு

*http://www.indiaenvironment portal.org.in/files/file/pench%20thermal%20project_11july2013_final_order_1.pdf*

தீர்ப்பு நாள்: ஜுலை 11, 2013

**2.5.2. சுற்றுச்சூழல் அனுமதி MoEF இணையதளத்தில் வெளியிடப்பட்ட நாளானது, தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மனுதாக்கல் செய்வதற்கான கால வரம்பிற்கு கணக்கிடப்பட வேண்டும்**

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் மனுக்கள், தாக்கல் செய்வதற்கான கால வரம்பு, உத்திரவு குறித்த தகவல் அளித்ததிலிருந்து தொடங்குகிறது. இந்த நாளானது (NGT சட்டம் பிரிவு 16)/MoEFதனது இணையதளத்தில் சுற்றுச்சூழல் அனுமதியை வெளியிட்டு அது பதிவிறக்கம் செய்யப்பட, எந்த தடையுமின்றி செய்யப்படும் நாளிலிருந்தும் மற்றும் அந்த உத்தரவு அதன் தகவல் பலகையில் வெளியிடப்பட்ட நாளிலிருந்தும் அல்லது

திட்டத்தின் சார்பாளர், சுற்றுச்சூழல் அனுமதியை, அவரது இணையதளத்தில் வெளியிட்டு அது பதிவிறக்கம் செய்யப்படவும், செய்தித்தாள்களில் வெளியிடவும் வேண்டும்

**வழக்கு விபரம் :** பரிசீலனை மனு 9 *of* 2013 மேலே குறிப்பிட்ட முறையீடு மனு.

மேதா பட்கர் மற்றும் பிறர் *Vs* சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் பிறர்

**தீர்ப்புக்கு இணைப்பிற்கு செல்க**

*http://www.greentribunal.gov.in/judgement/9_2013(RA)_28Nov2013_final_order.pdf*

**தீர்ப்பு நாள்:** நவம்பர் 28, 2013

**2.5.3. MoEF திட்டம் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும், பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்**

**2.5.4. சுற்றுச்சூழல் ரீதியாக மென்மையான பகுதி மின் நிலையத்திற்கு அருகில் இருந்தால் ஒட்டு மொத்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு** (cumulative impact assessment) **மேற்கொள்ளப்பட வேண்டும்**

1. EIA அறிக்கை நீங்கலாக, சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களும், திட்டத்தினை மதிப்பிடும்போது பரிசீலிக்கப்படும். பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கை, குறிப்பான ஆய்வுகளின் சுருக்கத் தொகுப்புகள் உள்ளிட்ட அனைத்தையும் தனது இணைய தளத்தில் வெளியிட வேண்டும்.
2. SPCBயும் தனது இணையதளத்தில், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட அறிக்கை, நிகழ்வு குறிப்புகள், மின் நிலையம் அமைக்கவும், இயக்கவும் அளிக்கப்பட்ட ஒப்புதல் மற்றும் பின்பற்றுதல் அறிக்கை மற்றும் இதர தொடர்புடைய தகவல்கள் வெளியிடப்பட வேண்டும்.
3. சுற்றுச்சூழல் அனுமதி நிபந்தனைகளைப் பின்பற்றுவது குறித்தும், ஆய்வுகளின் சுருக்கத் தொகுப்பு ஆகியவற்றையும், காலந்தோறும் அவற்றை புதுப்பித்து கூடுதல் தகவல்களையும், திட்டத்தின் சார்பாளர் தனது இணைய தளத்தில் வெளியிட வேண்டும்.
4. முன் எச்சரிக்கை கொள்கை மற்றும் நிலைத்த வளர்ச்சி அணுகுமுறை ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, ஒட்டுமொத்த தாக்க மதிப்பீடு ஆய்வுகள் ஆகியவற்றை மேற்கொள்ள

வேண்டும். மென்மையான சுற்றுச்சூழல் அமைப்பைக் கொண்ட பிச்சாவரம் அலையாத்திக் காடுகளுக்கும் அருகிலுள்ள உயிரியல் கடல் சூழலுக்கும் மோசமான பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க, போதுமான சுற்றுச்சூழல் தாக்க குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புகள் ஆகியவை ஆலோசனையாக முன் வைக்கப்படுகிறது.

**வழக்கு விபரங்கள் : முறையீடு எண் 17 *of* 2011*(t) NEAA No.*20 *of* 2010.**

**4 முருகானந்தம் மற்றும் பிறர்** Vs **மற்றும் பிறர்**

**தீர்ப்பைக் காண இணைப்புக்குச் செல்லவும்**

*http://www.ercindia.org/files/EIA_Review_TPP/judgements/NGT Muruganandam.pdf*

**தீர்ப்பு நாள்:** 23 மே 2012

**2.5.5. MoEF, ToR நிபந்தனைகளை, EIA பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும்**

**2.5.6. தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் பொது விசாரணை நடத்துவதற்கான ஆலோசனைகள்**

1. MoEF தனது இணையதளத்தில் ஏற்றுவதற்கு முன்னதாக, ஒரு கண்டிப்பான அமைப்பை உருவாக்கி, ToR முறையாக பின்பற்றப்பட்டதா என்பதை பரிசோதிக்க வேண்டும்.
2. அளிக்கப்பட்ட முன்வரைவு EIA, பொதுமக்கள் கருத்து கேட்புணர் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் ஆகியவற்றின் அடிப்படையில் MoEF இறுதி EIAஐ மதிப்பிட வேண்டும். அதை EACயின் மதிப்பீட்டிற்கு வைக்கப்படுவதற்கு முன்னதாக மேற்கொள்ள வேண்டும்.
3. MoEF, சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ், ஒரு திட்டத்திற்கான அனைத்து அனுமதிகளையும் வழங்கலாம். துண்டு துண்டாக அணுகுமுறையை கடைபிடிப்பது சுற்றுச்சூழல் ரீதியாகவும், சூழல் ரீதியாகவும், திட்டம் குறித்த முழுமையற்ற ஒரு பக்க பார்வையுமான மதிப்பீடே கிடைக்கும் என்பதால், இதை கைவிட்டுவிடலாம்.
4. ஒப்புதல் அளிப்பதற்கென ஒரு முறையை அறிமுகப்படுத்துவது, முன் வரைவு EIAக்கும் ToRக்கும் இடையிலான குழப்பத்தைத் தவிர்க்க அவசியமாகும்.
5. MoEF பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை உறுதிப்படுத்தவும், அதை மிகுந்த அர்த்தமுடையாக்கிடவும் கீழ்க்கண்ட ஆலோசனைகளை கடைபிடிக்கலாம்.
   - பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் கூடியிருக்கும் அனைத்து மக்களின் முன்னிலையில், திட்டத்தின் சார்பாளர் முன்வரைவு EIAஐ ஒவ்வொரு அம்சமாக வாசிக்க வேண்டும்.
   - கிராம பஞ்சாயத்து, சமிதி, சட்டப்பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற உள்ளூர் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்க கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். அவர்கள் திட்டத்தின் சாத்தியப்பாடு அல்லது சாத்தியமின்மை குறித்தும் பேசிய பின்னர் தங்களது எழுத்துப்பூர்வ பிரதிநிதத்துவங்களையும் முன் வைப்பர்
   - பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டமானது, முன்வரைவு EIA யிலுள்ள பிரச்சனைகள் மற்றும் அத்துடன் இணைந்த பிரச்சனைகளை மட்டுமே கண்டிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பேச விரும்பும் நபர்கள், தங்களது பெயர்களை ஒரு குறிப்பிட்ட படிவத்தில் அளிக்க வேண்டும். அப்படிவத்தில் அவரது பெயர், தந்தை அல்லது கணவர் பெயர், கிராமத்தின் பெயர், தாலுகா, பாதிக்கப்படும் நிலத்தின் பரப்பு, மற்றும் பேச விரும்பும் பொருள் குறித்து ஆகியவை படிவத்தில் இடம் பெற வேண்டும்.
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் இடத்தில், எந்த நபரும் கட்சிக் கொடிகளை பிடித்துக் கொண்டு உள்ளே வர அனுமதிக்கக்கூடாது. கட்சி கோஷங்களை எழுப்பிடவும் அனுமதிக்கக்கூடாது
- பேச விரும்புவர்கள், தனித்து சுற்றி வளைத்து அமைக்கப்பட்ட ஒரு வளைவுக்குள் அமர வைக்கப்பட்டும், அவர்களுக்கு பின்னால் பேச விரும்பாதவர் உட்காரவோ, நிற்கவோ கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்.
- பேசுவதற்கு பெயர் கொடுத்துள்ளவர்கள், ஒருவர், ஒருவராக மேடைக்கு அழைக்கப்பட்டு 5 நிமிடகால அவகாசத்திற்கு குறிப்பிட்டப் பொருளில், பேச அனுமதிக்கப்பட வேண்டும்.
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தும் அதிகாரி, பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்துவதற்கு ஏதுவாக, ஒவ்வொரு நுணுக்கமான முறையையும் கண்காணித்து, ஊக்கத்துடன் பங்கேற்க கேட்டுக் கொள்ளப்பட வேண்டும்.
- இறுதியில், திட்டத்திற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ கூறப்பட்ட அனைத்துக் கருத்துக்களையும், பொருளின் அடிப்படையிலும், பிரச்சனையின் அடிப்படையிலும், தொகுக்கப்பட்டு, அவற்றுக்கு சுருக்கமான முறையில், திட்டத்தின் சார்பாளர்களினால் பதிலளிக்கப்பட வேண்டும்.
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை நடத்தும் அதிகாரி கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகளை, கண்டிப்பாக EIA அறிவிப்பாணை 2006ன்படி, தயார் செய்ய வேண்டும். பொது மக்களிடம் முன் வைக்க வேண்டும்.
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நிகழ்வுகள், ஒரு அட்டவணை வடிவத்தில் எழுதப்பட்டு, விசாரணையில் எழுப்பப்படும், ஒவ்வொரு பிரச்சனைக்கும், அதற்கு எதிராக திட்டத்தின் சார்பாளர்கள் பதிலும் இட்டு நிரப்பப்பட வேண்டும்.
- திட்டத்தில் முன் வைக்கப்படும் விளக்கத்தில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரச்சனைகள் குறித்து சந்தேகங்கள் எழுந்தால், ஒரு சுற்றுச்சூழல் நிபுணரோ அல்லது ஒரு அறிவியலாரோ, பொதுமக்கள் மத்தியில், பேச அழைக்கப்படும் பொருளில் தனது கருத்துக்களை எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிப்பர்

1. EACநிகழ்ச்சிகுறிப்புகளில்,விரிவானகாரணங்கள்ஏற்கும்படியாகவும்,எழுத்துப்பூர்வமாகவும் இருக்க வேண்டும். அல்லது பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் எழுப்பப்படும், ஒவ்வொரு பிரச்சனைக்கு முன் வைக்கப்பட்ட பதில்களும் சேர்க்கப்பட வேண்டும்.
2. EAC முன்பாக, பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தும் முறைகளை, மேலும் மெருகு ஊட்டுவதற்கான ஆலோசனைகளை வைப்பதற்கு MoEFபரிசீலிக்கலாம்.

**வழக்கு விபரங்கள் : முறையீடு எண் 12, 2011**

**ஆஸிபெர்னான்டஸ் மற்றும் பிறர்** *Vs* MoEF **மற்றும் பிறர்**

**தீர்ப்பைக் காண இணைப்பு**

*http://www.greentribunal.gov.in/judgement/12-2011(AP)30May2012finalorder.pdf*

### 2.5.7 பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் என்பது திட்ட அமைவிடத்திற்கு அருகிலுள்ள உள்ளூர் மக்களுக்கு மட்டுமல்ல

### 2.5.8. SPCB திட்டம் குறித்த தகவலை தனது இணையதளத்தில் வெளியிட வேண்டும்

- EIAஅறிவிப்பாணை 2006 ஆனது, திட்டத்தின் அருகிலுள்ளவர்கள் மட்டுமன்றி, மற்றவர்களும் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்பதை தடுப்பதில்லை. அவர்களை பங்கேற்க அனுமதிப்பதோடு, திட்டத்திற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.
- உள்ளூரில் பாதிக்கப்படுகின்ற நபர்கள், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்க முடியாவிட்டாலும் கூட, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், தங்களது பதில்களை எழுத்துப்பூர்வமாக அளிக்கலாம்
- EIA அறிவிப்பாணையின்படி எந்த ஒரு நபரும் திட்டத்திலிருந்து தொலைவில் வசித்தாலும் அவர் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் பங்கேற்பதை தடுக்க முடியாது.
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்காக, மாநில மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்தில் திட்டம் அல்லது அதன் செயல்பாடு குறித்து சம்பந்தப்பட்ட தகவல் வெளியிடப்படவில்லையெனில், அது உள்ளூர் மக்களுக்கு போதாக்குறையான தகவல் அளிப்பதாகும். அதன் மூலமாக பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு இடையூறு செய்தவதாகும்

**வழக்கு விபரங்கள்:** ரிட் மனு (சிவில்)எண் 9317, 2009

சமார்த்து அறக்கட்டளை மற்றும் பிறர் ஏஎ இந்திய அரசு மற்றும் பிறர்

**இணைப்பு:**

*http://indiakanoon.org/doc/1050363*

**தீர்ப்பு நாள்:** மே 28, 2010

### 2.5.9. நிலக்கரியின் அணு கதிரியக்கம் குறித்து *ToR*ல் உள்ளடக்கி இருக்க வேண்டும்

### 2.5.10. திட்ட அமைவிடத்திலிருந்து 1 கிலோ மீட்டருக்குள் பொதுமக்கள் கருத்து கேட்புணர் கூட்டம்நடத்தப்பட வேண்டும்

மின் நிலையத்திற்கு பயன்படுத்தக்கூடிய நிலக்கரியின் சாத்தியமான கதிரியக்க அளவுகள் குறித்த விபரங்களை தெரிவிக்க திட்டத்தின் சார்பாளர் கேட்டுக் கொள்வதை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் அனைத்து எதிர்கால திட்டங்களுக்கான ToRல் குறிப்பிட வேண்டும்

- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் இடமானது, திட்டம் அமைவிடத்திலிருந்து ஒரு கி.மீட்டருக்குள் இருக்க வேண்டும்.
- பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் பற்றிய தகவல்கள் மக்களுக்கு அழைப்பு விடுக்கும் அறிவிப்புகளில், தெளிவான வார்த்தைகளில் கூறப்பட்டிருக்க வேண்டும். அதிகாரிகள் குழப்பமான வார்த்தைகள் அல்லது தவறான வார்த்தை பயன்படுத்துவது போன்றவற்றை தவிர்க்க கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்

**வழக்கு விபரங்கள்:** முறையீடு எண் 2011ல் 7 *(T)* கிருஷ்டி விக்யான் ஆரோக்ய சன்ஸ்தா மற்றும் பிறர் *Vs MoEF* மற்றும் பிறர்

**தீர்ப்பைக் காண இணைப்பு:**
*http://www.ercindia.org/files/koradi%201.pdf*

**தீர்ப்பு நாள்:** செப்டம்பர் 20, 2011

### 2.5.11. உள்ளூர் மக்களின் கவலைகள் எப்படி நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிய EAC யானது இறுதி EIA ஐ பரிசீலிக்க வேண்டும்.

EAC, இறுதி EIAஐ விரிவாக பரிசீலித்து, பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தில் மக்களின் கவலைகள் எப்படி திட்டத்தின் சார்பாளர்களால் நிவர்த்தி செய்யப்படுகின்றன என்பதை கண்டறிய வேண்டும்.

**வழக்கு விபரங்கள்:** முறையீடு எண் 2011ல் 10*(T)*
ஜீத் சிங் கன்வார் மற்றும் பிறர் *Vs MoEF* மற்றும் பிறர்

**தீர்ப்பைக் காண இணைப்பு:**
*http://indiakanoon.org/doc/16871829*

**தீர்ப்பு நாள்:** ஏப்ரல் 16, 2013

### 2.5.12 முன்வரைவு மற்றும் இறுதி நுஐஹக்கு இடையில் கடுமையான வேறுபாடுகளை அனுமதிக்கக் கூடாது

MoEFற்கான ஆலோசனைகள்

1. திட்டத்தின் சார்பாளர் ToRன்படி முன்வரைவு EIAயானது தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலிக்க MoEF ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும்.
2. ToRன்படி முன்வரைவு EIA உள்ளதா என்பதை MoEF உறுதி செய்த பின்னர், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு முன்னதாக இணையதளத்தில் வெளியிடப்பட வேண்டும்.
3. முன்வரைவு EIA அறிக்கை, அளிக்கப்பட்ட ToRன்படி தயாரிக்கப்படவில்லை எனில், அதை நிராகரித்துவிட்டு, புதிய முன்வரைவு EIA தயாரிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும்.
4. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தி முடித்து, இறுதி EIA அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன்,MoEF, அதை ToR மற்றும் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் நிகழ்வுகளுக்கேற்ப உள்ளதா என்பதை மதிப்பிட வேண்டும்
5. முன்வரைவு EIA அறிக்கைக்கும், இறுதி EIA அறிக்கைக்கும் இடையில் கடுமையான வேறுபாடுகள் இல்லை என்பதற்கு MoEF கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். திட்டம் தொடர்பான குறிப்பிட்ட உள்ளார்ந்த தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் தகவலுக்கும், சுற்றுச்சூழல் மற்றும் சூழல் அமைப்புகளின் நலன்களை மேம்படுத்துவதற்கான, அவசியமான நடவடிக்கைகளுக்கும் இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.
6. MoEF, இறுதி EIA அறிக்கையை, சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதற்கு முன்னதாக, பொதுமக்கள் மத்தியில் முன் வைக்க வேண்டும். அப்போதே EAC யின் முன்பாக கருத்துக்களை முன்வைக்கலாம்.
7. MoEFயின் அளிக்கப்பட்ட முன்வரைவு, EIA பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்படவில்லை என்றாலும் கூட பொது விசாரணையானது செல்லாதது ஆகாது.

**வழக்கு விபரங்கள்:** முறையீடு எண் 2011ல் 20 *(T)*

இரமேஷ் அகர்வால் மற்றும் பிறர் *Vs SEIAA* மற்றும் பிறர்

**தீர்ப்பைக் காண இணைப்பு:**

*http://indiakanoon.org/doc/59958653*

**தீர்ப்பு நாள்:** மே31, 2012

### 2.5.13. அடிப்படை சமூக பொருளாதார விபரங்கள் EIAயில் கண்டிப்பாக இடம்பெற வேண்டும்

EIAஅறிக்கை தயாரிப்பின்போது, சுற்றுச்சூழல் ஆலோசகர்கள் திட்டத்தின் அமைவிடத்தின் அடிப்படை சமூக பொருளாதார விபரங்கள் திரட்ட வேண்டும். திட்ட அமைவிடத்தில் மக்களின் அடிப்படை தேவைகளைப் புரிந்துகொள்ள, சில தொடக்க நிலை ஆய்வை மேற்கொள்ள வேண்டும். அதோடு முறையான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்க வேண்டும்.

**வழக்கு விபரங்கள்:** முறையீடு எண் 25/2011

வினோத் ஆர் பட்டேல் *Vs* குஜராத் மாநில அளவிலான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அதிகார அமைப்பு

**தீர்ப்பைக் காண இணைப்பு:**

*http://indiakanoon.org/doc/161693875*

**தீர்ப்பு நாள்:** டிசம்பர் 18, 2012

### 2.5.14. MoEF EACயின் மதிப்பிடும் முறையை பரிசீலிக்க வேண்டும்

1. நிபுணர் மதிப்பீட்டுக்குழு (EAC) உறுப்பினர்கள் மத்தியில் தொழில்நுட்ப விவாதம் குறித்த விபரங்களைப் பதிவு செய்வதையும், பராமரிப்பதையும் மேற்கொள்ள வேண்டும். குழுவின் உறுப்பினர்களின் கருத்துகள், சிந்தனைகள், விமர்சனங்கள் மற்றும் ஆலோசனைகளையும் ஒரு முறையான படிவத்திலும், வடிவத்திலும் பதிவு செய்யப்பட வேண்டும்.
2. ஒரு குறிப்பிட்ட விபரம் குறித்து EACயின் உறுப்பினர்களால் ஒருமித்த முடிவுக்கு வர முடியவில்லை எனில், அதை சேர்த்து குறிப்பு தயார் செய்யப்பட வேண்டும். பெரும்பான்மைக் கருத்தை ஏற்றுக்கொள்வதற்கானக் காரணங்களைப் பதிவு செய்ய வேண்டும். அதை எதிர்கால ஆய்வுக்காக பராமரிக்க வேண்டும்
3. EAC கூட்டங்களின் நிகழ்ச்சி குறிப்புகளில் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்த வீடியோ பதிவு குறித்து தனியாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். நுஹஊ இதைக் கவனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் அதை கூட்டத்தின் நிகழ்ச்சி குறிப்புகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
4. EAC தனது மதிப்பீட்டு நடைமுறையை மீளாய்வு செய்ய வேண்டம். பொதுக் மக்கள் கருத்து கேட்டுணருர் கூட்டத்தில் எழுப்பபட்ட கேள்விகள், முந்தைய மதிப்பீட்டில் விடப்பட்டிருந்தால், அதை கவனத்தில் எடுத்துக்கொள்வதுடன், தேவைப்பட்டால் கூடுதல் நிபந்தனைகள் விதிக்க வேண்டும்.
5. MoEF யானது சுற்றுச்சூழல் அனுமதி ஆவணத்தில், பொது நிபந்தனைகளை குறைந்த பட்சமாக்குவதும், ஒவ்வொரு வழக்கிலும் உள்ள குறிப்பான பிரச்சனைகள் தீர்ப்பதற்குத் தேவை மற்றும் சாத்தியத்தையும் சிந்திக்க நிபந்தனைகளை விதிக்க வேண்டும்.
6. EAC யின் பரிசீலனை நடைமுறையானது, MoEFயினால் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

வெளிப்படையான ஆவணப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு, அது எதிர்காலத்தில் பராமரிக்கப்பட வேண்டும். EAC யின் தலைவர், அனைத்து எதிர்கால மதிப்பீடுகளில் பரிசீலனை நடைமுறை யை ஆவணப்படுத்துதலை கடைபிடிக்குமாறு MoEFஆல் வலியுறுத்தப்பட்டுள்ளார்.

வழக்கு விபரங்கள்: முறையீடு எண் 9/2011

சமத்தா மற்றும் பிறர் *Vs* இந்திய அரசு மற்றும் பிறர்

**தீர்ப்பைக் காண இணைப்பு:**

*http://www.greentribunal.gov.in/judgement/92011(sz)(AP)_13Dec2013_finalorder.pdf*

**தீர்ப்பு நாள்** டிசம்பர் 13, 2013

## 2.6 மத்திய அரசின் வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முக்கியமான சுற்றறிக்கைகள்

2.6.1. தகவல் சமர்ப்பித்தல் மற்றும் கிடைக்கப் பெறுதல்
2.6.2. நிலக்கரி தொடர்பு
2.6.3. அதி நவீன மிகு மின் அனல் மின்நிலையம் (ULTRA MEGAPOWER PLAN)
2.6.4. சுற்றுச்சூழல் அனுமதி, கடலோர ஒழுங்குமுறை மண்டல அனுமதி
2.6.5. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்
2.6.6. தற்போது செயல்படுகின்ற மின்நிலையங்களைக் கண்காணித்தல்
2.6.7. ஒரே நிலத்தின் மீதான திட்டங்கள்
2.6.8. நிறுவனச் (கார்ப்பரேட்) சுற்றுச்சூழல் கொள்கை
2.6.9. சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் முன் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகள்
2.6.10. திட்ட விரிவாக்கம்
2.6.11. செல்லத்தக்க செயல் வரம்புகள் (ToR)
2.6.12. இணைக்கப்பட்ட திட்டங்கள்

### 2.6.1. தகவல் சமர்ப்பித்தல் மற்றும் கிடைக்கப் பெறுதல்

**இணையதளத்தில் தகவல் ஏற்றுதல்**

செயல் வரம்புகள்(ToR), பாரம் 1, முன் சாத்தியக்கூறு அறிக்கை ஆகிய அனைத்தும் மத்தியச் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் இணையதளத்தில் ஏற்றப்பட வேண்டும். இது துறைவாரியான சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுமத்தின் இயக்குநர் மற்றும் செயல் உறுப்பினரின் முக்கியமான பொறுப்பாகும். அந்த அலுவலர், சுற்றுச்சூழல் அனுமதி குறித்து, திட்டம் முன் மொழிந்தவருக்குத் தெரிவிப்பதற்கு முன்பே சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டம், பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நிகழ்வு குறிப்பு, சுற்றுச்சூழல் குழுமத்தின் கூட்ட நடவடிக்கை குறிப்பு மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி ஆகியவற்றை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் வெளியிட வேண்டும்.

ஆணை வெளியிடப்பட்ட தேதி : 29 ஆகஸ்ட் 2013

**இணைப்பு**

*http://www.MoEF.nic.in/sites/default/files/OM-reg-storage-of-files-29.8.13.pdf*

**கூடுதல் தகவல்கள் சமர்ப்பித்தல்**

சுற்றுச்சூழல் மதிப்பீட்டுக் குழுவானது திட்டத்தின் விண்ணப்பதாரரிடம் / உரிமையாளரிடம் ஏதாவது தகவல் சமாப்பிக்கக் கோரினால், EAC கூட்டம் நடைபெற்ற தேதியிலிருந்து 6 மாதத்திற்குள் அவற்றை சமர்ப்பிக்க வேண்டும். இந்த கால கட்டத்திற்குப் பின்னும் தகவல் சமர்ப்பிக்கப்படவில்லையெனில், திட்டமானது, நிலுவையில் உள்ள திட்டங்களின் பட்டியலிலிருந்து விலக்கிக் கொள்ளப்படும். EAC தகவல் கோரியும், திட்டமானது நிலுவையில் உள்ள பட்டியலில்

மூன்று மாதம் இருந்தும், தகவல் தரப்படாமல் இருந்தால், திட்ட விண்ணப்பதாரருக்கு ஒரு மாதத்திற்குள் தரும்படி நினைவூட்டல் கடிதம் அனுப்பலாம். அப்படியும் விண்ணப்பதாரர் தரத் தவறினால் நிலுவையில் உள்ள திட்டங்களின் பட்டியலில் இருந்து விலக்கப்படும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி : 30 அக்டோபர் 2012**

இணைப்பு: *http://MoEF.nic.in/assets/ia_30102012.pdf*

திட்ட ஆவணங்களின் கணிப்பொறி நகல்கள் சமர்ப்பிக்கப்படல்

கீழ்க்கண்ட திட்ட ஆவணங்களின் நகல்களோடு, கூடுதலாக கணிப்பொறி நகல்கள் PDF வடிவத்தில் MoEF/SEIAAக்கு அனுப்பப்பட வேண்டும்.

- பாரம்1
- முன் சாத்தியக் கூறு ஆவணம்
- ஒப்பந்த விதிமுறைகள் குறித்த வரைவு
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு திட்டங்களின் கேள்விகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்
- பொது விசாரணை நிகழ்வுகள்
- சுற்றுச்சூழல் மதிப்பீட்டுக் குழு கோரிய அனைத்து ஆய்வறிக்கைகள்
- EACக்கு விண்ணப்பதாரர் அளித்துள்ள கூடுதல் தகவல்கள்

கணிப்பொறித் தகவல்கள், கிடைக்கப்பெறின், அவற்றை MoEF/SEIAA இணையதளத்தில் வெளியிட ஏதுவாக இருக்கும். திட்ட ஆவணங்களின் ஒத்த படிவங்கள், கணிப்பொறி நகல்கள் இரண்டும் சமர்ப்பிக்கத் தவறினால், அது முழுமையற்றதாக கருதப்பட்டு மேல், நடவடிக்கை கைவிடப்படும். EACயின் உறுப்பினர் செயலர்கள் EAC/SEAL திட்ட அமைவிடத்தை பார்வையிட்ட அறிக்கைகளை இணையதளத்தில் வெளியிட வேண்டும்.

ஆணை வெளியிடப்பட்ட தேதி : 20 மார்ச் 2012

இணைப்பு

*http://envfor.nic.in/download/publi-information/order-20032012-a.pdf*

**சரியான மாற்று மூலப்படிவத் தகவல்கள் அளித்தல்**

EIAக்கு சரியானத் தகவல் அளிக்கும் பொறுப்பு, விண்ணப்பதாரருக்கு உள்ளது. ஏனெனில், MoEF/EAC ஒவ்வொரு திட்டத்தின் EIAஆவணத்தையும் அதனுடைய நகலான மற்றொரு EIAவுடன் பொருத்திப் பார்க்க கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே திட்ட விண்ணப்பதாரர் EIAஅறிக்கையோடு கூடவே, EIAவின் உள்ளடக்கத்தை தந்ததற்கு முழுப்பொறுப்பு ஏற்பதாக உறுதி மொழிக்கடிதம் தர வேண்டும். எந்த கட்டத்திலாவது, EIAக்காக கொடுக்கப்பட்ட அறிக்கைகளில் உள்ள தகவல்கள் நீக்கப்பட்டிருப்பது, MoEFன் கவனத்திற்கு கொண்டு வந்தால், திட்டமானது உடனடியாக விலக்கப்படும். விண்ணப்பதாரர் மீண்டுமொரு முறை புதிதாக சுற்றுச்சூழல் அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் நகலறிக்கையை வைத்து சுற்றுச்சூழல் மறுக்கப்படும். மேலும் EIA கலந்தாய்வளரானவர், அங்கீகரிக்கப்பட்ட கலந்தாய்வாளர் பட்டியலிருந்து நீக்கப்படுவார்.

இணைப்பு : *http://envfor.nic.in/downloads/public-information-OM_IA_ownership EIA.pdf*

### 2.6.2. நிலக்கரி தொடர்பு

இந்தியாவில் உள்ள அனல் மின்நிலையங்கள், உள்நாட்டுகம்பெனிகளான சுற்றுச்சூழல் அனுமதி பெற்ற நிலக்கரி இந்தியா (Coal Indவை) சிங்கரேணி நிலக்கரி சுரங்கக் கம்பெனியிடமிருந்து நிலக்கரியைப் பெற வேண்டியிருந்தால் நிலக்கரியில் உள்ள சாம்பல் விகிதம், சல்பர் அளவு மற்றும் பற்றி எரியும் தன்மை ஆகியவை EIA/EMPஇல் குறிப்பிடபட்டிருந்தால் மட்டுமே திட்டத்திற்கான அனுமதி பரிசீலிக்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டத்திற்கு, அனுமதி பெறுவதற்கான முன் நிபந்தனையே, திட்டத்தின், நிலக்கரி இணைப்பிற்கான நிலைக்குழுவின் வரையறைகளுக்கேற்ப, எரிபொருள் விநியோகத்திற்கான ஒப்பந்தம் பெறப்பட்டிருப்பதுதான். அதில், குறிப்பிட்ட சுரங்கத்தினுடன் தொடர்பு/சுரங்கங்களுடன் தொடர்பு மற்றும் திட்டத்தின் நிலக்கரிக்கென ஒதுக்கப்பட்ட பகுதி பற்றியும் குறிப்பிடப்பட வேண்டும். தொடர்பு அமைப்பானது நிலக்கரியில் உள்ள சல்பர் அளவு, சாம்பல் அளவு, எரியும் தன்மை (எரிசக்தி) ஆகியவற்றை தரவேண்டும். திட்டத்தின் EIA தயாரிக்கும்போது, இந்த தன்மைகள் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும், மேற்கூறிய அளவீடுகளில் மாற்றம் இருந்தால் அது உடனடியாக MoEFக்கு தெரிவிக்கப்பட்டு சுற்றுச்சூழல் அனுமதிக்கான நிபந்தனைகள் மறுபரிசீலனை செய்யப்படுவதுடன், போதுமானதாக உள்ளதா என்பதையும் சரிபார்க்க வேண்டும். கூடுதல் நிபந்தனைகளின்படி, தூசு வாயுவான சல்பர், சுத்தப்படுத்தப்பட்ட சல்பர் டை ஆக்சைடு வெளிப்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி** : 19 ஏப்ரல் 2012

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/notif-20042012.pdf*

நிலக்கரி தொடர்பானது EIA அறிக்கைக்கு தேவையானது. ஆனால் ToR செயல்வரம்புக்கான வரைவை அளிப்பதற்குத் தேவையில்லை.

ஆணை வெளியிடப்பட்ட தேதி : 19 ஜனவரி 2011

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/cir-19-01-2011.pdf*

### 2.6.3. அதி நவீன மிகு மின் அனல் மின்நிலையம் (ULTRA MEGAPOWER PLAN)

மீறமுடியாத பகுதி என்பது சில தொழிற்சாலை நடவடிக்கைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்ட பகுதியாகும். UMPPயுடன் தொடர்புடைய நிலக்கரி பகுதியானது மீறமுடியாத பகுதியில் இல்லையெனில், UMPPக்கான சுற்றுச்சூழல் அனுமதி தனியாக பரிசீலிக்கப்படும். திட்டத்திற்கான அனுமதியானது நிலக்கரி ஒதுக்குதலுக்கான சுற்றுச்சூழல் அனுமதி மற்றும் அனுமதியுடன் தொடர்புபடுத்தப்பட மாட்டாது. ஆனால் நிலக்கரியை இறக்குமதி செய்யும் UMPP திட்டங்களுக்கு கீழ்க்கண்ட நிலையளவுகள் / அளவீடுகள் கட்டாயமாக கடைபிடிக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| நிகர வெப்பத்தன்மை (Kcal/kg) | – 5000 (குறைந்தபட்சம்) |
| சாம்பல் அளவு | – 12 சதவிகிதம் (அதிகபட்சம்) |
| சல்பர் அளவு | – 0.8 சதவிகிதம் (அதிகபட்சம்) |

சுற்றுச்சூழல் அனுமதிக்கானத் தகுதியானது இந்த நிலையளவுகளின் அடிப்படையிலே அமையும். இத்திட்டங்களுக்கான EIA/EMPக்கு கீழ்க்கண்ட தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்.

- நிலக்கரி இறக்குமதிக்குத் தேவையான துறைமுகம், துறைமுக அணைகரை (இறங்குதுறை), இரயில்வே வழித்தடம்
- துறைமுகத்தின் நிலக்கரியை கையாளும் திறன்
- துறைமுகத்திலிருந்து திட்ட அமைவிடத்திற்கு நிலக்கரியை கொண்டு செல்ல போக்குவரத்து வசதிகள்

**ஆணை வெளியிடப்பட்ட தேதி : 1–30 டிசம்பர் 2013**

**இணைப்பு:** *http://MoEF.nic.in/assets/default/files/OM%2030.12.2013.pdf*

**ஆணை வெளியிடப்பட்ட தேதி : 2 – 5 பிப்ரவரி 2013**

இணைப்பு: *http://MoEF.nic.in/assets/OM-050513.pdf*

## 2.6.4. சுற்றுச்சூழல் அனுமதி, கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) அனுமதி

### சுற்றுச்சூழல் அனுமதி / எரிபொருள் அனுமதி / கடலோர ஒழுங்கு முறை மண்டல மீதுள்ள மீறல்கள்

திட்டத்தை முன்மொழிபவர், திட்டத்தை வனப்பகுதியில்லாத இடத்தில் அமைக்கும் சாத்தியக் கூறுகளைக் கண்டறிய வேண்டும். அவ்வாறு முடியாத பட்சத்தில், வனப்பகுதியை திட்டத்திற்காக மறுவகை செய்ய விரும்பினால் பாரம் 1 சமர்ப்பிப்பதற்கு முன்பே, முன் அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும். வனப் பராமரிப்புச் சட்டம் 1980ன் கீழ் மறுவகை செய்யப்பட்ட வனப்பகுதிக்கு முதற்கட்ட அனுமதி வழங்கப்பட வேண்டும்.

திட்டத்தை முன் மொழிபவர், சட்டப்படி செல்லத்தக்க CRZ அல்லது EC அல்லது FCயை மீறி கட்டுமானப் பணிகளை மேற்கொண்டால் MoEFஉடனடியாக கட்டுமானப் பணிகள், எந்த அளவிற்கு நடைபெற்றுள்ளதோ, அந்தளவில் நிறுத்தப்பட, உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இந்த தடையானது, தேவையான அனுமதி பெற்ற பின்போ அல்லது திருத்தங்கள் செய்யப்படும் வரையோ இருக்கும்.

CRZ/ECயின்படி சொல்லப்பட்ட திறனைவிட, கூடுதலாக திட்ட உரிமையாளர் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டால், கூடுதல் உற்பத்திக்கான அனுமதி பெறும்வரை, MoEFஉடனடியாக கூடுதல் உற்பத்தியை நிறுத்தி, அனுமதிக்கப்பட்ட அளவுக்கு உற்பத்தி செய்ய உத்தரவிடவேண்டும்.

CRZ/EC அனுமதியின்றி திட்டம் செயல்படுத்தப்பட்டால் அனுமதி பெறும்வரை, உற்பத்தியை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிடவேண்டும்.

திட்டத்தை நவீனமயமாக்குவது அல்லது உற்பத்தி சரக்கு கலப்பில் மாற்றம் கொண்டு வரும் நடவடிக்கைகள், முறையான அனுமதி பெறும்வரை, MoEF உத்தரவு மூலம் நிறுத்தப்படுவதுடன், நவீனமயமாக்கல் மற்றும் மாற்றத்திற்கு முந்தைய நிலையானது தொடர வேண்டும்.

MoEFக்கு, மேற்கூறிய ஆணைகளை பிறப்பிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமில்லாது, திட்ட சார்பாளரிடமிருந்து, ஆணைகளில் கண்டவற்றை கடைபிடிப்பதற்கான ஒப்புதலையும் பெறும் பொறுப்பு உள்ளது. இந்தஆணைகள் மூலம் அளிக்கப்பட்டுள்ள கட்டளைகளை மீறும் பட்சத்தில், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 சட்டப்பிரிவுகளுக்கு கீழ் திட்ட சார்பாளர் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுப்பதுடன், அனுமதிகள் அனைத்தும் மொத்தமாக நிராகரிக்கப்படும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 27 ஜுன் 2013

**இணைப்பு**

*http://www.MoEF.nic.in/sites/default/files/om-2706.13.pdf*

**முன் அனுமதி பெறாமல் செயல்படுதல்**

CRZ/ECக்கான முன் அனுமதி பெறாமல் ஒரு திட்டம் செயல்படுவதாக புகார் பெறப்பட்டிருப்பின், புகாரின் உண்மைத் தன்மையை மாநில அரசு, MoEF ன் மண்டல மற்றும் கடற்கரை ஒழுங்கமைவு மண்டல அதிகார அமைப்புகள் பரிசோதிக்க வேண்டும். திட்டசார்பாளர், 60 நாட்களுக்குள் நிறுவனத்தின் ஆட்சிக்குழுவிடம் அல்லது (அறக்கட்டளையின்) தலைமை நிர்வாக அதிகாரியிடம் புகார் குறித்து முறையிட்டு, இது மாதிரியான மீறல்கள் நடைபெறாது என தீர்மானம் பெற வேண்டும். இதற்கிடையில் MoEF, திட்டத்தை ஒப்புதல் அட்டவணையிலிருந்து விலக்கிக் கொள்ளும். திட்ட சார்பாளர் குறித்த தகவலும், மீறல் நடைபெறாது என்பதற்கான திட்டசார்பாளரின் தீர்மான நகலும் ஆடிநுகுயின் இணையதளத்தில் வெளியிடப்படும்.

60 நாட்களுக்குள் திட்ட சார்பாளரிடமிருந்து எந்தவித பதிலும் பெறவில்லையெனில், திட்டத்தை தொடர்வதில் விருப்பமில்லையெனக் கருதப்பட்டு, இத்திட்டத்திற்கான கோப்புகள் நிரந்தரமாக மூடப்படும். திட்ட சார்பாளர், திட்டத்தை தொடர விருப்பப்பட்டால், புதிதாக நடைமுறைகள் துவக்கப்பட வேண்டும்.

மாநில அரசாங்கங்கள், திட்ட சார்பாளர் மீது நிபந்தனைகள் மீறி செயல்பட்ட காலத்திற்கு தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு எடுக்கப்பட்டதற்கான ஆதாரத்தையும், MoEFயிடம் மாநில அரசாங்கங்கள் அளிக்க வேண்டும். திட்ட மீறலுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டபின்பு, திட்ட அனுமதிக்கான வழக்கமான நடைமுறைகள் கடைபிடிக்கப்படும். ஆனால், செயல்வரம்பு (ToR) வரைவு மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி அளிப்பதும், திட்ட சார்பாளருக்கான உரிமையாக கருதப்படமாட்டாது. மீறல்கள் கடுமையாக இருக்கும் பட்சத்தில் அமைச்சகமானது திட்டத்தை ஒட்டுமொத்தமாக புறக்கணிக்க முடிவு செய்யும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 12 டிசம்பர் 2012

**இணைப்பு**

*http://MoEF.nic.in/assets/om-12122012-b.pdf*

## 2.6.5. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்

**விளம்பரம்**

வெவ்வேறு திட்டங்களுக்கான பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தை குறிப்பிடப்பட்ட தினத்தில், ஒரே நேரத்தில் நடத்த முடியாது. ஒரே நாளில் இரண்டு விசாரணைகள் நடைபெற இருந்தால், இரண்டு விசாரணைகளுக்கு இடையே போதுமான நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்த நிகழ்வு தொகுப்பில் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு கொடுக்கப்பட்ட விளம்பரம் பற்றிய தகவல்கள் இருக்க வேண்டும். மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியம் விசாரணை நடத்தப்பட்ட விதம் போதுமானது என்று சான்றிதழ் அளிக்க வேண்டும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 19 ஏப்ரல் 2010

**இணைப்பு**

*http://envtor.nic.in/divisions/iass/cir/pub.hearEIA.pdf*

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் **பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம்**

ஒரு சிறப்பு பொருளாதார மண்டல முழுமைக்குமாக ஒரு பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்தப்பட்டால் அங்குள்ள தனித்தனி அமைப்புகள் (units) இன்னுமொரு விசாரணை நடத்தப்படுவதிலிருந்து விலக்கு பெறலாம். ஆனால் ஒட்டுமொத்த SEZக்கும் நடத்தப்பட்டபோது கலந்துகொள்ளாத எந்த வகையான தனி அமைப்புகளுக்கும், புதிதாக பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் நடத்த வேண்டும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 1 நவம்பர் 2012

**இணைப்பு**

*http://MoEF.nic.in/assets/ia-01112012.pdf*

**பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்ட நிகழ்வுகளை இணையதளத்தில் வெளியிடுதல்**

அனைத்து மாநில மாசு கட்டுப்பாட்டு வாரியங்களும், யூனியன் பிரதேசங்களின் மாசு கட்டுப்பாட்டு குழுக்களும், அவரவருடைய இணையதளத்தில் பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் குறித்த நிகழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்து, முறையாக வெளியிட வேண்டும்.

ஆணை வெளியிடப்பட்ட தேதி : 20 மார்ச் 2012

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/order-20032012-b.pdf*

## 2.6.6. தற்போது செயல்படுகின்ற மின்நிலையங்களைக் கண்காணித்தல்

MoEFன் மண்டல அலுவலகங்கள்,ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் மின் நிலையங்கள், EC நிபந்தனைகளை கடைபிடிக்கின்றனவா என்று கண்காணிப்பதற்கு, மின் நிலையத்தைப் பார்வையிடுவதோடு ECயின் வெளிப்படையான நிபந்தனைகளும் கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதை பரிசோதிக்க வேண்டும். அவர்களுடைய கண்காணிப்பு அறிக்கையில் இவை சேர்க்கப்பட வேண்டும்.

EC கடிதங்களின் வெளிப்படையான நிபந்தனையானது, திட்ட சார்பாளரின் இணையதளத்தில் EC நிபந்தனைகள் கடைபிடிக்கப்படுவது குறித்தும் வெளியிடுவதை உள்ளடக்கியதாகும். நிபந்தனைகள் கடைபிடிக்கப்படுவது குறித்த, சமீபத்திய அறிக்கையை MoEF/SEIAA இணையதளத்தில் வெளியிட வேண்டும். அனைத்து பின்பற்றுதல் அறிக்கைகளும் (Compliance) பொது ஆவணங்களாகும்.

ஆணை வெளியிடப்பட்ட தேதி : 5 ஆகஸ்ட் 2011

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/O-M-dated05.08.2011.pdf*

500 மெகாவாட் திறனுக்கு மேல் செயல்படக்கூடிய தற்போதைய அனல் மின் நிலையங்கள் புகை கூம்பு வழியாக வெளியிடுகின்ற புகைத்துகள்களைத் தொடர்ந்து கண்காணிப்பதுடன், திட்ட அமைவிடத்திலுள்ள காற்றின் தரத்தையும் கண்காணிக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலே புகை வெளியேறாமல் இருக்கத் தேவையான தவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கும், மண்டல அலுவகத்திற்கும் 6 மாதத்திற்கு ஒருமுறை கண்காணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அத்தகவல்கள் அனல்மின் நிறுவனத்தின் இணையதளத்தில் வெளியிட வேண்டும். நடப்பு காலத்தில், நிலையத்தைச் சூழ்ந்துள்ள காற்றின் தரம் குறித்த தகவலும், வெளியேறும் புகை குறித்த தகவலும், நிலையத்தின் முக்கிய நுழைவாயிலுக்கு அருகில் உள்ள பொது இடத்தில் உள்ள பொது தளத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 6 ஏப்ரல் 2011

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/Addtnl-con-mega-print.pdf*

### 2.6.7. ஒரே நிலத்தின் மீதான திட்டங்கள்

ஒரே நேரத்தில், திட்ட அமைவிடத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி கோரி, இரண்டு அனல் மின் நிலைய திட்டங்கள் விண்ணப்பிக்கப்பட்டிருந்தால், இரண்டுதிட்டங்களும் நிலுவையில் வைக்கப்பட்டு, அந்தந்த மாநில அரசுகள், அறிவுரையை வழங்குமாறு வலியுறுத்தப்படும். எந்த திட்டத்திற்கு, எந்த மாநில அரசு விருப்பம் கொள்கிறதோ, அந்த திட்டம், மதிப்பீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தேவையான நடைமுறைகள் மேற்கொள்ளப்படும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 8 ஜுன் 2011

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/App-revd-prcdr.pdf*

### 2.6.8. நிறுவனச் (கார்ப்பரேட்) சுற்றுச்சூழல் கொள்கை

அனைத்து மத்திய பொதுத்துறை நிறுவனங்களும், அனல்மின்நிலையங்களும் 500 மெகாவாட்டுக்கு மேலோ அல்லது சமமாகவோ உற்பத்தி திறன் கொண்டிருந்தால், நிறுவனச் சுற்றுச்சூழல் கொள்கை ஒன்றை ஏற்படுத்தி வன அனுமதி மற்றும் சுற்றுச்சூழல் அனுமதிக்கான நிபந்தனைகள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அவர்களுடைய ஆட்சிக்குழுவிற்கு EC/FC நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பது, அமைச்சகத்தாலோ அல்லது பொது ஆணையத்தாலோ கண்டறியப்பட்டால், அது குறித்த தகவல்களும் சொல்லப்படுவதுடன், அந்த விதி மீறல்கள் மின் நிலையத்தின் இணையதளத்திலும் அறிவிக்கப்பட வேண்டும். வருடாந்திர அறிக்கையிலும் அறிவிக்கப்பட வேண்டும். அனைத்து முன் மொழியப்பட்டுள்ள அனல்மின் திட்டங்கள் குறித்தும், சுற்றுச்சூழல் ஆய்வுக் குழுவானது, நிறுவனச் சுற்றுச்சூழல் கொள்கை குறித்த அனைத்து பரிமாணங்களையும் விவாதிப்பதுடன், நிறுவனமானது அக்கொள்கைகளைப் பின்பற்றும் தன்மையையும் (compliance) புரிந்துகொள்ளும் தன்மையையும் (comprehension) விவாதிக்க வேண்டும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 26 ஏப்ரல் 2011

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/corporate-env-res.pdf*

### 2.6.9. சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் முன் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகள்

- மனையிட எல்லை ஆக்கிரமிப்பை தடுப்பதற்கான வேலியமைத்தல். பாதுகாப்பு பணியாளருக்கான தற்காலிக தங்குமிடம் கட்டுவது.
- இதைத் தவிர பிற செயல்பாடுகள் இருந்தால் செயல் வரம்பு (ToR)வானது தற்காலிகமாக ரத்து செய்யப்படும் அல்லது திரும்பிப் பெறப்பட்டு, திட்ட சார்பாளர் மீது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன் பிரிவுகளின் படி தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 19 ஆகஸ்ட் 2010

**இணைப்பு**

*http://envfor.nic.in/downloads/public-information/Act-prior-EC.pdf*

### 2.6.10. திட்ட விரிவாக்கம்

அனல் மின்நிலைய விரிவாக்கத்திற்கான EC விண்ணப்பமானது, திட்டத்தின் முந்தைய கால கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள், துவங்கப்பட்டிருந்தால் மட்டுமே, பரிசீலிக்கப்படும். திட்ட விரிவாக்கத்தின் முந்தையகாலகட்டத்திற்கு ECவழங்கப்படவில்லையெனில், திட்ட சார்பாளர், திட்டத்தின் அனைத்து நிலைகளையும் ஒன்றிணைத்து, புதிதாக விண்ணப்பித்தால் மட்டுமே, அனைத்துச் சுற்றுச்சூழல் பிரச்சனைகளையும் முழுமையாக மதிப்பீடு செய்ய முடியும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 22 மார்ச் 2010

**இணைப்பு**

*http://envfor.nic.in/divisions/iass/cir/Exp_EC.pdf*

திட்ட சார்பாளர் ஏற்கனவே இருக்கின்ற திட்டத்தின் விரிவாக்கத்திற்கான EC பெற விண்ணப்பிக்கும்போது, MoEF ன் மண்டல அலுவலகத்திலிருந்து ஏற்கனவே அளிக்கப்பட்ட EC நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளதற்கான சான்றிதழ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த சான்றிதழ் ஆவணமில்லாமல் விரிவாக்கத்திற்கான விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. EC நிபந்தனைகள் பின்பற்றப்பட்ட அறிக்கையானது (compliance report), விரிவாக்கத்திற்கான மதிப்பீட்டிற்கென நடைபெறும் EAC கூட்டத்தில், விவாதிக்கப்பட்டு, நிகழ்வு குறிப்புகள் முறையாக ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 30 மே 2012

**இணைப்பு**

*http://MoEF.nic.in/downloads/public-information/eia-300512.pdf*

### 2.6.11. செல்லத்தக்க செயல் வரம்புகள் (ToR)

EIA/EMP அறிக்கைகள் சமர்ப்பிக்க 2 வருட கால அவகாசம் தேவைப்படுவதால், வழங்கப்பட்டுள்ள ToR, 2 வருடங்கள் வரை செல்லத்தக்கதாக இருக்க வேண்டும். முறையான காரணங்களுக்காக கால அவகாசம் தேவைப்படின் EAC/SEACயின் ஒப்புதல் பெறப்படின் இன்னும் 3 வருடங்களுக்கு ToRஐ நீட்டிக்க விதிவிலக்கு அளிக்கலாம்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி** : 22 மார்ச் 2010

இணைப்பு

*http://envfor.nic.in/divisions/iass/cir/ToREC.pdf*

### 2.6.12. இணைக்கப்பட்ட அனல் மின் திட்டங்கள்

ஒருங்கிணைந்த மற்றும் இணைக்கப்பட்டுள்ள மின்நிலைய திட்டங்களில் பலவித துறைகளுக்கான கூறுகள் இருப்பின், ஒவ்வொரு கூறுகளையும் உள்ளடக்கிய பொதுவான EIA அறிக்கையானது, புரிந்துணர்வுடன் தயாரிக்கப்பட வேண்டும். இந்த பணியானது ஒவ்வொரு துறைக்கான EAC/ SEACயிடமிருந்து ToR பெற்ற பின் தயாரிக்கலாம். இந்த பொதுவான EIAஅறிக்கையானது, ஒவ்வொரு துறைவாரியான EAC/SEACயாலும் ஒட்டுமொத்த அறிக்கையாகவே கருதப்பட வேண்டும். அவர்களுடைய பரிந்துரைகளின் அடிப்படையில், அனல் மின் நிலைய திட்டத்திற்கான அந்ததந்த துறையின் தனிக் கோப்புகள், அதே நேரத்தில் அந்தந்த ஒழுங்கமைவு அதிகார அமைப்புகளின் ஒப்புதலுக்காக பரிசீலிக்கப்படும்.

**ஆணை வெளியிடப்பட்ட தேதி :** 24 டிசம்பர் 2010

இணைப்பு

*http://envfor.nic.in/downloads/public-information/integrated-interlinked-prjt .pdf*

## 2.7 தகவலறியும் உரிமை சட்டம் - பயன்பாடு

2.7.1. சுற்றுச்சூழல் அனுமதி (EC) மற்றும் சுற்றுச்சுழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைப் (EIA) பெறுவதற்கான வழிமுறைகள்

2.7.2. தகவல் பெறுவதற்கான மனுக்களுக்கு பணம் செலுத்தும் முறைகள் மற்றும் முகவரிகள்

2.7.3. தகவல் பெறும் உரிமையின் கீழ் கேட்கப்படும் கேள்விகள்

2.7.4. தகவல் பெறும் உரிமை - செயல்விளக்க வரைபடம்

2.7.5. மத்திய அரசின் மேல் முறையீட்டுப் படிவம்

2.7.6. மத்திய அரசின் வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் மனு படிவம்

### 2.7.1. சுற்றுச்சூழல் அனுமதி (EC) மற்றும் சுற்றுச்சுழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைகளைப் EIA பெறுவதற்கான வழிமுறைகள்

| கட்டம் | மக்களுக்கு கிடைக்கக்கூடிய ஆவணம் (வேண்டுதலின் அடிப்படையில்) | RTI விண்ணப்பம் அனுப்புதல் (500 மெகாவாட்டிற்கும் மேல் உற்பத்தி திறன் கொண்ட திட்டங்கள்) | | | RTIவிண்ணப்பம் அனுப்புதல்(500 மெகா வாட்டிற்கும் கீழ் உற்பத்தி திறன் கொண்ட திட்டங்கள்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | PIO | AA | 2ம் முறையீடு | PIO | AA | 2ம் முறையீடு |
| செயல்வரம்பு கடிதம் (ToR) வழங்குவதற்கு முன்பு | 1. படிவம் 1 திட்டத்தின் விண்ணப்பதாரரின் ToR<br>2. முன் சாத்தியப்பாட்டு அறிக்கை<br>3. திட்டத்தின் சார்பாளர்கள் அளிக்கும் கூடுதல் தகவல்கள்<br>4. SEAC/EACன் கூட்டத்திற்கான தேதி குறித்த SEIAA/MoEFயின் கடிதம்<br>5. SEAC/EAC கூட்டத்தின் நிகழ்ச்சி குறிப்புகள்<br>6. SEAC/EAC திட்ட அமைவிடத்தை பார்வையிட்டதற்கான அறிக்கை (பார்வையிட்டிருக்கும் பட்சத்தில்) | | SEIAA | CIC | MoEF | MoEF | CIC |
| செயல் (ToR) வரம்பு அளிக்கும்போது | 7. SEIAA/MoEF அளித்த ToR | | | | | | |

| கட்டம் | மக்களுக்கு கிடைக்கக்கூடிய ஆவணம் (வேண்டுதலின் அடிப்படையில்) | RTI விண்ணப்பம் அனுப்புதல் (500 மெகாவாட்டிற்கும் மேல் உற்பத்தி திறன் கொண்ட திட்டங்கள்) | | | RTIவிண்ணப்பம் அனுப்புதல்(500 மெகா வாட்டிற்கும் கீழ் உற்பத்தி திறன் கொண்ட திட்டங்கள்) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | PIO | AA | 2ம் முறையீடு | PIO | AA | 2ம் முறையீடு |
| பொதுக் கலந்தாய்வு முடிந்த பின்னர் | 8. திட்ட சார்பாளர் சமர்ப்பித்த EIA முன்வரைவு<br>9. திட்டத்தின் சார்பாளர் சமர்ப்பித்த EIAயின் சுருக்க தொகுப்பு அறிக்கை | | | | | | |
| பொதுக் கலந்தாய்வு கூட்டம் முடிந்த பின்னர் | 10. எழுத்துப்பூர்வ பதிலின் தொகுப்பு<br>11. பொது மக்கள் கருத்து கேட்டுணர் அறிக்கை<br>12. பொது மக்கள் கருத்து கேட்டுணர் குறித்த வீடியோ பதிவு | SPCB | SPCB | SIC | SPCB | SPCB | SIC |
| EC அளிப்பதற்கு முன்னர் / விண்ணப்பம் நிராகரிப்பு | 13. திட்டத்தின்சார்பாளரால் சமர்ப்பிக்கப்படும் EIA இறுதி அறிக்கை<br>14. ToRல் சொல்லப்பட்டுள்ள வரையறைகள் இறுதிEIAயில் கடைபிடிக்கப்பட்டுள்ளது பற்றிய SEIAA/MoEFன் குறிப்புகள்<br>15. SEAC/EAC திட்டத்தின் சார்பாளருடன் நடத்திய கூட்டத்தின் நிகழ்ச்சி குறிப்புகள்<br>16. SEAC/EAC அமைப்புகள்EC வழங்குவதற்கோ/ நிராகரிப்பதற்கோ அளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் | | | | | | |
| EC அளிப்பது குறித்து | 17. சுற்றுச்சூழல் அனுமதி<br>18. திட்டத்தின் சார்பாளரால் அளிக்கப்பட்ட கண்காணிப்பு அறிக்கைகள் | SEIAA | SEIAA | CIC | MoEF | MoEF | CIC |
| | 19. SPCBயின் ஆய்வு அறிக்கை | SPCB | SPCB | SIC | SPCB | SPCB | SIC |

### 2.7.2. தகவல் பெறுவதற்கான மனுக்களுக்கு பணம் செலுத்தும் முறைகள் மற்றும் முகவரிகள்

| அதிகாரி | முகவரி | ஏற்றுக் கொள்ளப்பட்ட பணம் செலுத்தும் முறை | மறு கட்டணம் | முறையீட்டு கட்டணம்[21] |
|---|---|---|---|---|
| MoEF | Paryavaran Bhavan, CGO Complex, Lodhi Road, New Delhi – 110 003.<br>Ph: 011-24362064 | PAO, MoEF, New Delhi என்ற பெயருக்கு பணம், அஞ்சல் ஆணை, வரைவோலை, காசோலை | ரூ 10 | இல்லை |

| அதிகாரி | முகவரி | ஏற்றுக் கொள்ளப்பட்ட பணம் செலுத்தும் முறை | மறு கட்டணம் | முறையீட்டு கட்டணம்[21] |
|---|---|---|---|---|
| SEIAA, Andhra Pradesh | Payavaran Bhawan, A-III, Industrial Estate, Sanath Nagar, Hyderabad-500018 Ph: 040-23887594 | பணம் | பொது அதிகாரி கிராமம் கட்டணம் இல்லை மண்டல்–ரூ.5 மற்றவர்–ரூ.10 | இல்லை |
| SEIAA, Karnataka | 7th floor, M.S. Building, 4th Phase, Bangalore-560001. Karnataka Ph: 080-22032497 | அஞ்சல் ஆணை | ரூ.10 | இல்லை |
| SEIAA, Kerala | Pallimukku, Pettah PO, Trivandram-695024, Kerala. Ph: 0471-2742264 | நீதிமன்ற கட்டண வில்லை மாநில பொது தகவல் அதிகாரி, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை என்ற பெயருக்கு வங்கி காசோலை | ரூ.10 | இல்லை |
| SEIAA, Tamilnadu | III Floor, Panagal Building, No.1, Jeenis Road, Saidapet, Chennai 600 015, Tamil Nadu. Ph: 044-24359974 | நீதிமன்ற கட்டண வில்லை, வரைவோலை | ரூ.10 | இல்லை |

### 2.7.3. தகவல் பெறும் உரிமையின் (RTI) கீழ் கேட்கப்படும் கேள்விகள்

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்றால் என்ன?
2. பொதுத் தகவல் அதிகாரிகள் யார்?
3. தேவைப்படும் தகவலை அளிப்பதற்குப் பொறுப்பானவர் யார்?
4. தகவல் பெறும் உரிமைக்கான விண்ணப்பம் எப்படி அரசு அதிகாரிக்கு அனுப்பப்படும் மனுவிலிருந்து வேறுபட்டது?
5. RTI விண்ணப்பத்தில் வார்த்தைகளுக்கு வரம்பு உள்ளதா?
6. RTI ஐக்கு கீழ் தகவல் பெற நான் என்ன செய்ய வேண்டும்?
7. RTI ஐ பயன்படுத்தி என்ன பெற முடியும்?
8. RTI ஐ பயன்படுத்தி என்ன தகவல்களை பெற முடியாது?
9. தகவலை எந்த மொழியில் நான் கேட்க முடியும்?
10. தேவைப்படும் தகவலை/நகலை நான் எப்படி நகலெடுக்கவோ பார்க்கவோ முடியும்?
11. தேவைப்படும் தகவலை எப்படி அதிகார அமைப்புகள் தருவார்கள்?
12. RTI யின் கீழ் தகவலை பெற வேண்டுவதற்கு ஏதாவது ஒரு மாதிரி படிவம் உள்ளதா?
13. RTI விண்ணப்பத்தை இணையதளத்தின் மூலமாக அனுப்ப முடியுமா?
14. பதிலை பெறுவதற்கான கால வரம்பு என்ன?
15. RTI விண்ணப்பத்தை, முறையான பொது அதிகாரியின் முகவரிக்கு அனுப்பாவிட்டால் அது திருப்பி அனுப்பப்படுமா?
16. தகவலை பெறுவதற்கு நான் கட்டணம் செலுத்த வேண்டுமா?

17. என்னுடைய RTI விண்ணப்பத்திற்கு பதில் கிடைக்காவிட்டால் என்ன செய்ய வேண்டும்?
18. பெறப்படும் தகவல் தவறானதாகவோ அல்லது முழுமையற்றதாகவோ இருந்தால் என்ன செய்ய வேண்டும்?
19. எனக்குத் தகவல் மறுக்கப்படுமா?
20. முறையீட்டு அதிகார அமைப்பின் பதிலில் திருப்தி அடையவில்லையெனில், நான் என்ன செய்ய வேண்டும்?
21. மாநில தகவல் ஆணையம் அல்லது மத்திய தகவல் ஆணையம் கால வரம்பிற்குள் ஒரு உத்திரவைப் பிறப்பிக்க வேண்டும் என்ற கட்டாயமுள்ளதா?
22. ஒரு அதிகாரி தேவைப்படும் தகவலை தராவிட்டால் அந்த அதிகாரிக்கு என்ன நேரிடும்?

### 1. தகவல் பெறும் உரிமைச் சட்டம் என்றால் என்ன?

தகவல் பெறும் உரிமைச் சட்டம் கடந்த 2005ல் இயற்றப்பட்டது. மாநில மற்றும் மத்திய அரசின் செயல்பாடுகளில் அதிக வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புடைமையையும் கொண்டு வரும் நோக்குடன், இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் மத்திய, மாநில அரசுகளைச் சேர்ந்த அதிகார அமைப்புகளிடம் தகவல் பெறும் உரிமையை உத்திரவாதம் செய்கிறது.

### 2. யார் எல்லாம் பொது அதிகார அமைப்புகள்?

பொது அதிகார அமைப்புகள் என்பது அரசியல் சட்டத்தினாலோ, நாடாளுமன்றத்தில் அல்லது மாநில சட்டப்பேரவையினாலோ இயற்றப்பட்ட, ஒரு சட்டத்தினாலோ உருவாக்கப்படும் அனைத்து அதிகார அமைப்புகள், சுயாட்சியுடைய நிறுவனங்கள் ஆகியவற்றை குறிக்கும். மேலும், அரசிற்கு சொந்தமான, அரசு மற்றும் அரசால் பெருமளவு நிதியளிக்கப்படுகின்ற, கட்டுப்படுத்தப்படுகின்ற, அனைத்து அமைப்புகள், நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

### 3. தேவைப்படும் தகவலை அளிக்க யார் பொறுப்பானவர்?

இந்நோக்கத்திற்காக ஒவ்வொரு பொது அதிகார அமைப்பிலும் நியமிக்கப்படும் பொது தகவல் அதிகாரி தேவைப்படும் தகவலை அளிப்பார். அதனால், RTI விண்ணப்பங்கள் அவருக்கே அனுப்பப்பட வேண்டும். பொது அதிகார அமைப்புகளின் துணை மாவட்ட அளவில் அல்லது துணை மண்டல அளவில், ஒரு துணை பொதுத் தகவல் அதிகாரி, மனுக்கள் அல்லது முறையீடுகளை பெறுவதற்காகவும், அவற்றை பொதுத் தகவல் அதிகாரிக்கு அனுப்புவதற்காகவும் நியமிக்கப்படுவார்.

### 4. ஒரு RTI விண்ணப்பமானது பொது அல்லது அரசு அதிகார வரம்பிற்கு ஒரு கடிதம் அல்லது மனு எழுதுவதிலிருந்து எப்படி வேறுபட்டது?

ஒரு தகவலுக்காக எழுதப்படுகின்ற ஒரு முறையான கடிதம் அல்லது மனுவை போலன்றி, RTI சட்டமானது பொது அதிகார அமைப்பின் தகவலுக்கான வேண்டுதலுக்கு ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் பதிலளிக்குமாறு வலியுறுத்துகிறது. ஒரு அதிகாரி குறிப்பிட்ட கால வரையறைக்குள் சரியான தகவலை தரவில்லையென்றால், அந்த அதிகாரியை தண்டிப்பதற்கும் அவருக்கு எதிராக தேவைப்பட்டால், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் இச்சட்டத்தில் பிரிவு உண்டு.

RTIஐ பயன்படுத்தி, நீங்கள் பெறும் தகவலின் தன்மையானது பரந்து விரிந்தது. இச்சட்டத்தின்படி, நாடாளுமன்றத்திற்கோ, சட்ட பேரவைக்கோ எந்த தகவல் அளிக்கப்பட்டாலும் RTI ஐ பயன்படுத்தும் மக்களுக்கும், அத்தகவல் கிடைக்கப்பெறும். தகவல் கேட்கும் நபர் அதற்கான காரணத்தைக் கூற வேண்டியதில்லை. அவரின் தொடர்பு முகவரியைத் தவிர மற்ற தனிப்பட்ட அந்தரங்க தகவல்களை பகிர்ந்துகொள்ள தேவையில்லை.

### 5. RTI விண்ணப்பத்தில் வார்த்தைகளுக்கு வரம்பு உள்ளதா?

ஆம். பின் இணைப்புகள் நீங்கலாக, மத்திய பொது தகவல் அதிகாரியின் முகவரி, மனுதாரரின் முகவரி உள்ளிட்டு ஐநூறு வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். உங்களுடைய மனு 500 வார்த்தைகளுக்கு மேலிருந்தது என்பதற்காக நிராகரிக்கப்பட முடியாது.

### 6. RTI கீழ் தகவல் பெற நான் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் வேண்டும் தகவலைக் குறிப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன், ஒரு எளிமையான கடிதமனாது, சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். பொது அதிகார அமைப்பின், சம்பந்தப்பட்ட பொது தகவல் அதிகாரியின் முகவரிக்கு விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். அவருக்கே தகவல் பெறும் உரிமையின் கீழான தகவல்களுக்கான வேண்டுகோள்களை பெறவும், அங்கிருந்து மற்றவர்களுக்கு அனுப்புவதற்கும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. பொது தகவல் அதிகாரியின் (PIO)பெயரானது இந்நோக்கத்திற்கு தேவையில்லை. பொது தகவல் அதிகாரிக்கே விண்ணப்பிக்க வேண்டும். உங்களால் ஒரு கடிதம் எழுத இயலவில்லை எனில், சம்பந்தப்பட்ட பொது தகவல் அதிகாரி விண்ணப்பத்தை எழுதுவதற்கு உங்களுக்கு உதவுவார்.

### 7. RTI பயன்படுத்தி எவற்றை பெற முடியும்?

RTI யின்கீழ் கீழ்க்கண்டவற்றை நீங்கள் பெற முடியும்

- ஆவணங்கள், பதிவேடுகள், மெமோக்கள், மின்னஞ்சல்கள், கருத்துக்கள், ஆலோசனைகள், பத்திரிகை செய்திகள், உத்திரவுகள், லாக் புத்தகங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள், ஆய்வுத்தாள்கள், சுற்றறிக்கைகள், மாதிரிகள், மாடல்கள்
- மின்னணு வடிவத்தில் புள்ளிவிபரம், ஆவணத்தின் உருவநேர்படி நகல் (fascimile)
- நுண்ணிய நிழற்பட பதிவு மற்றும் அவற்றிலுள்ள சில பிம்பங்களின் நகல்

### 1. RTI ஐ பயன்படுத்தி எந்த தகவல்களை பெற முடியாது? கீழ்க்கண்ட தகவல்கள் பெறப்பட முடியாதவை:

i. இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையைப் பாதிக்கும்படியானவை

ii. இந்தியாவின் பாதுகாப்பு, கேந்திர பாதுகாப்பு, மற்றும் அறிவியல் மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடர்புடைய அல்லது வெளிநாட்டுடன் தொடர்புடைய அல்லது வன்முறையை தூண்டுகின்ற தன்மை வாய்ந்தவை

iii. எந்த நீதிமன்றத்தினாலோ, சட்டத்தினாலோ அல்லது தீர்ப்பாயத்தினாலோ வெளியிடுவதற்குத் தடைவிதிக்கப்பட்ட தகவல்கள்

iv. தகவல்கள் வெளியிடுவது நீதிமன்ற அவமதிப்பாகும் பட்சத்தில்

v. தகவல்கள் வெளியிடுவது, நாடாளுமன்றத்தின் அல்லது மாநில சட்டப்பேரவையின் உரிமை மீறலாகும் பட்சத்தில்

vi. வணிக இரகசியங்கள் மற்றும் அறிவுசார் சொத்துடமை ஆகிய தகவல்களை வெளியிடுவதால், வணிக ரீதியாக போட்டியிடும் மூன்றாவது அணியினை பாதிக்கும் பட்சத்திலும், அப்படி வெளியிடுவது பெரிய அளவில் பொது நலன் காக்கப்படும் பட்சத்தில்

vii. அப்படி வெளியிடுவது பெரிய அளவில் பொது நலனுக்கு உதகந்ததாக இருந்தாலன்றி, சிக்கலான உறவில் இருக்கும் நபருக்கு கிடைக்கும் பட்சத்தில் இருந்தாலன்றி

viii. வெளிநாட்டு அரசாங்கத்திடமிருந்து இரகசியமான முறையில் பெறப்பட்டிருந்தால்

ix. அத்தகவல் வெளியிடப்படுவதால் ஒரு நபரின் உயிருக்கும் அல்லது பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்படுமானால்

x. குற்றம் இழைத்தவர்கள் மீதான விசாரணை நடவடிக்கைகள் அல்லது கைது செய்வது அல்லது குற்ற வழக்கு தொடருவதற்கு இடையூறாக இருந்தால்

xi. அமைச்சரவை முடிவுகள், மக்களின் பார்வைக்கு வெளியிடுவதென முடிவு எடுக்கும்வரை

xii. அத்தகவல் அந்தரங்கமாக இருந்து, அது பொது வெளி நடவடிக்கை அல்லது பொது நலனுடன் எந்த தொடர்புமின்றி இருந்தால் அல்லது அந்தரங்கத்தில் தலையிடுவதாக இருந்தால்

### 9. தகவலை எந்த மொழியில் நான் கேட்க முடியும்?

விண்ணப்பம் எங்கு தாக்கல் செய்யப்படுகிறதோ, அந்த பகுதியின் அலுவலக மொழியிலோ, ஆங்கிலத்திலோ, அல்லது இந்தியிலோதான் தகவல் பெற முடியும்.

### 10. எப்படி தேவைப்படும் தகவலை பார்க்கவோ அல்லது அதன் நகலை நான் பெறவோ முடியும்?

RTI சட்டத்தின் கீழ் நீங்கள் கீழ்க்கண்டவாறு தகவலைப் பெற முடியும்.

- தேவைப்படும் ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் பதிவேடுகளைப் பார்வையிடலாம்
- குறிப்புகள் எடுக்கவும், சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது அவற்றின் சில பகுதிகளுடைய நகல்கள் எடுக்கலாம்
- ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட மாதிரிகளை எடுத்துக் கொள்ளவும் முடியும்
- குறுந்தகடு, ஒளி/ஒலி நாடாக்கள், அச்சு நகல்கள் (தகவல் கணிப்பொறியில் இருந்தால்) அல்லது எந்த மின்னணு வடிவத்திலும் தகவலைப் பெறலாம்.

### 11. தேவைப்பட்ட தகவலை எப்படி அதிகார அமைப்புகள் தருவார்கள்?

பொது அதிகார அமைப்பின் வளங்களை, தேவையற்ற முறையில் வீணடிக்காத பட்சத்தில் அல்லது நீங்கள் விரும்பும் வடிவம், பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படாத பட்சத்திலோ இருந்தால், நீங்கள் விரும்பும் வடிவத்தில் தகவலை பெறலாம்.

### 12. RTI யின் கீழ் தகவலை பெற வேண்டுவதற்கு ஏதாவது ஒரு மாதிரி படிவம் உள்ளதா?

இல்லை. RTI விண்ணப்பத்திற்கென தனியாக குறிப்பான படிவம் கிடையாது. ஆனால் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் கீழ்க்கண்ட விபரங்களை அளிக்க வேண்டும்.

- விண்ணப்பித்த நாள்
- பொது தகவல் அதிகாரியின் முகவரி
- விண்ணப்பதாரரின் முகவரி
- தேவைப்படும் தகவல் (தகவல்கள் எண்ணிக்கை அடிப்படையிலும் அல்லது அட்டவணை வடிவத்திலும் கேட்கப்பட்டால் அதே வடிவத்தில்/முறையில் பதில்கள் கொடுக்கப்படலாம்)
- எந்த வடிவத்தில் தகவல் தேவைப்படுகிறது (அச்சாக்க வடிவம், குறுந்தகடு, மின்னஞ்சல்)
- கட்டணத்தை இணைக்கவும்
- பணம் செலுத்தும் முறை
- கையொப்பம்

கேட்கப்படும் தகவலானது, ஒரு நபரின் உயிர் மற்றும் சுதந்திரத்துடன் சம்பந்தப்பட்டிருந்தால் 48 மணி நேரத்தில் பதில் அளிக்கப்படும்.

வெவ்வேறு மாநில, மத்திய அரசின் அதிகார அமைப்புகள், RTI வேண்டுகோளுகளுக்கிணங்க மாதிரி வடிவங்களை வைத்துள்ளனர். மத்திய அரசின் சுற்றுலா மற்றும் வனத்துறை அமைச்சகம், இங்கு ஒரு குறிப்பிட்ட படிவத்தை கீழ்க்கண்ட இணையதளத்தில் கொடுத்துள்ளது.
http://envfor.nic.in/sites/default/files/appro.pdf

மத்திய தகவல் ஆணையமும் ஒரு முறையீட்டு படிவத்தைக் கொண்டுள்ளது. இருப்பினும், இதை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்ற அவசியமில்லை. இதை பின்பற்றாத காரணத்தைக் கொண்டு தகவலை மறுக்கக் கூடாது.

### 13. RTI விண்ணப்பத்தை இணையத்தின் மூலமாக அனுப்ப முடியுமா?

இது சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்பை சார்ந்துள்ளது. மத்திய அரசு சமீபத்தில் RTI இணையதளம் ஒன்றை உருவாக்கியுள்ளது. http://rtionline.gov.in இந்த தளமானது மத்திய அரசின் தேர்வு செய்யப்பட்ட அமைச்சகங்களிடம் RTI விண்ணப்பங்களை தாக்கல் செய்ய அனுமதிக்கிறது. சில மாநிலங்கள் இதற்கான இணையதளத்தை துவக்கும் முயற்சியில் உள்ளன.

### 14. பதிலை பெறுவதற்கான கால வரம்பு என்ன?

பொது தகவல் அதிகாரியினால் RTI விண்ணப்பம் பெற்ற 30 நாட்களுக்குள் தகவல் அளிக்க வேண்டும். உதவி பொது தகவல் அதிகாரியிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், பதிலளிக்க கூடுதலாக 5 நாட்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

தகவலானது ஒரு நபரின் உயிர் மற்றும் சுதந்திரத்துடன் சம்பந்தப்பட்டிருந்தால் 48 மணி நேரத்தில் பதில் அளிக்கப்பட வேண்டும்.

### 15. RTI மனு, முறையான பொது அதிகார அமைப்பின் முகவரிக்கு அனுப்பப்படாவிட்டால், மனு திரும்பி அனுப்பப்படுமா?

இல்லை. இச்சட்டத்தின் கீழ், நீங்கள் அனுப்பியிருந்த மனுவை 5 நாட்களுக்குள் அந்த பொதுத் தகவல் அதிகாரி, முறையான பொது தகவல் அதிகாரிக்கு அனுப்பி வைப்பார்.

### 16. தகவலை பெறுவதற்கு நான் கட்டணம் செலுத்த வேண்டுமா?

ஆம். ஒரு மாநில பொதுத் தகவல் அதிகாரி தகவல் அளிப்பதற்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பதை மாநில அரசு தீர்மானிக்கும். ஒரு மனுவுக்கு ரூ.10 என மத்திய அரசு கட்டணம் அறிவித்துள்ளது. பல்வேறு மாநிலங்களின் கட்டணங்கள், அவை செலுத்தும் முறை குறித்து (மேலே தரப்பட்ட) இரண்டாம் அட்டவணையை பார்க்கவும். நீங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளவர்களுக்கான அட்டையை வைத்திருக்கும் பட்சத்தில், நீங்கள் RTI கட்டணம் செலுத்த வேண்டாம். இந்த விண்ணப்பத்துடன், அந்த அட்டையின் நகலை இணைக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணத்தைத் தவிர பொது அதிகார அமைப்பிடம், தகவல், அச்சாக்கத்திலோ அல்லது மின்னணு வடிவத்திலோ தரப்படவேண்டும் என்று கேட்டிருந்தால், அதற்கு கட்டணம் வசூலிக்கப்படும் இது விபரத் தொகுப்பின் அளவினைப் பொறுத்தது ஆகும். வழக்கமாக, தகவல் பல பக்கங்களாக இருந்தால், ஒரு பக்கத்திற்கு 2 ரூபாய் வீதம் வசூலிக்கப்படும். தங்களுக்கு கூடுதலான கட்டணம் விவாதிக்கப்பட்டால் பொதுத் தகவல் அதிகாரி தனது பதிலில் விரிவான விளக்கம் அளிக்க வேண்டும். தகவலானது கால வரையான 30 நாட்களுக்குள் கொடுக்கப்படவில்லையெனில் தகவலானது இலவசமாக அளிக்கப்படவேண்டும்.

### 17. என்னுடைய RTI மனுவுக்கு பதில் கிடைக்காவிட்டால் என்ன செய்யவேண்டும்?

உங்களுடைய RTI விண்ணப்பத்தின் நகலை விண்ணப்பம் அனுப்புவதற்கு முன்பே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். விண்ணப்பத்தை பதிவு தபால் மூலம் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை இரசீதுடன் இணைத்து அனுப்புங்கள்

நீங்கள் ஒரு மேல் முறையீட்டு மனுவை அனுப்ப வேண்டும். இந்த முறையீடு, மேல் முறையீட்டு அதிகார அமைப்பிடம் மேற்கொள்ளப்பட வேண்டும். அவருக்கு ஒவ்வொரு பொது அதிகார அமைப்பிடமும், RTI முறையீடுகளை பரிசீலிக்கும் பணி ஒதுக்கப்பட்டுள்ளது. முறையீடானது, உங்களது விண்ணப்பத்திற்கான பதில் பெறும் கால அவகாசமான 30 நாட்களைத் தாண்டியிருந்தால், மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது உங்களது விண்ணப்பமானது பொதுத் தகவல் அதிகாரியிடம் அளிக்கப்பட்ட 30வது நாளிலிருந்து 60 நாட்கள் வரை உங்களது முறையீடு மேற்கொள்ளப்படவேண்டும்.

### 18. பெறப்படும் தகவல் தவறானதாகவோ அல்லது முழுமையற்றதாகவோ இருந்தால் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் மேல் முறையீட்டு அதிகார அமைப்பிடம், முறையீடு மேற்கொள்ள வேண்டும். முறையீடு பதில் பெற்ற 30 நாட்களுக்குள் மேற்கொள்ள வேண்டும். தாமதமாவதற்கு நியாயமான காரணம் இருந்தால், முறையீடு, அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு பின்னர் கூட மேற்கொள்ளலாம்.

### 19. எனக்கு தகவல் மறுக்கப்படுமா?

ஆம். RTI ஐ பயன்படுத்தி சில தகவல்களை பகிர்ந்து கொள்ள முடியாது. அப்படிப்பட்ட சமயத்தில், RTI தகவல் அளிப்பது மறுக்கப்படும். RTI சட்டத்தின்கீழ் பெறக்கூடிய தகவல் என்று நீங்கள் கருதும் பட்சத்தில், மறுப்பதை எதிர்த்து நீங்கள் மனு செய்யலாம்.

மேல் முறையீட்டு அதிகாரியிடம், பதில் பெற்ற 30 நாட்களுக்குள் முறையீடு மேற்கொள்ள வேண்டும்.

உங்களது வேண்டுகோளை மறுக்கும்பட்சத்தில், மறுப்பதற்கான காரணம், மறுப்பதை எதிர்த்து நீங்கள் மேல் முறையீடு செய்ய வேண்டிய முறை, மேல் முறையீட்டை அனுப்ப வேண்டிய அதிகார அமைப்பு உட்பட அனைத்து விபரங்களும் அனுப்பும் பதிலில் பொதுத் தகவல் அதிகாரியால் குறிப்பிடப்படவேண்டும்.

## 20. முறையீட்டு அதிகார அமைப்பின் பதிலில் திருப்தி அடையவில்லையென்றால் நான் என்ன செய்ய வேண்டும்?

இப்படிப்பட்ட தருணத்தில், நீங்கள் சம்பந்தப்பட்ட மத்திய அல்லது மாநில தகவல் ஆணையத்திற்கு, இரண்டாவது முறையீட்டை தாக்கல் செய்யலாம். இந்த முறையீடானது RTI முறையீட்டின் கால வரம்பான 90 நாட்கள் முடிவடைவதற்கு முன்னதாக அல்லது முறையீட்டுக்கான பதில் பெறுவதற்கான காலமான 90 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும். தாமதத்திற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் அளிக்கப்பட்டிருந்தால், முறையீடுகள் இக்கால வரம்பிற்குப் பிறகும் ஏற்றுக்கொள்ளப்படும்.

## 21. மாநில தகவல் ஆணையம் / மத்திய தகவல் ஆணையங்கள் கால வரம்பிற்குள் ஒரு உத்திரவை பிறப்பிக்கக் கட்டாயமுள்ளதா?

இல்லை. மத்திய மாநில தகவல் ஆணையத்தின் உத்திரவுக்கு கால வரம்பு இல்லை.

## 22. ஒரு அதிகாரி தேவைப்படும் தகவலை தகவலை தராவிட்டால் அந்த அதிகாரிக்கு என்ன நேரிடும்?

மத்திய மற்றும் மாநில தகவல் ஆணையமானது ஒரு பொது தகவல் அதிகாரி

- நியாயமற்ற முறையில் RTIவிண்ணப்பத்தைப் பெற மறுத்தால்
- நியாயமற்ற முறையில் தகவலைக் குறிப்பிட்ட கால வரையறைக்குள் தர மறுத்தால்
- தகவலைத் தாமதித்தால்
- தெரிந்தே தவறான, முழுமையற்ற, குழப்பமான தகவலளித்தால்
- தேவைப்படும் தகவலை அழித்துவிட்டால்
- தகவலளிப்பதை ஏதாவது ஒரு வழியில் தடை செய்தால்

ஆணையமானது, பொதுத் தகவல் அதிகாரி மீது நாளொன்றுக்கு ரூ.250 வீதம், அவர் மனுவை பெறும்வரை அல்லது தகவலளிக்கும் வரை எது சரியானதோ, அதன்படி அபராதம் விதிக்கப்படும். அதிகபட்ச அபராதமாக ரூ.25,000 விதிக்கப்படும்.

## 2.7.4 RTI செயல்விளக்க வரைபடம்

தகவலறியும் உரிமை விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட பொது அதிகார அமைப்புக்கு கட்டணத்துடன் அனுப்புவது

↓

**முதல்நாள் :** சம்பந்தப்பட்ட பொது தகவல் அதிகாரியிடம் மனு சென்றடைவது

↓

**30 நாட்கள் :** பதில் அளிப்பதற்கு.

பதில் அளிக்கப்பட வேண்டிய நபரின் உயிர் மற்றும் சுதந்திரத்துடன் சம்பந்தப்பட்டிருந்தால் கால அவகாசம் **48 மணி நேரம்.**

பதில் பெற்றிருந்தால்

↓

பதில் தவறாகவோ, முழுமையற்றதாகவோ இருந்தால் முறையீட்டு மனுவுக்கான இறுதிநாள் : பதில் பெற்ற நாளிலிருந்து 30 நாட்கள்

பதில் பெறவில்லையெனில்

பதில் இல்லை எனில் முறையீட்டுக்கான இறுதி நாள் 31வது நாளிலிருந்து 60 நாள் வரை

↓

முறையீட்டு அதிகார அமைப்பிற்கு முறையீடு / முறையீட்டுக்கான பதில் இறுதி நாள் 30–45 நாட்கள்

பதில் பெற்றிருந்தால்

↓

தவறான தகவல் அல்லது முழுமையற்ற தகவல் / 2 வது முறையீட்டுக்கான இறுதி நாள் முதல் முறையீட்டுக்கான முதல் நாளிலிருந்து 90 நாட்கள்

பதில் பெறவில்லையெனில்

இரண்டாவது முறையீட்டிற்கான இறுதி நாள் : முதல் முறையீட்டுக்கான பதில் பெற வேண்டிய நாளிலிருந்து 90 நாட்கள்

↓

மாநிலம் மற்றும் மத்திய தகவல் ஆணையத்திற்கு முறையீடு

### 2.7.5. மத்திய அரசின் மேல் முறையீட்டுப் படிவம்

1. முறையீடுதாரரின் பெயர் மற்றும் முகவரி
2. விண்ணப்பம் அளிக்கப்பட்ட மத்திய பொது தகவல் அதிகாரியின் பெயர் மற்றும் முகவரி
3. பதிலளிக்கும் மத்திய பொது தகவல் அதிகாரியின் பெயரும், முகவரியும்
4. முதல் முறையீட்டு அதிகார அமைப்பின் பெயர் மற்றும் முகவரி
5. முதல் முறையீட்டை யார் முடிவு செய்தது?
6. விண்ணப்பத்தின் விபரங்கள்
7. உத்திரவின்(களின்) எண் உள்ளிட்ட விபரங்கள், இதற்கு எதிராக முறையீடு தாக்கல் செய்யப்படுவதால்
8. முறையீட்டிற்கு இட்டுச்சென்ற சுருக்கமான உண்மை விவரங்கள்
9. கோரப்படும் வேண்டுகோள் அல்லது நிவாரணம்
10. வேண்டுதல் அல்லது நிவாரணத்திற்கான அடிப்படை உண்மைகள்
11. முறையீட்டுக்கு தொடர்பான இதர தகவல்
12. முறையீட்டாளரின் பரிசீலனையும், உறுதிப்படுத்தலும்

குறிப்பு: இதே போன்ற மாதிரி படிவத்தினை பின்பற்ற வேண்டுமென்று கட்டாயமில்லை. ஒரு விண்ணப்பம் அல்லது முறையீட்டிற்கு இது போன்ற படிவத்தை பின்பற்றவில்லையென்று தகவல் தர மறுக்க முடியாது. இப்படிவம் தகவல் பெறும் உரிமை விதிகள் 2012ன் ஒரு பகுதியாகும். இதைப் பார்க்க கீழ்க்கண்ட இணையதளத்திற்கு வருகை தரவும்.

*http://ccis.nic.in/writeReadData/circularPortal/02/Do2rti/i_35_2009-IR-1.pdf*

### 2.7.6. மத்திய அரசின் வனத்துறை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் மனு படிவம்

(தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ன் கீழான விண்ணப்பப் படிவம்)

(விண்ணப்பதாரரினால் இரண்டு படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, அவை டெல்லியிலுள்ள பரியவரன் பவானில் அமைந்துள்ள மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் அலுவலக வரவேற்பறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

1. (அ) விண்ணப்பதாராரின் பெயர் மற்றும் முகவரி:
   (ஆ) மின்னஞ்சல் முகவரி
   
   (இ) தொலைபேசி / பேக்ஸ்
2. விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாள்
3. விசயத்தின்பொருள்
4. வேண்டிய தகவல் விபரம்
5. கேட்கப்படும் தகவல் எந்தக் காலக்கட்டத்தைச் சேர்ந்தது
6. இணைக்கப்பட்ட கட்டணம் (பணம்/வரைவோலை/வங்கி காசோலை)

7. தகவல் தர வேண்டிய நாள் (விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள்)
8. மனுதாரர் தனக்கு வேண்டிய தகவலை எப்படி அனுப்ப வேண்டும் என்று விரும்புகிறார்?
   - அஞ்சலின் மூலமாக
   - நேரில் பெற்றுக் கொள்வது
   - மின்னஞ்சல் மூலமாக
   - தொலைநகலின் மூலமாக

மனுதாரரின் கையொப்பம்

விண்ணப்பப்படிவம் கீழ்க்கண்ட இணையதளத்தில் கிடைக்கும்

*http://envfor.nic.in/sites/default/files/app_pro.pdf*

## 3. புதுப்பித்துக் கொள்ளக்கூடிய மின் சக்திக்கு மாற்றம்

புதுப்பிக்கத்தக்க ஆற்றலானது, சூரியன், காற்று மற்றும் தண்ணீர் போன்ற இயற்கையான மற்றும் நீர்த்துப் போக (காலி செய்ய) முடியாத ஆதாரங்களைக் கொண்டு உருவாக்கப்படும், சுத்தமான மற்றும் நிலைத்து நீடித்து இருக்கக்கூடிய ஆற்றலாகும். இவ்வாற்றலின் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நன்மைகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்.

- பசுமை இல்ல வாயுக்களின் வெளிப்பாடின்றி, காற்று மாசடைவது குறைக்கப்பட்டு, மின்சாரம் உற்பத்தியாகிறது
- இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருட்கள் மீதான சார்புத் தன்மையைக் குறைப்பதற்கான, பல்வேறு வகையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்போதும், ஆயத்தப்பணிகளின் மூலம் ஏற்படுத்தப்படும் வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கிறது

புதுப்பிக்கத்தக்க மின் சக்திக்கான ஆதார வளங்கள்

### சூரிய சக்தி

சூரிய ஒளியின் சக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் கட்டிடங்களுக்குச் தேவையான வெப்பம் மற்றும் மின் ஒளியை அளிக்கப் பயன்படுகிறது. மேலும் வெந்நீர் தயாரிப்பதற்கும், குளிர்விப்பதற்கும், மேலும் வணிகரீதியான மற்றும் தொழிற்சாலைகளின் பலவிதமான பயன்பாடுகளுக்கு உபயோகமாக உள்ளது.

### காற்றின் சக்தி

காற்றின் சக்தியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யவும், பேட்டரியின் மின்சக்தியைப் புதுப்பிக்கவும், தண்ணீரை இறைக்கவும், மாவாட்டும் இயந்திரங்களை இயக்கவும், காற்றாலை சக்தியால் முடியும். காற்று விசையாழிகளை நெருக்கமாக இருக்கும்படி கட்டமைத்து, காற்றாலையை உருவாக்கும்போது, நடைமுறையில் பயனுடைய மின்சார உற்பத்தியை பெற முடியும்.

### உயிர் சக்தி

ஆயிரக்கணக்கான வருடங்களாக மரத்துண்டுகள் எரிக்கப்பட்டு நிலக்கரியானது, எரிபொருளாக பயன்படுவது நாம் அறிந்ததே. இதைப் போல், விவசாயக் கழிவுகள், கரியமில மற்றும் தாவரங்கள் வனங்களின் கழிவுகள் மற்றும் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் உயிரிக்கழிவுகளைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம்.

### நீர் சக்தி

நீர் வீழ்ச்சி அல்லது பாய்ந்தோடும் தண்ணீரிலிருந்து மின்சாரத்தைத் தயாரிக்க முடியும். நீரிலிருந்து பெரிய அளவிலும், சிறிய அளவிலும் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்கள் தற்போது கிடைக்கின்றன.

### புவி வெப்ப சக்தி

பூமியிலிருந்து வெளியேறும் வெப்பத்தைக் கொண்டு, மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும். இப்படிப்பட்ட ஆதாரங்கள், ஆழமில்லாத நிலங்களிலும், வெண்ணீர் ஊற்றுக்களிலிருந்தும், பூமியின் வெளி அடுக்கிலிருந்து சில மைல்களுக்கு அப்பால் உள்ள சூடான பாறையிலிருந்தும் வெளியேறும் வெப்பமானது, மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கான ஆதாரமாகும்.

### சமுத்திரத்தின் சக்தி

அலைகளும், ஓதங்களும் தொடர்ந்து இயங்குவதால் ஏற்படும் இயந்திர சக்தியையும். கடலின் மேல் விழும் சூரிய கதிர்களின் வெப்பமும் மின் சக்தியாக மாற்ற முடியும். சூரியனின் ஒளிக்கதிர்களில் 70 சதவீதம் சமுத்திரத்தால் உள்வாங்கப்படுகிறது. ஏனெனில் பூமியின் 70 சதவித நிலப்பரப்பு சமுத்திரத்தால் ஆனதாகும். சமுத்திரத்தின் ஆழத்தில் உள்ள வெப்பமும், சமுத்திரத்தின் மேல் மட்டத்தில் உள்ள வெப்பமும், வேறுபடுவதால் ஏற்படும் வெப்ப வித்தியாசமானது மின்சார சக்தியாக மாறுகிறது.

### புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கானத் திட்டங்கள்

### சிறிய அளவிலான திட்டங்கள்

புதுப்பிக்கத்தக்க மின்சக்தி அமைப்புகள் அல்லது கருவிகள், கட்டிடங்களின் மேற்கூரைகளில் மின்சார மாற்றிகளாக செயல்படும் வகையில் பொருத்தப்படுகின்றன. சிறிய அளவில் மின்உற்பத்தி செய்யக்கூடிய தொழில் நுட்பங்கள் உள்ளூரைச் சார்ந்ததாகவும், உள்ளூரில் பரிச்சயமானதாக இருப்பதோடு, பரவலான தேவைகளை பூர்த்தி செய்பவையாகவும் உள்ளது. (தொழிற்சாலைகள், பொழுதுபோக்கு மையங்கள் அல்லது உள்ளூர் சமூகங்களின் தேவைகளான குளிரூட்டிகள், வெப்பமாற்றிகள், மின்கலன்கள் போன்றவை மாற்று மின்சார சக்தியைக் கொண்டு இயக்க முடியும்).



சிறிய அளவிலான மாற்று மின்சக்தி உற்பத்தி அமைப்புகள், மின் ஆற்றல் நிலைய இணைப்பு வரைச்சட்டத்துடன் இணைக்கப்படும் அல்லது மாவட்ட அளவில் குளிரூட்டப்படும் அல்லது வெப்பமூட்டும் இணையதளத்துடன் இணைக்கப்படும் அல்லது தனிச்சையாக செயல்படும் மின் அமைப்பாக உள்ளது.

### சிறிய அளவிலான தொழில்நுட்பங்கள்– சில உதாரணங்கள்



### மேற்கூரையில் அமைக்கப்படும் சூரிய மின் சக்தி அமைப்பு

இத்தகைய அமைப்புகள், சூரியனின் ஒளிச்சேர்க்கையை, வேதியியல் பட்டைகளில் செலுத்துவதின் மூலம் மின்சார சக்தியை உருவாக்குபவையாகும். இத்தகைய சூரிய ஒளியை கொண்ட மின் மாற்றி கருவிகள் கட்டிடங்களில் மேற்பரப்பில்/கூரைகளில் பொருத்தப்பட்டிருக்கும்.



### சிறிய அளவிலான காற்று விசையாழிகள்

வீட்டுமனை குடியிருப்புகள் அல்லது சிறிய அளவிலான வியாபார அமைப்புகளின் மின்சார தேவைகளைப் பூர்த்தி செய்யும் காற்று விசையாழிகள், 100 கிலோ வாட்ஸ் அளவுக்கு குறைவான மின்சாரத்தை அளிக்க வல்லவையாகும்.



### வீடுகளுக்கான சூரிய ஒளி சுடுநீர் கருவிகள்

இவை, இல்லங்களின் சுடுநீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மிகவும் பரவலாக பயன்படுத்தப்படுபவையாகும். இந்த சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகள் வீட்டின் கூரையில் அல்லது மாடியில் பொருத்தப்பட்டிருக்கும் ஒளிக்கதிர்ப்பட்டைகளின் மூலம் சூரிய வெப்பத்தை உறிஞ்சி, சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரை

வெப்பமாக்கவும் அல்லது தண்ணீரில் நேரடியாக செலுத்தப்பட்டு சுடுநீராக வெளிக்கொண ருபவையாகும். இக்கருவிகள் மழைக்காலங்களில், காற்று அல்லது மின்சார செறிவூட்டிகளின் உதவியோடு, தேவைப்படும்பொழுது சுடுநீரை உற்பத்தி செய்யும் திறம்படைத்தவையாகும்.



### வெப்ப எக்கி (Heat Pump)

இந்த கருவியின் தொழில்நுட்பமானது, வீட்டின் எந்த பகுதியிலாவது தேவைப்படாத அல்லது வெளியேற்றப்பட வேண்டிய வெப்பத்தை கடத்தி, அதை தண்ணீரில் செலுத்த வல்லதாகும். அவ்வாறு வெளியேற்றப்படும் அதிகமான உஷ்ணம், சூரியக் கதிர்களால் மேலும் வெப்பமாக்கப்பட்டு, தண்ணீர் சுடுநீராக மாற்றப்படுகிறது.

### வணிகத்திற்கான / தொழிற்சாலையில் பயன்படக்கூடிய சூரிய சக்தியிலான வெந்நீர் கருவிகள்

சூரிய ஒளியைப் பயன்படுத்தி தண்ணீரை வெந்நீராக மாற்றும் கருவிகள் வணிக ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருவதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. (உ.ம்) மருத்துவமனைகள், சலவைமனைகள், பள்ளிக்கூடங்கள், கூட்டுக்குடும்பங்கள்

### சூரிய சக்தியிலான குளிரூட்டிகள்

இத்தகைய கருவிகள், தேவைப்படும் வெப்பத்திற்கேற்ப சூரிய சக்தியைப் பயன்படுத்தி காற்றை ஒருநிலைப்படுத்தும் கருவிகளாகும். இவை சேமிக்கப்பட்ட சூரிய சக்தி அல்லது சூரிய வெப்ப சக்தியை ஒளிக்கதிர்–வேதியியல் பட்டைகளில் செலுத்தும்போது, சூரிய சக்தி மின் சக்தியாக மாற்றப்பட்டு, காற்றானது விரும்பிய வெப்பத்திற்கேற்ப சீராக்கப்பட்டு குளிர்காற்றாக மாறுகிறது.

## பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க மாற்று சக்தி கருவிகள்

புதுப்பிக்கத்தக்க மாற்று மின்சார கருவிகள், மின் கடத்திகளக் அமைப்புகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டு, மின்சாரத்தை வழங்குகின்றன. இப்படிப்பட்ட மின் கடத்தி அமைப்புகளுடன் இணைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க மாற்று மின்சார திட்டங்கள், காற்று சக்தியையோ உயிர் கழிவுகளின் சக்தியைக் கொண்டோ, சூரிய ஒளியைக் கொண்டோ (1 மெகாவாட் மின்சாரம் வரை) தண்ணீரைக் கொண்டோ (25 மெகாவாட்) தனியாரின் முதலீட்டைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்பவையாகும். இவற்றிற்கான வரி கொள்கைகள், மாநில மின்சார ஒழுங்கமைப்பு ஆணையத்தால் இயற்றப்படுகின்றன.


சூரிய மின் சக்தி நிலையம்


காற்றாலை மின் சக்தி நிலையம்


உயிரிகழிவுகளைக் கொண்டு மின் சக்தி நிலையம்


சிறிய அளவிலான நீர் மின் சக்தி நிலையம்

### சமூகம் சார்ந்த பரவலாக்கப்பட்ட பன்முகத்தன்மையுடைய உற்பத்தி விநியோகம்


பரவலாக்கப்பட்ட உற்பத்திவிநியோகத்தைப்பொறுத்தமட்டில்சிறிய அளவிலான ஒழுங்கமைக்கப்பட்ட மின் ஆற்றல் நிலைய இணைப்பு வலைச்சட்டத்திற்கு வெளியே செயல்படக்கூடிய புதுப்பிக்கத்தக்க



சூரிய மின் சக்தி நிலையம்



உயிரிகழிவுகளைக் கொண்டு மின் சக்தி நிலையம்



காற்றாலை மின் சக்தி நிலையம்

மின்சார அமைப்புகள், தனியாக பயன்பட வாய்ப்புள்ள இடங்களில் வைக்கப்படுகின்றன. மின்சார இணைப்புகளுக்கு, வாய்ப்பில்லாத தொலை தூர கிராமப்புறங்களுக்கு, இத்தகைய அமைப்புகள் மிகவும் பயனுள்ளதாகும். உள்ளூர் வேலை வாய்ப்புக்கும், உள்ளூர் கழிவுகளை மறு உற்பத்தி சுழற்சிக்கு பயன்படுத்தவும், உள்ளூர் கட்டமைப்பு மற்றும் மின்சார உபயோகத்தின் மீது உள்ளூர் அளவிலே கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவும், இத்தகைய தனித்துவமான மாற்று மின்நிலைய அமைப்புகள் மிகவும் பொருத்தமானவையாகும்.

பன்முகத்தன்மையுடைய உற்பத்தி விநியோக அமைப்புகள், ஒரு மையப்படுத்தப்பட்ட சூரிய ஒளி அல்லது காற்றி விசையாழியிடமிருந்து சக்தியைப் பெற்றோ அல்லது இவ்விரு சக்திகளைக் கூட்டாகப் பெற்றோ மின்சாரத்தை உருவாக்குகின்றன. இவை மரபுசார்ந்த எரிசக்தி அமைப்புகளை ஊக்குவிக்கும் அமைப்புகளாகவோ அல்லது மாற்று மின்சக்தி அமைப்புகளாகவோ செயல்படுகின்றன. நேரடியாக நுகர்பவர்களைச் சென்றடையும் வண்ணம், இத்தகைய மாற்று மின்சக்தி அமைப்புகள் செயல்படுகின்றன. இதனால் மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும்போதும், விநியோகிக்கும்போதும், ஏற்படும் இழப்பு தவிர்க்கப்படுகிறது.

புதுப்பிக்கத்தக்க சக்திசார்ந்த அமைப்புகளை ஆதரிக்கும் கொள்கைகள் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

### புதுப்பிக்கத்தக்க மின்சார அமைப்புகளின் இணைப்பு பட்டியலுக்கான தரங்கள் (Portfolio)

புதுப்பிக்கத்தக்க மின்சக்தி அமைப்புகளை ஆதரிக்கும் நோக்குடன் இந்திய அரசானது புதுப்பிக்கத்தக்க இணைப்பு பட்டியலுக்கான தரங்களை வகுத்துள்ளது. இதன்படி முதலாவதாக, மின்சார உற்பத்தி கம்பெனிகள், புதுப்பிக்கத்தக்க மின்சக்தி ஆதாரங்களிலிருந்து, ஒரு குறிப்பிட்ட அளவிலான மின் உற்பத்தியை செய்ய வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றன.(b) விநியோக கம்பெனிகள் அத்தகைய கம்பெனிகளிடமிருந்து மின்சாரத்தை வாங்க வேண்டும். இந்த நோக்கத்துடன், மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையமானது, மின் இணைப்பு சட்டகத்தில் இணைக்கப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க மின் பயனீட்டு அமைப்புகளின் மீது, ஏற்கனவே நிர்ணயித்துள்ள சந்தை விலைக்கும் அதிகமான விலையை தரும்படி ஊக்கப்படுத்துகின்றது. இத்தகைய விலை நிர்ணயங்கள் (மின்சார வரி) புதுப்பிக்கத்தக்க மின்சக்தி ஆதாரங்களை பொருத்து மாறுவதோடு, மாற்று மின் சக்தி உற்பத்தியாளர்களுக்கு, ஒரு தொடர்ச்சியான வருமானத்தை, அவர்களுடைய திட்டங்களிலிருந்து பெற, வகை செய்கிறது.

## புதுப்பிக்கத்தக்க மின்சார சான்றிதழ்கள்(REC)

புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை ஆதரிக்கும் மற்றொரு நடவடிக்கையே, புதுப்பிக்கத்தக்க மின் சக்தி சான்றிதழ் வழங்கும் திட்டமாகும். இத்தகைய சான்றிதழ்கள், உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்திக்கு தனியாகவும், இந்த உற்பத்தியால் கையாளப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் தன்மைகளுக்கு தனியாகவும் வழங்கப்படுவதாகும். உருவாக்கப்பட்ட மின்சாரத்தில் இருந்து, இந்த தன்மைகள் தனியாக பிரிக்கப்பட்டு, அவற்றிற்கே சான்றிதழ் வழங்கப்படுகிறது. மொத்தத்தில் இரண்டு விதமான உற்பத்தி பொருட்கள் விற்பதற்கோ அல்லது வணிகத்திற்கோ கிடைக்கின்றது. (1) புதுப்பிக்கத்தக்க மின்சக்தி சான்றிதழ் (2) மின்சக்தி உற்பத்தி.

ஒரு REC என்பது 1 மெகா வாட் சக்தியைப் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து, மின் உற்பத்தி செய்வதைக் குறிக்கும். புதுப்பிக்கத்தக்க மின்சக்தி சான்றிதழ் பெறுவதற்கு, புதுப்பிக்கத்தக்க ஆதார வளத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் முதலீட்டாளருக்கும், விற்பனையாளருக்கும் தேவையில்லை.

## நிகர அளவை (Net metering)

நிகர அளவை முறையானது, மேற்கூரை சூரிய மின் சக்திகருவி மூலம் நேரடியாக புதுப்பிக்கத்தக்க மின் சக்தியை உற்பத்தி செய்து அதை மின்நிலைய இணைப்புத் தளத்திற்கு (transfer) மாற்றுவதை ஊக்குவிக்கின்றது. இணைப்புத் தளத்திற்கு அனுப்பப்பட்ட அளவிற்கேற்ப, உற்பத்தியாளர்கள் ஈட்டுத்தொகையைப் பெறுவர். நிகர அளவை முறையானது உற்பத்தியாளர்கள், மின்சார அளவை கருவியானது, உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் எந்த அளவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் எந்த அளவிற்கு இணைப்பு தளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை பதிவு செய்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவானது, தேவைப்படும் அளவிற்கு குறைவாக இருந்தால், இணைப்பு தளத்திலிருந்து, மின்சாரத்தை பயன்படுத்தலாம்.

## தடையற்ற வாய்ப்பு (Open access)

ஒரு மெகாவாட் அல்லது அதற்கும் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்துவோர், திறந்தவெளிச் சந்தையிலோ அல்லது புதுப்பிக்கத்தக்க மின்சக்தி ஆதாரங்களிலிருந்து குறைந்த விலையில் மின்சாரத்தைப் பெறுவதற்கு 'தடையற்ற வாய்ப்பு கொள்கை' அனுமதிக்கிறது. மின்சாரச் சட்டம் 2003ன்படி, மின்சார உற்பத்தியை இணை தளத்திற்கு அனுப்பும் உரிமையாளர்களிடம், மற்றும் விநியோக இணையத் தளங்களின் உரிமையாளர்களிடம் அசல் மற்றும் கூடுதல் தொகையைச் செலுத்தி, பயன்பாட்டாளர்கள், தடையற்ற வாய்ப்பின் அடிப்படையில் மின்சார மாற்றி கம்பிகளைப் பயன்படுத்த அனுமதிக்கிறது. இதன்மூலம் அவர்களின் பண விரயத்திற்கு ஈடு செய்கிறது. பயனீட்டாளர்கள், சந்தையில் உள்ள போட்டி போட்டு விற்பனை செய்கின்ற மின்சக்தி விற்பனையாளர்களில், தங்களுக்கு ஏதுவாக உள்ளவரை தேர்வு செய்ய இந்த கொள்கை உதவுகிறது. தனிப்பட்ட மின்சார நிறுவனங்கள் மீதான சார்புத் தன்மையை இது குறைக்கிறது. குறிப்பாக, ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய பெரிய பயனீட்டாளர்களான நலிவுற்ற ஜவுளி தொழிற்சாலைகள், சிமெண்ட் மற்றும் இரும்பு உற்பத்தி அலகுகள் போன்றவை, தடையற்ற வாய்ப்பின் அடிப்படையில் போட்டிக்குரிய விலையில், மின்சாரத்தை தங்கு தடையின்றி பெற உதவுகிறது.

**மான்யம்**

கடன், விலைக்குறைப்பு, கொடை, வரிச்சலுகை போன்ற நிதிச் சலுகைகள், புதுப்பிக்கத்தக்க மின்சார மேம்பாட்டிற்காக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சகத்தால் வழங்கப்படுகின்றன. இச்சலுகைகள், மாநில அரசாலும், இந்திய புதுப்பிக்கத்தக்க மின்சார துறை முகமை மூலமாகவும் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

**உற்பத்தி அடிப்படையில் சலுகை**

இந்திய அரசாங்கம், மின் உற்பத்தி நிலைய இணைப்புத்தளத்துடன் தொடர்புடைய காற்றாலை மற்றும் சூரிய மின்சார திட்டங்களிலிருந்து கூடுதல் மின்சாரம் உற்பத்தியை, அறிமுகப்படுத்தியுள்ளதோடு உற்பத்தி அடிப்படையிலான சலுகையையும், வழங்க முன்வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், மின் இணைப்புதளத்தில் உற்பத்தி செய்து அனுப்பப்படும் மின்சாரத்திற்கான வரிக்கட்டணத்துடன், காற்றாலை மற்றும் சூரிய சக்தி உற்பத்தியாளர்களுக்கு நிதிச்சலுகைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், காற்றாலை மின்சக்தி உற்பத்தியாளர்கள் 4 வருடங்களுக்கு குறையாமல், மின்நிலைய இணைப்பு தளத்திற்கு மின்சாரத்தை அனுப்ப முடிந்தால், உற்பத்தி அடிப்படையிலான சலுகை திட்டத்தின் படி ஒரு அலகிற்கு 50 பைசாவும், அதிகபட்சம் 10 வருடத்திற்கும் தரப்படுகிறது. இதற்கான முதலீடாக ஒரு மெகாவாட் மின்சாரத்திற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

**விரைவான மதிப்பிறக்கம்**

நிதி கணக்கீட்டிற்காகவோ அல்லது வரி செலுத்தும் நோக்கத்திற்காகவோ, ஒரு நிறுவனமானது, கையாளும் பலமுறைகளில் ஒன்றுதான் விரைவான மதிப்பிறக்க முறையாகும். இதில் ஒரு நிலையான சொத்தின் மதிப்பிறக்கமானது, முந்தைய வருடங்களைவிட அதிக அளவில் செய்யப்படுவதாகும். நிதி கணக்கீட்டு தேவைக்காக, சொத்தின்மீது விரைவான மதிப்பிறக்கம் செய்வதன் மூலம், சொத்தானது ஒவ்வொரு வருடமும் எந்த அளவிற்கு உபயோகப் படுத்தப்படுகிறது என்பது துல்லியமாக கணிக்க முடியும். மதிப்பிறக்கம் செய்யப்படும் தொகையும், சொத்தானது பயன் அளிக்கும் தொகையும், ஒப்பீடு செய்யப்படுகிறது. வரிகாட்டும் நோக்கத்திற்காக, விரைவான மதிப்பிறக்க முறையானது, கம்பெனியின் வருமான வரியை நடப்பு வருடங்களில் குறைக்க உதவுகிறது. அதற்கு மாற்றாக, வருங்காலங்களில் கூடுதல் வருமான வரி செலுத்த வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இது ஒரு மதிப்புமிக்க வரிசலுகையாகும். ஏனெனில் புதிய சொத்துக்களை வாங்குவதற்கு கம்பெனிக்கு ஊக்கம் அளிக்கிறது. சூரிய மின்சக்தி உற்பத்தியைப் பொறுத்தமட்டில், முதலீட்டாளர்கள், மின் உற்பத்தி சந்தையில் நுழைவதற்கான சலுகைகள் அளிக்கும் விதமாக, இந்திய அரசாங்கம் சூரிய மின்சக்தி நிலையம் செயல்பட துவங்கிய முதலாவது வருடத்திலேயே, திட்ட சொத்துகள் மீது 80 சதவிகித மதிப்பிறக்கம் செய்ய அனுமதிக்கிறது.

**மின்சாரச் சட்டம் 2003, தேதிய மின்சார கொள்கை மற்றும் தேசிய வரிக்கொள்கை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பற்றிய தகவல்களை கீழ்க்கண்ட பட்டியலில் காணலாம்.**

| | |
|---|---|
| **மின்சாரச் சட்டம் 2003** | முகப்புரை (பக்கம்–1) "மின் உற்பத்தி, மின் கடத்தி, மின் விநியோகம், விற்பனை மற்றும் மின்சாரம் உபயோகம் குறித்த சட்டங்களையும், மின்சார தொழிற்சாலையை மேம்படுத்துவதற்கு ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும், பயனுறுதி நிறைந்த, சுற்றுச்சூழலுக்கு இசைவான கொள்கைகளை ஊக்குவிக்கும் சட்டங்களையும் தொகுக்கும் சட்டமாகும். |
| **புதுப்பிக்கத்தக்க ஆற்றலையுடைய மின்சக்தியை ஊக்குவிக்கும் ஒழுங்குமுறை கருவிகளுக்கான ஆணையம்** | பகுதி 2(47) தகுதியுள்ள ஆணையத்தினால் வரையறுக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளை, மின் உற்பத்தியில் ஈடுபடுபவரோ அல்லது நுகர்பவரோ அல்லது உரிமம் பெற்றவர் மின் கடத்தி கம்பிகளையோ அல்லது விநியோக அமைப்புகளையோ அல்லது அது தொடர்பான வசதிகளை உடைய கம்பிகளை பயன்படுத்துவதற்கான பாகுபாடுகள் அற்ற பிரிவு.<br><br>மின்சாரச் சட்டம் 2003ன் சட்ட பிரிவு 86 (1)<br><br>மாநில ஆணையமானது, புதுப்பிக்கத்தக்க ஆற்றலை கொண்டு மின்சக்தியை நேரடி உற்பத்தி அல்லது இணை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும், பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மின் ஆற்றல் நிலைய இணைப்பு வரைச்சட்டத்திலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கும் விற்பதற்குமான நடைமுறைகள் மற்றும் ஒரு பகுதியின் ஒட்டுமொத்த நுகர்வின் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை, மாற்று எரிசக்திக்கு உரிமம் பெற்ற நபரிடம் இருந்து, வாங்குவதற்கும் தேவைப்படும் நடைமுறைகளை உள்ளடக்கியதாகும்.<br><br>பிரிவு 61 (h) மாற்று எரிசக்திக்கான வரியை தீர்மானிப்பதற்கான நிபந்தனைகளை, தகுதியான ஆணையம் வரையறுப்பதுடன் கீழ்க்கண்ட வழிகாட்டுதல் அடிப்படையில் தீர்மானிக்கும்<br><br>(h) புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி, உற்பத்தி மற்றும் இணை உற்பத்தியை ஊக்குவிப்பது<br><br>(i) தேசிய மின்சார கொள்கை மற்றும் வரிக்கொள்கை |
| **தேசிய மின்சாரக் கொள்கை** | "5.2.20 மரபுசாரா எரிசக்தி மூலங்களான நீர், காற்று, தாவர கழிவுகளை கொண்டு கூடுதல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சாத்தியங்களை முழுமையாக பயன்படுத்துவது; ஒட்டுமொத்த மின்சார உற்பத்தியில் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில் பொருத்தமான ஊக்குவிப்பு செயல்பாடுகள் மூலம் தனியார் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வது". |
| **தேசிய வரிக்கொள்கை** | **6.4.** "மின்சார உற்பத்தி செலவைப் பொறுத்தமட்டில் மரபு சார்ந்த ஆதாரங்களைவிட மரபுசாரா ஆதாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட இன்னும் சற்று காலம் ஆகலாம். எனவே வினியோக கம்பெனிகள் மின்சாரத்தை வாங்குவதற்கான முன்னுரிமை வரிகளைப் பொருத்தமான ஆணையம் தீர்மானிக்கும். விநியோக உரிமையாளர்கள் அவ்வாறு தொடர்ந்து வாங்கும்போது கூடிய மட்டும் பொது ஏலத்தில் மூலம் நிர்ணயிப்பது . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . மரபு சாரா ஆதாரங்கள் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்பவர்கள் மத்தியில் . . . . . . . . . . . . ." |

## மரபுசாரா மின்சக்தியை ஆதரிக்கும் நிறுவனங்கள்

| நிறுவனம் | நோக்கம் | விபரங்கள் | முகவரி |
|---|---|---|---|
| புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி அமைச்சகம் (MNRE) | இந்திய அரசாங்கத்தின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க மின் சக்திக்கான தலைமை அலுவலகம் | ஆய்வு, மேம்பாடு, திட்ட அமைப்பு புதுப்பிக்கத்தக்க சக்திகளை உற்பத்தி மற்றும் விரிவுபடுத்துதல் அமைப்புகள், மின்சாரத்தை கடத்துவதற்கான கருவிகள், கிராமப்புற நகர்ப்புற தொழிற்சாலை மற்றும் வணிகத்துறைகளில் பயன்படுத்தக்கூடிய தூக்கிச் செல்ல ஏதுவான அல்லது நிரந்தர சாதனங்கள் | Block-14, CGO Complex,<br>Lodhi Road,New Delhi-110 003, India.<br>Tel: +91-11-24362772<br>Email: secy-mnre@nic.in |
| இந்திய புதுப்பிக்கத்தக்க சக்தி மேம்பாடு முகமை லிமிடெட் (IREDA) | புதுப்பிக்கத்தக்க சக்தி எரிசக்தி திறன் சேமிப்பு திட்டங்களுக்கான நிதியுதவி ஆதரவு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் | உற்பத்தி செய்யும் மின்சாரம் மற்றும் புதிய புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து மின் உற்பத்தி செய்யவும் மின்சக்தி திறனை மேம்படுத்துவதன் மூலம், மின்சக்தியை சேமிக்கும் குறிப்பிட்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல் | 3rd Floor, August Kranti Bhawan,BhikaijiCama Place,<br>New Delhi – 110 066.<br>Phone: +91 11 26717400 - 413<br>Fax: +91 11 26717416<br>Email: cmd@ireda.gov.in |

| நிறுவனம் | நோக்கம் | விபரங்கள் | முகவரி |
|---|---|---|---|
| புதுப்பிக்கத்தக்க மேம்பாட்டு மின்னாற்றல் முகமைகள் | புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மேம்பாட்டிற்கான மாநில தலைமை முகைமை அமைப்பு, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரி சக்தி அமைச்சகத்தின் கொள்கைகள் மற்றும் அந்தந்த மாநில கொள்கைகளினால் வழிநடத்தப்படுகிறது | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வது ஆதரிப்பது, அப்படிப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மின்சக்தி சேமிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவது புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான ஆதாரங்கள் குறித்து, ஆய்வு மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளை ஆதரிப்பது | Tamil Nadu Energy Development Agency<br>E.V.K. Sampath Maaligai<br>5th Floor<br>No.68, College Road<br>Chennai 600 006.<br>Tel: 044-28236592<br>Fax 044-28222971<br>Email: info@teda.in<br><br>Karnataka Renewable Energy Development Agency<br>No.39,"Shanthigruha" Bharath Scouts & Guides Building<br>Palace Road<br>Phone: (080)22207851 / 22208109/9480691041.<br>Fax:080-22257399<br>Email: kredlnce@yahoo.co.in<br><br>Kerala Agency for Non-conventional energy and Rural Technology,<br>Police Parade Ground, Thycaud, Thiruvananthapuram – 695014.<br>Phone: (0471)2329854, 2338077, 2334122, 2333124 &2331803<br>Fax:(0471)2329853<br>Email:director@anert.in<br><br>Andhra Pradesh: Non-conventional Energy Development Corporation of Andhra Pradesh Limited [NEDCAP]<br>5-8-207/2, Pisgah Complex, Nampally,<br>Hyderabad - 500 001.<br>Phone:(040)2320 2391<br>Fax: (040)23201666<br>Email: info@nedcap.gov.in, nedcap@ap.nic.in |

| நிறுவனம் | நோக்கம் | விபரங்கள் | முகவரி |
|---|---|---|---|
| மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் | மின்சார வரிகளை பகுப்பாய்வு செய்வது, மான்யம் குறித்த வெளிப்படையான கொள்கைகள், திறன்மிக்க சுற்றுச்சூழலுக்கு நன்மை விளைவிக்கும் கொள்கைகள். இது தொடர்பான இது தொடர்பாக நிகழக்கூடியவைக்கும் | மின்சார ஒழுங்குமுறை ஆணையம் புதுப்பிக்கத்தக்க மின் சக்தியை கட்டாயமாக ஆதரிக்க வேண்டும் Sec 84 (1) (e) | Tamil Nadu Electricity Regulatory Commission (TNERC)<br>19A, Rukmini Lakshmipathy Salai, Egmore<br>Chennai 600 008.<br>Tel: 044 - 28411376<br>28411378 / 28411379<br>Fax: (044) 28411377<br>Email: tnerc@nic.in<br><br>Karnataka:<br>6th & 7th Floor, Mahalaxmi Chambers, # 9/2, M.G.Road, Bangalore - 560 001<br>Phone: (080) 25320213 / 214, 25320339, 25323765<br>Fax: 080-25320338,<br>Email: kerc35@bsnl.in<br><br>Andhra Pradesh:<br>4th & 5th Floors, 11-4-660, Singareni Bhavan, Red Hills, Hyderabad 500 004<br>Phone: (040) 23397381<br>Fax: (040) 23397378 &23397489<br>Email: chmn@aperc.gov.in<br><br>Kerala:<br>K.P.F.C. Bhavanam, C.V. Raman Pillai Road, Vellayambalam Thiruvananthapuram Kerala 695010<br>Phone: (0471) 2735544<br>Fax: 0471) 2735599<br>E-mail: kserc@erckerala.org |

# இணைப்பு (அ)

## படிவம் 1ன் வடிவம்

### அடிப்படைத் தகவல்

1. திட்டத்தின் பெயர்
2. வகை / இயல்நிலை
3. முன்மொழியப்பட்ட அளவு
4. மிக அருகில் உள்ள நகரம் /நகர்/இரயில்வே நிலையம்/ விமான நிலையம்/ இவற்றின் தூரம் கி.மீட்டரில்
5. இத்திட்டம் கீழ்க்கண்ட சட்டங்களின்படி ஒப்புதல் பெற வேண்டுமெனில் அதற்கான விபரங்கள்

   a) வனப் பாதுகாப்புச் சட்டம் 1980

   b) வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972

   c) கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 1991

- பார்வையிடப்பட்ட மாற்று இடங்கள் குறித்த விபரங்கள் இருந்தால் (இடவியல்பு விளக்கப்படம்)
- தொடர்புடைய திட்டங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தொடர்புடைய திட்டங்கள் குறித்த விண்ணப்பம் பற்றிய தகவல்
- பெயர், முகவரி மற்றும் விண்ணப்பம் செய்பவரின் நியமனம்
- அரசு ஆணை குறித்த தகவல் / இடம் குறித்த கொள்கை
- வன நிலம்
- திட்டம் அல்லது மனை குறித்த நிலுவையில் உள்ள வழக்குகள் இருந்தால் அதுபற்றிய தகவல்கள்

### செயல்குறித்த தகவல்கள்

- கட்டுமானம்
- செயல்பாடு / திட்டத்தை செயல்படுத்துவதால் திட்டம் அமைக்கப்படவிருக்கும் இடத்தின் புறத்தோற்றத்தில் மாற்றங்கள்–இயல் நிலையில் மாற்றம், நிலப்பயன்பாட்டில் மாற்றம், தண்ணீர் நிலைகள் / நிலப்பயன்பாட்டில் ஏற்பட்ட தற்காலிக மற்றும் நிரந்தர மாற்றம்
- திட்ட அமைவிடத்தின் புற அமைப்பு, நிலப் பயன்பாட்டு அளவை அதிகமாக்குதல் (உள்ளூர் நிலப்பயன்பாடு திட்டத்தைப் பொறுத்தமட்டில்)
- இருக்கும் நிலத்தை கையகப்படுத்தல்
- தாவரம் வளர்த்தல் (பசுமைச் சூழல்) மற்றும் கட்டிடங்கள் ஏற்படுத்துதல்
- புதிய நில பயன்பாடு உருவாக்குதல்
- திட்ட செயல்பாட்டிற்கு முந்தைய விசாரணைகள், ஆழ் கிணறுகள், மண் பரிசோதனை
- கட்டிட வேலை
- சுத்தப்படுத்துதல் அல்லது கட்டிட தகர்ப்பு நடவடிக்கைகள்

- கட்டிட வேலைக்கான தற்காலிக குடியிருப்பு மனைகள் அல்லது பணியாளர்களுக்கான குடியிருப்புகள், வானம் தோண்டுதல் அல்லது மேல்மட்ட கட்டிடப் பணிகள், உயரமான கட்டிடங்கள் எழுப்புதல்
- அறுத்தல், நிரப்புதல் அல்லது அகழ்வாய்தல்
- அடிநிலை வேலைகள் (சுரங்கம் வெட்டுதல் அல்லது நிலவறை அல்லது அடிநில வழி அகழ்தல்
- நிலச்சீர்திருத்த செயல்பாடுகள்
- தூர்வாருதல்
- கடற்கரைக்கு வெளியே கட்டப்படும் கட்டிடங்கள்
- உற்பத்தி மற்றும் தொழிற்சாலை / பட்டறைச் செயல்பாடுகள்
- சாமான்கள் மற்றும் மூலப் பொருட்களைப் பாதுகாப்பதற்கான வசதிகள்
- திடக்கழிவுகள் மற்றும் கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்கான வசதிகள்
- உற்பத்தியில் பங்கேற்கும் தொழிலாளர்களுக்கான நீண்டகால குடியிருப்பு வசதிகள்
- புதிய சாலை
- கட்டிடப் பணியின்போதோ, அல்லது செயல்படும்போதோ, இரயில் அல்லது கடல்வழி போக்குவரத்தை நிர்வகிப்பது
- புதிய சாலை, இரயில், ஆகாய மார்க்கம் அல்லது நீர்நிலை மற்றும் இதர போக்குவரத்திற்கான கட்டமைப்புகள். இவற்றில் புதிய அல்லது மாற்றுப்பாதை, இரயில் நிறுத்தங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்களும் அடங்கும்
- தற்போது இருக்கின்ற போக்குவரத்து பாதை அல்லது கட்டமைப்பை மூடுதல் அல்லது மாற்றிவிடுதல் அல்லது சரக்கு போக்குவரத்து நடமாட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கட்டமைப்புகளை ஏற்படுத்துதல்
- புதிய அல்லது மாற்றியமைக்கப்பட்ட மின்கம்பி வரிசைகள் அல்லது பைப் வரிசைகள்
- வேலையடைத்தல் / அணைக்கட்டுதல் / சிறுபாலம் கட்டுதல்
- நீர்வரத்து அல்லது நீர் ஊற்று ஓட்டங்களை மாற்றி அமைத்தல்
- ஓடைகளைக் கடப்பதற்கான வழிகள்
- நிலத்தடி நீரை எடுத்தல் அல்லது நிலத்தடி நீர் மற்றும் நில மேல் மட்டத்தில் உள்ள நீரை மாற்றிவிடுதல்
- நீர்நிலைகள், வெள்ள வடிகால் அல்லது நீர் வடிகால்களின் ஓட்டப் பாதையில் மாற்றம்
- கட்டுமானத்திற்கான பணியாளர்கள் மற்றும் மூலப்பொருட்களின் போக்குவரத்து, நீண்ட காலம் தேவைப்படும் தகர்ப்பு பணிகள் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கான பொறுப்பு
- சுற்றுச்சூழல் மீது திட்ட நடைமுறையின்போது மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள், ஏற்படுத்தும் தாக்கங்கள்
- குறிப்பிட்ட பகுதிக்கு மக்களின் வரத்து, தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ அதிகரிப்பு
- அந்நிய உயிரிகளின் அறிமுகம்
- உள்ளூர் இனங்களின் இழப்பு அல்லது மரபணுவின் பன்முகத்தன்மையில் இழப்பு
- இதர நடவடிக்கைகள்
- இயற்கை ஆதாரங்களைப் பயன்படுத்துதல் (தகவல் மற்றும் தகவல் மூலங்களைப் பயன்படுத்துவது உட்பட)
- நிலம்–குறிப்பாக மேம்படுத்தப்படாதது அல்லது விவசாய நிலம் (ஹெக்டேரில்)

- தண்ணீர்–எதிர்பார்த்த ஆதாரம், போட்டி போடும் பயனீட்டாளர்கள்–ஒரு நாளைக்கு தேவைப்படும் அளவு (கிலோ லிட்டரில்)
- தாதுக்கள் (மெட்ரிக் டன்னில்)
- காடுகள் அல்லது மரங்கள் குறித்த ஆதாரங்கள் (மெட்ரிக் டன்னில்)
- மின்சக்தி, மின்சாரம் மற்றும் எரிபொருட்கள் (ஆதாரங்கள், போட்டியிடும் பயனீட்டாளர்கள் உட்பட)
- எரிபொருட்களின் அலகு–மெட்ரிக் டன்னிலும், மின்சாரம் மெகாவாட்டிலும்
- வேறுவகை இயற்கை வளங்கள் (பயன்பாட்டில் உள்ள பொருத்தமான தரங்களின் அலகு)

**மனித நலத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்கக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல், சேமித்தல், கையாளுதல் அல்லது வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்**

- நோய்கள் ஏற்படுவதில் மாற்றங்கள்
- நோய் கடத்திகளின் மீது பாதிப்பு (பூச்சி அல்லது நீர் சார்ந்த நோய்கள்)
- மக்களின் நலத்தைப் பாதித்தல் (வாழும் நிலைகளில் மாற்றம்)
- திட்டத்தால் அதிகம் பாதிப்படையக்கூடிய மிகவும் பலவீனமான மக்கள் (மருத்துவமனை நோயாளிகள், குழந்தைகள் மற்றும் வயோதிகர்கள்)
- வேறு ஏதாவது பாதிப்புகள்

**கட்டமைப்புப் பணிகளின் போதோ / செயல்பாட்டின் போதோ, அமைப்பபைக் கலைக்கும் போதோ (கலைப்புப் பணிகளின்) உற்பத்தியாகும் திடக்கழிவுகள்**

- சேதாரம்
- சுரங்கக் கழிவுகள்
- நகராட்சி கழிவுகள் (குடியிருப்பு மற்றும் வணிகக் கழிவுகள்)
- அபாயகரமான கழிவுகள் (அபாயகர கழிவுகள் நிர்வாக விதிகளின்படி)
- இதர தொழிற்சாலை உற்பத்திக் கழிவுகள்
- மிகுதியான உற்பத்தி / விளைபொருட்கள்
- சாக்கடைக் கழிவுகள் அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பின்போது வெளியேறும் கழிவுகள்
- கட்டுமான கழிவுகள் அல்லது கட்டிடத்தைத் தகர்க்கும் போது ஏற்படும் கழிவுகள்
- உபயோகப்படுத்தப்படாத இயந்திரம் அல்லது கருவிகள்
- மாசுபடுத்தப்பட்ட மண் அல்லது மூலப்பொருட்கள்
- விவசாயக் கழிவுகள்
- இதரத் திடக் கழிவுகள்

**அபாயகரமான நச்சான அல்லது நச்சுத்தன்மையுடைய பொருட்கள் காற்றில் பரவுதல் மற்றும் மாசுத்துகள்கள் வெளியேறுதல்**

- நகரும் ஆதாரங்களிலிருந்தோ அல்லது ஓரிடத்தில் நிலைத்திருக்க கூடிய புதைவடிவ எரிபொருட்களைக் கொளுத்தும்போது வெளியேறும் ஒளி / வெளிப்பாடுகள்
- உற்பத்தியின்போது வெளியேறும் வெளிப்பாடுகள்
- உற்பத்திகளம் மற்றும் கருவிகள் பொருத்தும் கட்டுமானப் பணிகளின் போது வெளிப்படும் வெளிப்பாடுகள்

- கட்டுமான மூலப்பொருட்கள், சாக்கடை கழிவுகள் மற்றும் இதர கழிவுகளைக் கையாளும்போது வெளியேறும் தூசி அல்லது வாடை
- கழிவுகளை எரித்து சாம்பலாக்கும் போது வெளியேறும் வெளிப்பாடுகள்
- திறந்தவெளியில் கழிவுகளை எரிக்கும்போது வெளியேறும் வெளிப்பாடுகள் (கூளப்பொருட்கள், கட்டுமான குப்பைகள்)
- இதர ஆதாரங்களிலிருந்து வெளியேறும் வெளிப்பாடுகள்

இரைச்சல், அதிர்வு, உற்பத்தி மற்றும் ஒளி வெப்ப வெளிப்பாடுகள்

- கருவிகளை கையாளும்போது (இயந்திரம், காற்றோட்ட சாதனம், நொறுக்கும் இயந்திரம்)
- தொழிற்சாலையிலிருந்து அல்லது இதர செயல்பாடுகளிலிருந்து
- கட்டுமானம் அல்லது தகர்ப்பு
- வெடிக்கும்போது அல்லது அடுக்கும்போது
- கட்டுமானத்தின் போது அல்லது போக்குவரத்து செயல்படத் துவங்கும்போது
- இலேசாக்கும்போதும், குளிரூட்டும்போது
- இதர ஆதாரங்களிலிருந்து

நிலம் மற்றும் நீர் மாசுபடுவதற்கான அபாயம்

- மண்ணில், சாக்கடைகளில், நீர்தளங்களில், நிலத்தடி நீரில், கடல் தண்ணீரில் / கடலில் மாசு துகள்கள் வெளியேற்றப்படுதல்
- அபாயகரமான பொருட்களை கையாளும்போது, சேமிக்கும்போது, பயன்படுத்தும்போது சிதறும் துகள்கள்
- நீரிலும், நிலத்திலும், வெளியேற்றப்படும் சாக்கடை நீர் அல்லது கழிவுநீர் (கழிவு வெளியேறும் இடம் மற்றும் முறை)
- மாசுத்துகள்கள் காற்றில் வெளியேறும் போது நீரிலும், நிலத்திலும் படிதல்
- இத்தகைய துகள்கள் தொடர்ந்து வெளியேறுவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுதல்
- இதர ஆதாரங்கள்

**கட்டுமானத்தின் போதும் / இயக்கத்தின் போதும் ஏற்படும் விபத்துகள் மனித நலத்தையும் சுற்றுச்சூழலையும் பாதிக்கும் வாய்ப்புகள்**

- வெடித்தல், சிதறுதல், தீப்பற்றுதல்
- அபாயகரமான பொருட்களை உற்பத்தி செய்தல், கையாளுதல், சேமித்தல் அல்லது பயன்படுத்துதல்
- இயற்கை பேரிடர்கள் ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் (பூகம்பம், வெள்ளம் போன்றவை)
- இதர காரணங்கள்

**சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் அல்லது உள்ளூரில் கூட்டு விளைவை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள்**

- திட்டத்தால் தூண்டப்பட்ட மேம்பாடு/வளர்ச்சி அல்லது உள்ளூர் வளர்ச்சிக்கானத் துணை மேம்பாடு குறித்த ஆதரவுப்பணிகள் சுற்றுச்சூழல் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் (உள்ளமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சாலைகள், மின்விநியோக, கழிவு மற்று கழிவு நீர் சுத்திகரிப்பு போன்றவை)
- குடியிருப்பு மேம்பாடு

- பிரித்தெடுக்கும் தொழிற்சாலைகள்
- விநியோகிக்கும் தொழிற்சாலைகள்
- இதரவை
- இடத்தின் பிந்தைய பயன்பாடு
- பிந்தைய வளர்ச்சிக்கான முன்னோடியாக அமைதல்
- இதே மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும், ஏற்கனவே இருக்கின்ற அல்லது திட்டமிடப்படுகின்ற திட்டங்களுக்கு, அருகில் இருப்பதால் ஏற்படும் குவிக்கப்பட்ட / ஒன்று திரட்டப்பட்டப் பாதிப்பு

புறத்தூண்டுதலுக்கு உடனடி எதிர் விளைவு காட்டும் சுற்றுச்சூழல் தன்மை

- சர்வதேச உடன்படிக்கையில் பாதுகாக்கப்பட்டுள்ள இடங்கள், தேசிய அல்லது உள்ளூர் சட்டங்களால் பாதுகாக்கப்படும் உயிர்ச்சூழல் தன்மையுடைய நிலப்பகுதி, கலாச்சாரம் அல்லது மதிப்பு வாய்ந்த தொடர்புடைய பகுதிகள்
- சூழலியல் காரணங்களால் அறியப்படும் நுட்பமான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள்
- சதுப்புநிலங்கள், நீர்த்தடங்கள், இதர நீர் நிலைகள், கடலோர மண்டலங்கள், மலைகள், உயிரியல் மண்டலம் மற்றும் வனங்கள்
- இனப்பெருக்கம், குஞ்சு வளர்ப்பு, தீனி (உணவு) ஒய்வு பணிக்காலத்தைக் கழிப்பது மற்றும் புலம் பெயர்வு போன்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான நுட்பமான செடி கொடி வகைகள் மற்றும் உயிரினங்களை உடைய பாதுகாக்கப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள்
- உள்நாடு, கடற்கரை, கடல் அல்லது நிலத்தடி மட்டத்தின் கீழ் உள்ள தண்ணீர்
- மாநில தேசிய எல்லைகள்
- சுற்றுலா, புனித யாத்திரைத் தலங்கள் அல்லது பொதுமக்களின் பொழுதுபோக்குக்கான வசதிகள் அல்லது வழித்தடங்கள்
- பாதுகாப்பு மையங்கள்
- மக்கள் தொகை அதிகமுள்ள அல்லது நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ளப் பகுதிகள்
- மனிதரால் உருவாக்கப்பட்ட நுட்பமானப் பயன்பாடுடைய நிலப்பகுதிகள் (மருத்துவமனை/ பள்ளிகள்/வழிபாட்டுத் தலங்கள்/ சமூக உள்ளமைப்பு வசதிகள்)
- மிகவும் தரம் வாய்ந்த அரிதான வளங்கள் உள்ள முக்கியமானப் பகுதிகள் (உ.ம் நிலத்தடி நீர் ஆதாரங்கள், நிலமட்ட ஆதாரங்கள், வனங்கள், விவசாயம், மீன்வளம், சுற்றுலாத்தளம் மற்றும் தாதுக்கள் உள்ளவை)
- ஏற்கனவே மாசுக்கு உட்படுத்தப்பட்டு சுற்றுச்சூழல் பாதிப்பு அடைந்த பகுதி. மேலும் இப்பகுதியில் நடைமுறையில் இருக்கின்ற சட்டப்பூர்வமான சுற்றுச்சூழல் தரங்கள் ஏற்கனவே மீறப்படுதல்)
- இயற்கைப் பேரழிவிற்கு நடப்பில் உள்ள திட்டமானது உட்டபடக்கூடிய பகுதி எனவே சுற்றுச்சூழல் பிரச்சனைகளைச் சந்திக்கின்ற பகுதி (உம் பூகம்பம், அமிழ்தல், நிலச்சரிவு, கடலரிப்பு, வெள்ளம், மிகுதியான அல்லது கடுமையான தட்பவெப்ப சூழல்)

## முன்மொழியப்பட்டுள்ள நிபந்தனைகள் / வரையறைகள்

இதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட பிரமாண வாக்குமூலம் பெறப்படவேண்டும்.

விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் மற்றும் தகவல்கள், இணைப்புகள் அனைத்தும் எனது அறிவுக்கெட்டிய வரையும், என்னுடைய நம்பிக்கையின்படியும் உண்மையானது என்று உத்திரவாதம் அளிக்கின்றேன். மேலும் நான் கொடுத்துள்ள புள்ளிவிவரங்கள்

அல்லது சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் ஏதாவது தவறாக இருப்பினும் தவறான எண்ணத்தை தோற்றுவித்தாலும், திட்டத்திற்கு அனுமதி ஒருவேளை கொடுக்கப்பட்டிருந்தால், அது திரும்பப்பெறப்படுவதுடன் இத்திட்டம் தள்ளுபடி செய்யப்படும் என்பதை அறிந்திருக்கிறேன்.

தேதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

இடம் பெயர் மற்றும் முகவரியை சமர்ப்பிக்கவும்

**குறிப்பு:**

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை **1991** கீழ் அனுமதி பெறவேண்டியத் திட்டங்களுக்கு கீழ்க்கண்டவை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்:

1. ToRஐ பெறும்போது கடலோர ஒழுங்குமுறை மண்டலங்களில் நடைபெறவிருக்கும் திட்ட செயல்பாடுகள், அதிகாரப்பூர்வமான நிறுவனத்தினால், கடலோர ஒழுங்கு முறை மண்டல வரைபடத்தில் குறிக்கப்பட்டு இணைக்கப்பட வேண்டும்
2. சுற்றுச்சூழல் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பே, மாநில கடலோர ஒழுங்குமுறை மண்டல நிர்வாக அதிகாரத்துவ அமைப்பின் பரிந்துரைகள் இணைக்கப்படவேண்டும்
3. உயிரியல் மண்டல ஒதுக்குப்பகுதிகள், புலம்பெயரும் வன மிருகங்கள் நடமாடும் இடங்கள், தேசிய பூங்காக்கள், சரணாலயங்கள் ஆகிய சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளிலிருந்துப் பத்து கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் திட்டம் செயல்பட இருந்தால், கீழ்க்கண்டவை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

   a. வனவிலங்கு பாதுகாப்பு தலைமை பாதுகாவலரால் சான்றளிக்கப்பட்ட, திட்டம் அமைந்துள்ள இடம் குறித்த தகவல் மற்றும் அந்தப் பகுதியின் முக்கியத்துவம் பற்றிய குறிப்புடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

   b. வனவிலங்கு பாதுகாப்பு தலைமை பாதுகாவலரின் பரிந்துரைகள் இணைக்கப்பட வேண்டும்.

## இணைப்பு (ஆ)

# செயல் வரம்பு படிவம் (Terms or Reference - ToR)

1. அமைவிடத்தில் எதிர்கால வாய்ப்புடைய நீண்ட காலத் திட்டம் பற்றிய தொலைநோக்கு ஆவணம் இருப்பின், அது முழுமையாக எழுதப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. இந்த திட்டத்திற்கு முந்தைய செயல்பாட்டின் போது, சுற்றுச்சூழல் தாக்க அறிவிக்கை மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கையில் கீழ் ஒப்புதல் பெறுவதற்காக, வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் கடைபிடிக்கப்படுவதன் தற்போதைய நிலை குறித்த தகவல், சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. ஒப்புதல் பெறப்பட்டஅமைவிடத்தின், சமீபத்திய புகைப்படமும், திட்டத்தின் செயலாக்க சுருக்கமும் (பொருத்தமான விபரங்களுடன்) அளிக்கப்பட வேண்டும்.
4. பொது மக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் போது எழுப்பப்பட்டப் பிரச்சனைகளுக்கு அளிக்கப்பட்ட பதிலுரைகளும், திட்டம் குறித்து எழுத்துப்பூர்வமாக கேள்வி எழுப்பப்பட்டிருப்பின், அதற்கான பதிலுரையும், இது தொடர்பான கால நிர்ணயத்துடன் கூடிய செயல் திட்டத்தையும், அதை நிவர்த்தி செய்யும் விதமாக, ஒவ்வொரு செயல் திட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதியையும், அட்டவணையாகத் தரப்பட வேண்டும்.
5. திட்ட எல்லைப்பகுதிக்குள் உள்ள கட்டிடங்களின் மேற்கூரையிலும், இதரப் பகுதிகளிலும் சூரிய ஒளியை மின்சக்தியாக தயாரிப்பதற்காக திட்டத்தை வகுப்பதுடன், அது நடைமுறைப்பட்டிருப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த தற்போதைய நிலை குறித்த அறிக்கையும், அமைச்சகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட அமைவிடத்தின் ஒருங்கிணைப்பு புள்ளிகளும் (coordinates) (சாம்பல் ஏரியின் இருப்பிடம் உட்பட) அமைவிடம் உள்ள இடவியல்பு விளக்கப்படம், (1:50,000 அளவு) திட்ட எல்லை குறித்த GPS அளவுகள்,(உலக வரைபடத்தில் இந்த இடம் குறிக்கப்பட்டுள்ள விபரம் மற்றும் தூரம்) பகுதியின் துணைகோள்வரைபடம் மற்றும் சாம்பல் ஏரிக்கும் நீர் நிலையின் (ஆற்றின்) உயரமுத்த கோட்டிற்கும் உள்ள தூரத்தையும், திட்ட அமைவிடம் கடல் மட்டத்திலிருந்து எந்த அளவிற்கு மேட்டில் உள்ளது என்பதும், (அமைவிடம் நீர்நிலைக்கு அருகில் இருக்கும்பட்சத்தில்) குறிப்பிடப்பட வேண்டும்.
7. திட்டத்தின் மொத்த நிலப்பகுதி, சாம்பல் ஏரி, பசுமை வேலிக்கானப் பகுதி, உள்கட்டமைப்பு, சாலை ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டத்தின் மனைத்திட்ட வரைபடம் அளிக்கப்பட வேண்டும்.
8. திட்டத்தின் நிலத் தேவையானது, அந்ததந்த காலகட்டத்தில், மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட அளவை தாண்டாமல் ஏற்றுக்கொள்ளப்படும். (தேவைகளின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட கூறுகளை உடைய) நிலத் தேவை குறித்த விளக்கம் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட மனைத்திட்ட வரைபடம் (சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவால் மாற்றியமைக்கப்பட்ட) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
9. வருவாய்த்துறை ஆவணங்களின்படி, எந்தவித வில்லங்கமும் இல்லாமல், திட்ட அமைவிடம் உள்ளதா என்றும், தற்போதைய நிலப்பயன்பாடு குறித்தும் விபரங்கள் தரப்பட வேண்டும். நிலக்கரி கொண்டு செலுத்தப்படுவதற்கான நிலம் தேவைப்பட்டாலும், கடல் நீரை குடிநீராக்கும்

திட்டத்திற்கு பைப்லைன் பொருத்தப்பட வேண்டும் என்று இருந்தாலும், அந்த விபரங்கள் குறிப்பிடப்படவேண்டும்.

10. நிலம் கையகப்படுத்தப்படுவது குறித்த விபரங்கள், நிவாரணம் மற்றும் மறு சீரமைப்பு திட்டம் காலவரையறையுடன் கூடிய செயல் திட்டமானது, தெளிவாக வரையறுக்கப்பட்டு நுஜஹ அறிக்கையில் குறிப்பிடப்படவேண்டும்.

11. துணைக்கோள் உருவப்படம் அல்லது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கிய நம்பகத்தன்மை உள்ள இடவியல்பு வரைபடம் (Topo sheet) (சாக்கடை, பயிர்விபரம், நீர்நிலைகள், சதுப்புநிலம், ஆறுகள், ஓடைகள், நல்ல மற்றும் குளங்கள், அருகில் உள்ள கிராமங்கள், முகத்துவாரங்கள், அலையாத்தி காடுகள், அணைப்பகுதிகள்) இணைக்கப்பட வேண்டும்.

12. தேசிய பூங்கா, சரணாலயம், யானை, புலிகள் பாதுகாப்பு பகுதி (ஒதுக்கப்பட்ட / ஒதுக்க உள்ள) புலம் பெயர்வு பாதைகள் / வனச்சரகம் ஆகியவை திட்டத்தின் 10 கி.மீட்டர் சுற்றெல்லைக்குள் இருந்தால், திட்ட வரைபடத்தில் குறிக்கப்பட்டு வன பாதுகாப்புத் தலைமை அதிகாரியினால் உறுதி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

13. இந்திய நில அளவை அமைப்பில் திட்ட அமைவிடம் பற்றிய விளக்கப்படமானது, 1:50,000 அளவில் வரையப்பட்ட இடவியல்பு வரைபடத்துடனும், 1:25,000 அளவில் வரையப்பட்ட பெரிய அளவிலான வரைபடத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அமைவிடமானது, தாழ்பகுதியில் இருந்தால் அது எந்த அளவிற்கு பள்ளத்தில் உள்ளது, அதை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படும் பொருள், தேவைப்படும் அளவு, அப்பொருள் கிடைக்கும் இடம் மற்றும் அதற்கான போக்குவரத்து வசதிகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14. ஆய்வுக்குட்பட்ட பகுதியின் நிலப்பயன்பாடு குறித்த விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அதில், சமூக பொது வளங்கள் (மேய்ச்சல் நிலம், சமூகப் பொது நிலம், நீர் ஆதாரங்கள் போன்றவை) குறித்த விபரங்களும், அவை பாதுகாக்கப்பட்டு, நிர்வகிக்கப் படுவதற்கான செயல்திட்டம் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். மேய்ச்சல் நிலப்பகுதி, திட்டத்திற்குத் தேவைப்பட்டால், அதற்கு சமமான நிலப்பகுதி கையகப்படுத்துவது குறித்த விபரமும், அதற்கான மேம்பாட்டு நடவடிக்கை குறித்த விரிவான திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

15. திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தின் மண்வகை, கனிப்பொருளின் வரைபடம், மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமானது, கனிமங்களை, குறைவான செலவில் தோண்ட கூடிய அளவில் குவிந்திருக்கும் பகுதியில் இல்லை என்பதற்கான விபரமும் இணைக்கப்பட வேண்டும்.

16. இந்திய அரசால், தற்போது வெளியிடப்பட்டுள்ள சாம்பல் பயன்பாடு குறித்த அறிவிக்கையில் கூறியபடி, 100 சதவிகிதம், சாம்பலானது பயன்படுத்துவதற்கான திட்டம் மற்றும் அதற்கான ஒப்பந்தங்கள் / ஒப்பந்தக்காரர்களுடனான பிறப் பயன்பாட்டிற்கான ஒப்பந்தம் போன்றவை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் திட்டமானது, சாம்பலை வெளியேற்றுவது குறித்தும், கலனில் அடியில் தங்கியுள்ள சாம்பல் வெளியேற்றப்படுவது குறித்தத் திட்டமும் குறிப்பிடப்பட வேண்டும்.

17. மத்திய சுற்றுச்சூழல் அதிகார அமைப்பால், அவ்வப்போது வரையறுக்கப்படும் கட்டளைகளின்படி, திட்டத்திற்குத் தேவைப்படும் தண்ணீர் அளவும், அது மீண்டும் சமன் செய்யப்படுவதற்கான வரைபடமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தண்ணீரின் சமன்பாடு கணக்கீடு செய்யப்படும்போது, தண்ணீரின் மறுஉபயோகம், சுத்திகரிக்கப்பட்ட நீரின் மறுஉபயோகம் ஆகியவை கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதா என்பது குறித்து தகவல் தரப்பட வேண்டும்.

18. நீர் ஓட்டம் அல்லது ஓடையானது, திட்ட அமைவிடத்தின் குறுக்கே ஓடுமானால், அது தடை செய்யப்படக்கூடாது. மேலும், நீர் வடிகால்கள் மாற்றி அமைக்கப்படுமானால், மாற்று பாதையானது, அப்பகுதியின் இயற்கையான நீர் வடிகால் முறையை பாதிக்கக்கூடாது. அவ்வாறு, வடிகாலின் பாதை மாற்றப்பட்டுவிட்டால், அது குறித்த விபரமும், சம்பந்தப்பட்ட துறையின் ஒப்புதலும் தரப்படவேண்டும்.

19. திட்ட அமைவிடத்தின் எல்லைக்கும், ஆற்றுப் பாதைகள் மற்றும் ஓடைகள் இவற்றின் கரைக்கும் இடையே 500 மீட்டர் இடைவெளி இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

20. நிலஉலக நீர்நிலை குறித்த ஆய்வானது, இதற்கென அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு, நிலம் மற்றும் மேல் ஓடும் நீர்நிலைகள் ஆகியவற்றின் மீதான திட்டத்தின் தாக்கம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மேலும், தாக்க குறைப்பு நடவடிக்கைகளும், அதை நடைமுறைப்படுத்துவதற்கானக் காலக்கெடுவுடன் கூடிய செயல்திட்டமும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

21. திட்டத்திற்கு, நீர்நிலைகளில் தண்ணீர் எடுக்கும் போதும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் ஆறு / கழிமுகம் / கடலில் வெளியேற்றப்படும் போது ஏற்படும் உயிரினச் சூழல் மீதான தாக்கம் குறித்தும், குறிப்பாக மீன்வளங்களின் மீதான தாக்கம் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, EIAஅறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும். கடல் சார்ந்த தாக்கம் குறித்த ஆய்வு தேவைப்படின், தண்ணீர் எடுக்கப்படும் இடம் குறித்தும், அதன் ஆழம் குறித்தும், கழிவுநீர் திறந்த வெளியில் கடலில் கொட்டப்படும் இடம் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

22. தண்ணீர் ஆதாரம், தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் கூட தண்ணீர் தேவையைப் பெறுவது குறித்த விபரங்கள் மற்றும் தண்ணீர் எடுப்பதால் ஏற்படும் உயிரினச் சூழல் தாக்கங்கள் (மாநிலங்களுக்கிடையே நீர் பகிர்மானம் இருப்பின் அது குறிப்பிடப்பட வேண்டும்) பற்றியத்தகவல்கள் தரப்பட வேண்டும். மேலும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளத் திட்டத்தின் கீழ், திட்ட அமைவிடப் பகுதியில் போட்டியில் இருக்கும் தண்ணீர் ஆதாரங்கள் பற்றிய தகவல்கள் தரப்பட வேண்டும். திட்டத்தின் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான உறுதியை, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிடம் பெற்று, அதற்கான ஆதார ஆவணத்தை / கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

23. மழைநீர் சேகரிப்பதற்கான விரிவானத் திட்டம் மற்றும் அதை பயன்படுத்துவதற்கானத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

24. மின்சக்தியானது 'பூஜ்ய அளவு கூடவீணாகாது' என்ற கருத்தியலானது, விமர்சனபூர்வமாக பரிசீலனை செய்யப்பட்ட விபரம் தரப்பட வேண்டும்.

25. பொது வளங்கள் பராமரிப்பும் (conservation of commons) இதர நீர் சேகரிப்பு முறைகளும் குறிப்பிடப்பட வேண்டும்.

26. சாம்பல் தொட்டியிலிருக்கும் தண்ணீர், மறு உபயோகம் செய்வதற்கானத் திட்டம் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் செயல்திட்டம் குறித்த தகவல் தரப்பட வேண்டும்.

27. உபயோகிக்கும் தண்ணீரின் தரம், முறையாக கண்காணிக்கப்படுவதற்கான விரிவான திட்டம் மற்றும் அதை ஆவணமாக்கும் திட்டமும், வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். வழிமுறை குறித்த விபரங்களும், திட்டத்திற்கும், கழிவுநீர் வெளியேற்றப் பாதைக்கும் இடையே நிலத்தடி நீரின் நீரோட்ட பாதைக்கு இணையான கண்காணிப்பு இடங்களைத் தேர்வு செய்து, அது

குறித்த தகவல்கள் தரப்பட வேண்டும். கண்காணிப்பு அளவீடுகளில் ஒன்றாக தண்ணீரில் காணப்படும் கனரக உலோகங்கள் குறித்தும் தகவல் வேண்டும்.

28. திட்ட அமைவிடத்திலிருந்து, 10கி.மீட்டர் சுற்றளவிற்கு உள்ள பகுதியின் சமூக பொருளாதார ஆய்வானது, நம்பகமான நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுவதுடன், அந்த ஆய்வில் அனல் மின்உற்பத்தி திட்டமானது, உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்த மதிப்பீடும் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

29. உள்ளூர் இளைஞர்களை அடையாளங்காணப்பட்டு, திட்டத்துடன் தொடர்புடைய திறன்களில் பயிற்சி அளிக்கவும், பின்னர் திட்டத்திலேயே வேலை வாய்ப்பு அளிக்கவும், ஒரு செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். மற்றும் கட்டுமானப் பணிகளின்போதும், திட்டம் செயல்படும்போதும் பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கை குறிப்பிடப்பட வேண்டும்.

30. திட்டம், பழங்குடியின மக்களைக் கொண்ட அமைவித்தில் இருப்பின், பழங்குடியினர் உரிமைகள் நன்கு பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். அதன்படி, திட்டத்தின் சார்பாளர்கள் அந்த நிலத்தின் / பகுதியின் சட்டங்களின் வெவ்வேறு பிரிவுகளுக்கேற்ப பழங்குடி மக்களின் பிரச்சனைகளைக் கண்டறிய வேண்டும்.

31. ஒரு விரிவான கார்பரேட் சமூக பொறுப்பு (CSR) திட்டத்துடன் தனித்தனியாக நடவடிக்கைகளுக்கேற்ப நிதி ஒதுக்கீடு தயாரிக்கப்பட வேண்டும். தேவையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வின் பரிசீலனையின் அடிப்படையில் ஊளுசு அம்சம் அடையாளங் காணப்படவேண்டும். சமூகத்தின் ஏழை மக்களை உயர்த்தி விடுவதற்கு உதவுவதற்கு, நிலைத்த வருமானகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அவை மக்களின் பாரம்பரிய திறன்களின் ஒத்திசைவுடன் மேற்கொள்ள வேண்டும். சமூகத்தின் வளர்ச்சி நடவடிக்கைகளுக்கு, நிதியும், தனிநபர் வருமானத்திற்கான வழிவகை செய்யும் திட்டங்களும் குறிப்பிடப்பட வேண்டும்.

32. கார்பரேட் சமூக பொறுப்பு திட்டங்களை உருவாக்கும்போது, இத்திட்டங்களை கண்காணிப்பதற்கான ஒரு அமைப்பு முறையை உள்ளார்ந்து உருவாக்கப்படுவதும், அப்பகுதியில் பிரபலமான அரசு நிறுவனத்தின் மூலமாக ஆண்டுதோறும் சமூக தணிக்கை செய்வதற்கான அமைப்பு ஒன்றையும் உருவாக்கிட வேண்டும். திட்ட சார்பாளர், திட்டங்களின் அமலாக்க நிலை குறித்து ஒவ்வொரு காலந்தோறும் அறிவதற்கும், அத்துடன் பொருந்திவரும் அரசு திட்டங்களுக்கும், செயல்திட்டம் ஒன்றையும் அளிக்க வேண்டும். திட்ட விரிவாக்கத்தின் போது, கடந்த காலத்தில் கார்பரேட் சமூக பொறுப்பு திட்டத்திற்கான விபரங்கள் தெளிவாகக் கூறப்பட வேண்டும்.

33. R&R திட்டம் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம் எங்கு பொருந்துகிறதோ, அங்கு பாதிக்கப்பட வாய்ப்புள்ள மக்களின் உரிமைகள் மற்றும் பகுதியின் வாழ்வாதார உரிமைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். R&R திட்டம், சமூக பொருளாதார கணக்கெடுப்புகளின் அடிப்படையில் மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும். இக்கணக்கெடுப்பு திட்ட அமைவிடத்திலுள்ள நிலத்தைச் சார்ந்து வாழும் மக்களையும், அந்நிலங்களின் உடமையாளர்கள் அல்லாதவர்களையும், உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

34. சுற்றுச்சூழலை மையமாகக் கொண்ட வேலையில் தொற்றுநோய்கள் குறித்த ஆய்வும் அந்நோய்களை குறைப்பதற்கான செயல்திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும்.

35. தொழிலாளர்களுக்கான வேலைக்கான ஆரோக்யமும், பாதுகாப்பு நடவடிக்கைகளும், தொழிலுடன் சார்ந்த ஆரோக்கிய கேடுகளும் அடையாளங்காணப்படுவது உள்ளிட்டு, அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். நிறுவனமானது, வேலைக்கான சுகாதாரம் குறித்து பயிற்சி பெற்ற தகுதியான முழுநேர மருத்துவரைப் பணியில் அமர்த்த வேண்டும். தொழிலாளர்களின் ஆரோக்யமானது கண்காணிக்கப்படுவதும், ஆரோக்யம் குறித்த ஆவணங்களும் பராமரிக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள், ஆரோக்யத்திற்கு சாதகமற்ற சூழலில் பணிபுரிவதால், அது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொழிலாளர்களுக்கு நடத்தப்பட வேண்டும். தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு கருவிகளைப் பயன்படுத்துவதும், அவை அளிக்கப்படுவது உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இரண்டு ஆண்டுகால இடைவெளியில், மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு சுகாதார நடவடிக்கைகள், தாக்கம் குறித்து மீளாய்வும், அத்துடன் சிறப்பான செயல்திட்டமும் தேவைப்படும் இடங்களில் அமல்படுத்தப்பட வேண்டும்.

36. MoEF 16.1.2009 தேதியிட்ட அறிவிப்பாணையின்படி, ஒரு முழுமையான பருவத்தின் குறிப்பான வானிலை மற்றும் திட்ட அமைவிடத்தைச் சுற்றியுள்ள காற்றின் தரம் பற்றியும் **(AAQ)** (மழைகாலம் தவிர்த்து) விபரம் சேகரிக்கப்பட வேண்டும். கண்காணிக்கப்படும் தேதிகள் பதிவு செய்யப்பட வேண்டும். AAQ சேகரிப்பதற்கான அளவீடுகளில் SPM, RSPM (PM10, PM2.5) சல்பர்2, நைட்ரஸ் ஆக்சைடு, ஹைட்ரஜன் மற்றுமு ஆக்சைடு 3 (தரை மட்டத்தில்) உள்ளடங்கும். கண்காணிப்பு நிலையங்கள் அமைந்திருக்கும் இடங்கள் குறித்து முடிவெடுக்கும்போது, கீழ்நோக்கிய காற்றின் வழி, மக்கள் தொகை மண்டலம், அருகிலுள்ள கிராமங்கள், ஒதுக்கப்பட்ட வனங்கள் உட்பட நுட்பமான உள்வாங்கும் சூழல் அமைப்புகள் ஆகியவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். மேல்நோக்கிய காற்று, கீழ் நோக்கிய காற்று ஆகிய ஒவ்வொன்றுக்கும், தனித்தனியாக குறைந்தபட்சம் ஒரு கண்காணிப்பு நிலையமாவது இருக்க வேண்டும். அங்கு தரைமட்டத்தின் மீது, அதிகபட்ச கவனம் செலுத்தும்படி இருக்க வேண்டும்.

37. முன்மொழியப்பட்டுள்ள ஆய்வுப்பகுதியில் ஏற்கனவே இருக்கின்ற தொழிற்சாலைகள் மற்றும் புதிதாக வர இருப்பவை குறித்த பட்டியல் தரப்பட வேண்டும்.

38. **(AAQ)** திட்ட அமைவிடத்தைச் சுற்றியுள்ள காற்றின் தரம் பற்றியும் பகுதியின் கழிவுகளின் வெளியேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் (போக்குவரத்து உள்ளிட்டு) நன்றாக மதிப்பிடப்பட வேண்டும். பயன்படுத்தப்பட்ட மாதிரி குறித்த விபரங்கள் மற்றும் மாதிரிக்கு பயன்படுத்தப்பட்ட இடுபொருள் விபரங்களும் அளிக்கப்பட வேண்டும். இட அமைவு குறித்த வரைபடத்தில், திட்ட அமைவிடம் அருகிலுள்ள குடியிருப்பு, நுட்பமான உள்வாங்குபவை வேறு ஏதாயினும் இருப்பின், அவற்றின் இருப்பிடங்கள், தரமான எல்லைக் கோடுகளால் பிரித்துக் கண்காணிக்கப்பட வேண்டும். காற்றுக்கான வழித்தடங்களில் இளஞ்செந்நிறத்தில் திட்ட அமைவிடத்தில் காட்டப்பட்டிருக்க வேண்டும்.

39. பரிசோதனைக்கூட ஆய்வு அறிக்கைகளுடன், நிலக்கரியின் கதிரியக்கம் மற்றும் கன உலோகப் பொருட்களின் மூலம் ஆராயப்பட்டு, அவையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

40. எரிபொருள் பகுப்பாய்வும் அளிக்கப்பட வேண்டும். துணை எரிபொருள் ஏதேனும் இருப்பின், அவற்றின் அளவு, தரம், சேமிப்பு மற்றும் இதர விசயங்களும் அளிக்கப்பட வேண்டும்.

41. தேவைப்படும் எரிபொருளின் அளவு, அதனுடைய மூலாதாரப் பண்புகள் மற்றும் எரிபொருள் கிடைப்பதற்கான உறுதிப்படுத்தப்பட்ட இணைப்பிற்கான ஆவணச் சான்றும் அளிக்கப்பட வேண்டும்.

42. எரிபொருள், அது கிடைக்கின்ற மூலாதாரத்திலிருந்து முன் வைக்கப்படும் திட்டம் வரை போக்குவரத்திற்கான விபரங்களும் (துறைமுகத்தில் கையாளப்படுவது உள்ளிட்டு) சுற்றியுள்ள காற்றின் தரத்தின் மீதான தாக்கமும், தகுந்த முறையில் மதிப்பிடப்பட்டு, சமர்ப்பிக்கப்பட வேண்டும். போக்குவரத்து நீண்ட தூரமாக இருக்கும்பட்சத்தில், திட்ட அமைவிடத்திற்கான இரயில் போக்குவரத்து முதலாக மதிப்பிடப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். சரக்கு வண்டியில் ஏற்றிச் செல்வது சைலோ (silo) அல்லது சரக்கைக் கொண்டு செல்ல உதவும் வார் அல்லது தோல்பட்டை மூலமாக கொண்டு செல்வது விரும்பத்தக்கது.

43. நிலக்கரி இறக்குமதியை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களாக இருந்தால், அதன் உள்நாட்டு போக்குவரத்து, துறைமுகக் கையாள்தல், சுழற்சி முறையில் இருப்புகள் வைத்துக் கொள்வது அல்லது இரயிலில் கொண்டுசெல்வதில் உள்ள தடங்கள் ஆகியவை கடுமையாக பரிசீலிக்கப்பட்டு அதன் தகவல்கள் அளிக்கப்பட வேண்டும்.

44. சுகாதாரம், எரிபொருள், ஓய்வு அறைகள், மருத்துவ வசதிகள், கட்டுமானப் பணியின் போது பாதுகாப்பு மற்றும் இதர விசயங்கள் தொழிலாளர்களுக்கு கட்டிடப் பணியின் போதும், சரக்கு வண்டி ஓட்டுநர்கள் உட்பட தற்காலிக தொழிலாளர்களுக்குத் திட்டம் செயல்படும்போதும் போதுமான அளவு உணவு வழங்குதல் மற்றும் விபரங்கள் அளிக்கப்பட வேண்டும்.

45. சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டமானது, திட்டத்தினால் ஏற்படும் மோசமான விளைவுகளைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விசயமாகக் குறிப்பிட்ட கால வரையறையில் தனித்தனியாக அதனை அமல்படுத்தும் செலவுடன் குறிப்பிட வேண்டும்.

46. ஒரு பேரிடர் மேலாண்மைத் திட்டத்தில், எரிபொருள் இருப்பாக சேமித்து வைப்பதாலும், பயன்படுத்துவதாலும், தீப்பிடிப்பதற்கும், வெடிப்பதற்குமான வாய்ப்புகள் போன்ற பிரச்சனைகள் உள்ளடக்கிய அபாய மதிப்பீடு ஆய்வும் மேற்கொள்ளப்பட வேண்டும். அது ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிகபட்சமாக மேற்கொள்ளக்கூடிய இருப்பும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். திட்டத்தின் (லே அவுட்) வரைபடத்தில் அபாய பகுதிகளுக்கான எல்லைக்கோடுகள் குறிப்பிட்டு, ஒரு விபத்து நிகழும் பட்சத்தில், எந்தவிதமான திட்டமிடப்படும் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்பதும், வரைபடத்தில் தெளிவாக காண்பிக்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில், பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தீவிபத்து போன்ற அபாயங்களுக்கெதிரானப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

47. உருவாக்கப்பட்ட பேரிடர் மேலாண்மை திட்டத்தில், சுனாமி, சூறாவளிகள், புயல்கள், பூகம்பங்கள் மற்றும் இதர பேரிடர்களில் எது பொருந்துகிறதோ, அதற்கேற்ப பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளடக்கி இருக்க வேண்டும். பேரிடர் மேலாண்மைத் திட்டத்தில், திட்ட அமைவிடம், அமைவிடமில்லாத இடத்திற்கான திட்டம், பேரிடர் ஏற்படும் பட்சத்தில் அப்பணிகளை, நிறைவேற்றுவதற்கான ஊழியர்களை அடையாளங் காண்பது உள்ளிட்ட தகவல்கள் இடம் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். திட்டத்தின் சுருக்க வடிவம் ஆங்கிலத்திலும் மற்றும் உள்ளூர் மொழிகளிலும், இடம் பெற வேண்டும்.

48. பூர்வீக தாவர இனங்களைக் கொண்டு போதுமான அகலத்தில் (50லிருந்து 100 மீட்டர் வரை) பசுமை பூங்காவை வளர்க்க வேண்டும். திட்டத்தின் எல்லையைச் சுற்றி மூன்று அடுக்கு உள்ளதாக ஒரு ஹெக்டேருக்கு 2000லிருந்து 2500 மரங்களை அடர்த்தியாக சில சாத்தியமில்லாத பகுதிகள் நீங்கலாக வளர்க்க வேண்டும். அதன் உயிர் வாழும் தன்மை 80

விழுக்காடு வரை உறுதிப்படுத்தப்பட வேண்டும். NRSA அறிக்கைகள் உள்ளிட்டு புகைப்பட சான்றுகள் உருவாக்கப்பட்டு, அவை குறிப்பிட்ட காலந்தோறும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

49. கார்பன் டை ஆக்சைடை ஈர்க்கும், கார்பன் தொட்டிகள் போன்று செயல்படத் தக்கதாக, பசுமை பூங்கா தளத்துடன், மேலும் கூடுதலாக, அடையாளங் காணப்பட்ட சீரழிந்துவரும் வனங்களில் செடிகள், மரங்கள் நடுவது, மாவட்ட வனத்துறையிடம் ஆலோசித்து மேற்கொள்ள வேண்டும். இதன் தொடர்ச்சியாக, திட்டத்தின் சார்பாளர் கால வரையறையுடன், நிதி ஒதுக்கீடு கொண்ட ஒரு செயல்திட்டத்தை உருவாக்கி, அதன் அமலாக்க நிலையை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அமைப்பதற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

50. நிறுவன (கார்ப்பரேட்) சுற்றுச்சூழல் கொள்கை

   a. கம்பெனியிடம், திட்ட இயக்குநர்களைக் கொண்ட மேலாண்மை அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட, நன்கு திட்டமிடப்பட்ட சுற்றுச்சூழல் கொள்கை உள்ளதா? இருக்கின்றதென்றால், EIAஅறிக்கையில் அது விரிவாகக் கூறப்பட வேண்டும்

   b. சுற்றுச்சூழல் கொள்கை தரமான இயங்கு நடவடிக்கைகளைக் கொண்டுள்ளதா? அதன் முறைகள் சுற்றுச்சூழல் அல்லது வனங்களின் விதிகள் பாதிக்கப்பட்டதையோ, விலகியதையோ அல்லது மீறல்களையோ கவனத்தில் கொண்டு வருகிறதா? அப்படி இருந்தால், அவை EIAயில் விரிவாக கூறப்பட வேண்டும்.

   c. நிறுவனத்தின் அதிகார அமைப்பு அல்லது நிர்வாக அமைப்பு, சுற்றுச்சூழல் பிரச்சனைகளைச் சமாளிக்கும்படியும் சுற்றுச்சூழல் அனுமதியில் உள்ள நிபந்தனைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்வதாகவும் உள்ளதா? என்பது குறித்த அமைப்பின் விவரங்கள் அளிக்கப்படல் வேண்டும்.

   d. கம்பெனியின் மேலாண்மை அமைப்பின் இயக்குநர்கள் அல்லது பங்குதாரர்கள் அல்லது பொதுவில் நிறுவனத்திற்கு தொடர்புடையவர்களுக்குச் சுற்றுச்சூழல் விதிகளைப் பின்பற்றாததையும், மீறல்களையும் அறிவிக்கக்கூடிய முறை கம்பெனியிடம் உள்ளதா? இப்படிப்பட்ட அறிவிக்கும் அமைப்பு முறை EIA அறிக்கையில் விரிவாக கூறப்பட வேண்டும்.

51. மேலே கூறப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் EIAஅறிக்கையில் போதுமான அளவில் கூறப்பட்டு, கமிட்டியிடம் முன் வைப்பதில் சேர்க்கப்பட வேண்டும்.

52. எந்த நீதிமன்றத்திலாவது, தீர்ப்பாயத்திலாவது வழக்குகள் நிலுவையில் இருக்கும் விபரங்கள் அல்லது திட்டம் தொடர்பான வழக்குகள் அறிவிக்கப்பட வேண்டும்.

**கடற்கரையை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையங்களுக்கான கூடுதல் செயல்வரம்பு (ToR)**

மேலே குறிப்பிட்டுள்ள பொதுவான நிபந்தனைகளுடன், கூடுதல் நிபந்தனைகளாக கீழ்க்கண்டவை கட்டாயமாகப் பின்பற்றப்பட வேண்டும் (பொருந்தும் இடங்களில்)

1. இராம்சார் உடன்படிக்கையின்படி சதுப்பு நிலத்திற்கான வரையறை உள்ள தாழ்வானப் பகுதிகள் அடையாளங் காணப்பட்டு தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும்.

2. திட்டம் அமையவுள்ள இடம் சதுப்புநிலங்கள், பிண்ணனி நீர்ப்பரப்பு அருகில் இருந்தால் இப்பகுதிகளிலிருந்துத் திட்ட அமைவிடம் மாற்றப்பட வேண்டும். திட்ட எல்லை CRZ உயர்மட்ட

கோட்டிலிருந்து தள்ளி இருக்க வேண்டும். அதிகாரபூர்வமான நிறுவனத்தினால் CRZ வரைபடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. மண்ணைச் சமன்படுத்துவது, பகுதியின் இயற்கையான வடிகால் அமைப்பிற்குக் குறைந்த அல்லது எந்த இடையூறும் இல்லாதவாறு மேற்கொள்ள வேண்டும். சிறு கால்வாய்கள் (ஏதும் இருப்பின்,திசை திருப்பிவிடப்படுவதாக இருந்தால் அப்படி திருப்பி விடப்படும் திட்டமானது, திட்ட அமைவிடத்தை காய்ந்து போகச் செய்வது மட்டுமன்றி, அருகிலுள்ள பகுதிகளிலிருந்து வெள்ள நீரை சேகரித்துக் கொண்டு கழிமுகத்தில் நுழையும் பெரிய கால்வாய்கள்) அல்லது சதுப்புநில பகுதிக்குள் விடப்பட வேண்டும். பெரிய கால்வாய்கள் மாற்றப்படக்கூடாது. ஆனால் அவற்றின் குளங்கள் வலிமைப்படுத்தப்பட்டு தூர்வாரப்பட வேண்டும்.

4. திட்ட அமைவிடங்களுக்கு சமன்படுத்துவதற்காக, சாத்தியமான வரையில், கூடுதல் மண் நிரப்பப்பட வேண்டும். இயற்கையான வடிகால் அமைப்பினை பாதுகாப்பதாகவும், மேம்படுத்துவதாக இருக்கும்படியாக வழிவகை செய்ய வேண்டும்.

5. பெரிய அளவிலான வெள்ளநீரை தாங்கி நிற்கும் சதுப்புநிலப்பகுதிகள் அடையாளங் காணப்பட்டு, திட்டத்திலிருந்து விலக்கப்பட வேண்டும்.

6. கழிமுகம், கால்வாய் அமைப்புகள், பிண்ணனி நீர்பரப்புகள், சதுப்பு நிலப்பகுதிகள், கடல்கள் ஆகியவற்றுக்குள் முறையான சுத்திகரிப்பு எந்த கழிவும் விடக்கூடாது. வெளிவிடக்கூடியவை முதலில் ஒரு பாதுகாப்பிற்காக கட்டப்பட்ட குளத்தில் வைத்து சுத்திகரிக்கப்பட்டு (எங்கு சாத்தியப்படுகிறதோ அங்கு மேற்கொள்ளலாம்) பின்னர் ஆழ்கடலில் (10லிருந்து 15 மீட்டர் வரை) விடப்பட வேண்டும். அதேபோல மீன்களையும் சேர்த்து எடுப்பதை தவிர்க்க, நீர் எடுத்துக் கொள்வது ஆழ்கடலிலிருந்து மேற்கொள்ள வேண்டும். எந்த முறையிலும் முகத்துவாரப் பகுதியிலிருந்து எடுத்துக் கொள்ளக்கூடாது. கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்களிலிருந்துச் வெளிவிடப்படும் உவர்நீர் போதுமான முறையில், நீர்த்து போகச் செய்யாமல் கடலில் விடக்கூடாது.

7. அப்பகுதியில் அலையாத்திக் காடுகள் இருந்தால், அலையாத்திக் காடுகளின் பராமரிப்பு மற்றும் மறுஉற்பத்தி திட்டமானது உருவாக்கப்பட வேண்டும். கால வரம்புடன் அமல்படுத்துவதற்கான விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

8. பொது பசுமை கொடைநிதி ஒன்று திட்டத்தின் சார்பாளர்களால், சுற்றுச்சூழல் மேலாண்மை நிதி ஒதுக்கீடுகளிலிருந்து உருவாக்கப்படவேண்டும். இதிலிருந்து கிடைக்கும் வட்டியானது, வளர்ச்சிக்கும், அப்பகுதியினை பசுமையாக்கி மேலாண்மை செய்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

9. மீன்களின் மீதான தாக்கமானது, பல்வேறு சமூகப் பொருளாதார மட்டங்களில் மதிப்பிடப்பட வேண்டும்.

10. மீனவர்களின் நல நிதிக்கான அறக்கட்டளை ஒன்று, நிறுவன சமூகப் பொறுப்பு நிதிகளிலிருந்து உருவாக்கப்பட்ட வேண்டும். மீன் பிடிப்பதற்கான வசதிகளான மீன் பிடி இறங்கு தளங்கள், மீன்பிடி துறைமுகங்கள், மீனை சேகரித்து வைத்திட குளிர் சாதன பெட்டிகள், போன்றவற்றை உருவாக்குவதன் மூலமாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடுவது மட்டுமன்றி, கடல் சீற்றம், சூறாவளிகள் மற்றும் புயல்கள் போன்ற நெருக்கடி நிலைமைகளில், மீனவர்களுக்கு நிவாரணம் அளிப்பதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

11. சுனாமி நெருக்கடி மேலாண்மைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். கட்டுமானப் பணித் தொடங்குவதற்கு முன்னரே திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. திட்டம் அமைவிடத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், நிலத்தின் தரை மற்றும் மேற்பரப்பிலுள்ள நீர் (கால்வாய்கள் மற்றும் கிராமத்தின் குளம்) ஆகியவை கடல்நீருடன் கலப்படமாகக் கூடாது. இன்னொரு வார்த்தைகளில் கூறவேண்டுமானால், குழாய்களிலிருந்து கசிவுகள் ஏற்படுவதை தடுப்பதற்கான அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கடலுக்குள் விடப்படும் முன்னர், வெளியேற்றப்படும் கழிவைச் சுத்திகரிப்பதற்கு பயன்படும் பாதுகாப்பு குளத்தினைச் சுற்றி கோடு போடவேண்டும். வெளியிடப்படும் கால்வாய்களை, RRC கால்வாய்கள் அமைக்கப்பட வேண்டும். ஏனெனில், திட்டங்களைச் சுற்றியுள்ள நிலங்கள் நெல் பயிரிடுவதற்கான வளமான விவசாய நிலங்களாக உள்ளன.

# இணைப்பு (இ)

## சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடு தொகுப்பு படிவம்

| EIA அமைப்பு | உள்ளடக்கம் |
|---|---|
| அறிமுகம் | 1. அறிக்கையின் நோக்கம்<br>2. திட்டத்தை அடையாளம் காணுதல் மற்றும் திட்டத்தை முன்மொழிபவர் / விண்ணப்பதாரர்<br>3. திட்டம் குறித்த சுருக்கமான விளக்கம்–இயல்பு தன்மை, அளவு, அமைவிடம், நாடு அல்லது அமைவிடம் பகுதிக்கு இத்திட்டத்தினால் வரும் முக்கியத்துவம்<br>4. ஆய்வின் நோக்கம் (ToR கடிதத்தின்படி) |
| திட்டம் குறித்த விளக்கம் | 1. சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தும் சாத்தியங்கள் திட்டத்தின் பண்புகூறுகள் (aspects) குறித்த விளக்கம்<br>2. கீழ்க்கண்டவை குறித்த தெளிவான வர்ணனையுடன் கூடிய விபரங்கள்<br>a. வகை<br>b. தேவை<br>c. வட்டார அமைவிடம் (அமைவிடம் குறித்த வரைபடம், திட்ட எல்லை, மனைத்திட்ட அமைப்பு<br>d. செயல்பாட்டு முறை<br>e. ஒப்புதல் மற்றும் நடைமுறைக்கு முன்மொழியப்பட்டுள்ள கால அளவு<br>f. தொழில்நுட்பம் மற்றும் நடைமுறை<br>3. திட்ட விளக்கம் (திட்ட அமைப்பு குறித்த வரைபடம்)<br>4. திட்ட ரீதியானப் பிரதிநிதிதுவங்கள் (EIA நோக்கத்திற்கான முக்கியத்துவங்களை அளிக்கும் சாத்தியப்பாட்டு வரைபடத்தை உள்ளடக்கியது<br>5. தாக்க குறைப்பு நடவடிக்கைகள், சுற்றுச்சூழல் தரங்கள் மற்றும் EIAக்கான தேவைகள் |
| சுற்றுச்சூழல் குறித்த விளக்கம் | 1. ஆய்வுக்கு உட்படுத்தப்படும் இடம்<br>2. கால அளவு<br>3. திட்டத்தின் ஆக்கக்கூறுகள் மற்றும் ஆய்வுமுறை<br>4. நோக்கத்தில் கூறுகளுக்காக காணப்பட்டுள்ள மதிப்பு வாய்ந்த சுற்றுச்சூழல் எல்லைக் கோடு உருவாக்கம்<br>5. அனைத்து சுற்றுச்சூழல் கூறுகளுக்கான அடிப்படை வரைப்படம் |
| மாற்றுக்கள் குறித்த ஆய்வு (தொழில்நுட்பம் மற்றும் திட்ட அமைவிடம் சுற்றுச்சூழல் கண்காணிப்பு நடவடிக்கை | 1. ஒவ்வொரு மாற்றுத் திட்டம் குறித்த விபரங்கள் (திட்ட நோக்கத்தில் ஏற்கனவே மாற்றுக்கான தேவை குறிப்பிடப்பட்டிருப்பின்)<br>• விளக்கம்<br>• மோசமான விளைவுகளின் சுருக்கம்<br>• முன்மொழியப்பட்டுள்ள தாக்கக் குறைப்பு நடவடிக்கை<br>• மாற்றுகளைத் தேர்வு செய்தல்<br>• பயனுறுதியுள்ள கண்காணிப்பின் தொழில்நுட்ப அம்சங்கள்<br>• அளக்கும் முறைகள்<br>• எத்தனை முறை<br>• இடம்<br>• தகவல் ஆய்வு<br>• அறிக்கைக்கான கால அட்டவணை<br>• அவசரகால நடைமுறைகள்<br>• விரிவான நிதிநிலை அறிக்கை<br>• தாக்கக் குறைப்பு நடவடிக்கைகளுக்கு வேண்டியவற்றை வாங்கும் திட்டம் |

| EIA அமைப்பு | உள்ளடக்கம் |
|---|---|
| கூடுதல் ஆய்வுகள் | • பொதுக் கலந்தாய்வு<br>• அபாய மதிப்பீடு<br>• சமூக தாக்க மதிப்பீடு |
| திட்ட நன்மைகள் | • நிலவியல் மற்றும் சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள்<br>• வேலைவாய்ப்புக்கான சாத்தியங்கள் (திறன் வாய்ந்த / திறனற்ற / முழுமையான திறனற்ற) |
| சுற்றுச்சூழல் மீதான நன்மை மற்றும் நஷ்டம் குறித்த ஆய்வு | • திட்ட நோக்கத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தால் |
| சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் (EMP) | • சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கு ஒப்புதல் பெறவும், தாக்க குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் பயனுறுதியுள்ளக் கண்காணிப்புக்கான நிர்வாக நடைமுறைகள் குறித்த விளக்கம் |
| சுருக்கம் மற்றும் முடிவுரை EIA அறிக்கையின் சுருக்க உரையாக இதுஅமையும் | • திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒட்டுமொத்த நியாயங்கள்<br>• பாதிக்கும் விளைவுகளை குறைப்பது குறித்த விளக்கம் |
| கலந்தாய்வாளர்கள் பற்றிய தகவல் வெளியிடுதல் | • ஈடுபடுத்தப்பட்ட கலந்தாய்வாளர்கள் குறித்த விபரங்கள் பெயர், சுயதகவல் குறிப்பு, கலந்தாய்வின் தன்மை |

**சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கையின் செயலாக்க சுருக்கத்தின் உள்ளடக்கம்**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கையினுடைய செயலாக்கச் சுருக்கமானது, ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் சுருக்கமாகும். மொத்த அறிக்கையும் A–4 அளவு தாளில் அதிகபட்சம் 10 பக்கம் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். முழு EIA அறிக்கையின் கீழ்க்கண்ட பகுதிகள் சுருக்கமாக, கண்டிப்பாக தொகுக்கப்பட்டிருக்கும்.

1. திட்ட விளக்கம்
2. சுற்றுச்சூழல் குறித்த விளக்கம்
3. எதிர் கொள்ளவிருக்கும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் மற்றும் தாக்க குறைப்பு நடவடிக்கைகள்
4. சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டம்
5. கூடுதல் ஆய்வுகள்
6. திட்ட நன்மைகள்
7. சுற்றுச்சூழல் நிர்வாகத் திட்டம்